தஞ்சை சரசுவதி மகால் வெளியீடு எண்: 396

# தமிழ்ச் சுவடிகளின் விளக்கம்

## பதினைந்தாவது தொகுப்பு

## (மருத்துவப் பகுதி)

## தஞ்சாவூர் மகாராஜா சரபோஜியின்

## சரசுவதி மகால் நூலகம்

ஆண்டு 1998]

விலை: ரூ. 25-00

தஞ்சை சரசுவதி மகால் வெளியீடு எண்: 396

# தமிழ்ச் சுவடிகளின் விளக்கம்

## பதினைந்தாவது தொகுப்பு
**(மருத்துவப் பகுதி)**

பதிப்பாசிரியர்கள்

புலவர் ச. திலகம், பி.லிட்
தமிழ்ப் பண்டிதர்
சரசுவதி மகால் நூலகம், தஞ்சாவூர்

சிறப்புக் கேண்மைப் பதிப்பாசிரியர்

டாக்டர் ச. அரங்கராசன், B.I.M.,
சித்த மருத்துவ அலுவலர் (சிறப்பு நிலை)
அரசு மருத்துவமனை,
கந்தர்வக்கோட்டை

தஞ்சாவூர் மகாராஜா சரபோஜியின்

சரசுவதி மகால் நூலகம்

ஆண்டு 1998]

விலை: ரூ. 25-00

# நூற்பதிப்பு விளக்கக் குறிப்பு


| | | |
|---|---|---|
| நூற்பெயர் | : | தமிழ்ச் சுவடிகளின் விளக்கம் |
| பதிப்பாசிரியர்கள் | : | திருமதி. ச. திலகம், டாக்டர் ச. அரங்கராசன் |
| வெளியிடுபவர் | : | இயக்குநர், சுரசுவதி மகால் நூலகம் |
| வெளியீட்டு எண் | : | 396 |
| மொழி | : | தமிழ் |
| பதிப்பு | : | முதல் பதிப்பு |
| வெளியீட்டு நாள் | : | டிசம்பர் 1998 |
| தாள் | : | 10.9 கி.கி. சேஷசாயி |
| நூல் அளவு | : | 25×19 செ.மீ. |
| பக்கங்கள் | : | 96 |
| படிகள் | : | 500 |
| எழுத்து | : | 10 புள்ளி |
| அச்சிட்டோர் | : | கஜேந்திரா அச்சகம், சிதம்பரம். |
| புத்தகக்கட்டு | : | மெலிந்த அட்டை |
| பொருள் | : | மருத்துவச் சுவடி விளக்க அட்டவணை |
| விலை | : | ரூ. 25/= |

# வெளியீட்டாளர் முகவுரை

## தமிழ்ச் சுவடிகளின் விளக்கம்

## [பதினைந்தாம் தொகுப்பு]

### [மருத்துவப் பகுதி]

பன் மொழிச் சுவடிகளின் பாங்குறு களஞ்சியமாகச் சரசுவதி மகால் நூலகம் திகழ்கின்றது. இந்நூலகத்தில் தமிழ், சமஸ்கிருதம், மராட்டி, தெலுங்கு ஆகிய மொழிகளைச் சார்ந்த பல்லாயிரக்கணக்கான ஓலைச் சுவடிகளும், காகிதச் சுவடிகளும் இடம் பெற்றுள்ளன.

இவ்வரிய சுவடிகளுள் சிறந்தவை தேர்ந்தெடுக்கப்பெற்று நூல்களாகப் பதிப்பித்து வெளியிடப்பெற்று வருவதோடு, இந்நூலகத்தின் அனைத்துச் சுவடிகளுக்கும் சுவடி விளக்க அட்டவணைத் தொகுதிகளும் உருவாக்கப்பெற்று வெளியிடப் பெற்று வருகின்றன.

இந்நூலகத்தில் அவ்வப்போது சுவடிகள் சேரச்சேர, அவற்றுக்கு விளக்க அட்டவணைத் தொகுதிகள் உருவாக்கும் பணியும் தொடர்கின்றது.

இந்நூலகத்தின் தமிழ்த்துறையில் இடம் பெற்றுள்ள ஓலைச் சுவடிகளுக்கு இதுகாறும் பதினான்கு விளக்க அட்டவணைகள் உருவாக்கி வெளியிடப் பெற்றுள்ளன. இவற்றுள் ஐந்து நூல் இலக்கியச் சுவடிகளுக்கான அட்டவணைத் தொகுதிகளாகவும், ஒன்பது நூல் மருத்துவச் சுவடிகளுக்கான அட்டவணைத் தொகுதிகளாகவும் அமைந்துள்ளன.

தற்பொழுது தமிழ்த் துறையில் இடம் பெற்றுள்ள மருத்துவ ஓலைச் சுவடிகளுக்கான விளக்க அட்டவணைத் தொகுதியாகத் ''தமிழ்ச் சுவடிகளின் விளக்கம் — 15ஆம் தொகுதி'' எனும் இந்நூல் வெளிவருகின்றது.

இத்தொகுதியை அரிதின் முயன்று இணைந்து உருவாக்கித் தந்துள்ள இந் நூலகத் தமிழ்ப் பண்டிதர் திருமதி ச. திலகம் அவர்களுக்கும், மருத்துவர் திரு. ச. அரங்கராசன் அவர்களுக்கும் எனது பாராட்டுக்கள்.

இந்நூல் நன்முறையில் வெளிவரத் தேவையான நிதியுதவி நல்கிய மைய அரசுக்கும், இந்த நூலகத்தைச் செவ்வனே பராமரித்துவரும் மாண்புமிகு கல்வியமையமைச்சர் அவர்களுக்கும் பள்ளிக்கல்வித் துறைச் செயலாளர் திரு எம் ஏ. கௌரிசங்கர், இ.ஆ.ப., அவர்களுக்கும் எனது நன்றியை உரித்தாக்குகின்றேன்.

இந்நூல் நன்முறையில் வெளிவர ஆவன செய்துள்ள நூலக நிருவாக அலுவலர் திரு. நா. தியாகராஜன், எம்.ஏ., பி எல்., அவர்களுக்கும், வெளியீட்டு மேலாளர் திரு. அ பஞ்சநாதன், எம் ஏ., எம் எல். ஐ.எஸ். அவர்களுக்கும், இந்நூலை நன்முறையில் அச்சிட்டளித்த சிதம்பரம் கஜேந்திரா அச்சகத்தாருக்கும் எனது பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இத்தொகுதி, சுவடியியல் ஆய்வாளர்களுக்கு நன்கு பயன்படுமென நம்புகின்றேன்.

தஞ்சாவூர்
31—12—98

**து. நா. இராமநாதன்**, இ.ஆ.ப.,
மாவட்ட ஆட்சித் தலைவர்
மற்றும்
இயக்குநர்,
சரஸ்வதி மகால் நூலகம்.

# முன்னுரை

உலகப் புகழ்பெற்ற சரசுவதிமகால் நூலகத்தில் தற்பொழுது 3,780 தமிழ்ச் சுவடிகள் உள்ளன. அவற்றுள் மருத்துவச் சுவடிகள் 1697 ஆகும். பொது மக்களிட மிருந்தும் அறிஞர் பெருமக்களிடமிருந்தும் மேலும் சுவடிகளைச் சேகரிக்கும் பணி தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

இதுவரை மருத்துவச் சுவடிகளின் விளக்க அட்டவணைகள் 3, 4, 5, 8, 9, 11, 12, 13, 14ஆவது தொகுதிகளாக வெளி வந்துள்ளன. தற்போது வெளிவரும் இந்தப் பதினைந்தாவது தொகுதியில் (D/எண் 1781 — 1898) 851 — 950 வரை யிலுள்ள சுவடிகளுக்கான விவர அட்டவணைக் குறிப்புகள் உள்ளன. ஒரே சுவடியில் பல தலைப்புகள் இருப்பினும் அவற்றுக்கும் தனி எண் கொடுக்கப்பட்டு ஒவ்வொரு ஏட்டிலும் காணப்படும் விவரங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. இத்தொகுதியைத் தொடர்ந்து இன்னும் சில சுவடி விளக்க அட்டவணைத் தொகுதிகள் வெளிவர உள்ளன

இப்பதினைந்தாம் தொகுதியில் விளக்க அட்டவணை தரப்பட்டுள்ள சுவடி களில், அனுபவ வைத்திய முறைகளும், இரசவாதம், கற்பம், யோகம், மந்திரம், ஜாலங்களைக் கூறும் சாத்திரங்களும் கூறப்பட்டுள்ளன.

அரிய செய்திகளை உள்ளடக்கிக் கொண்டிருக்கும் இப்பதினைந்தாவது தொகுப்பைப் பதிப்பிக்க அனுமதி அளித்த பெருமதிப்பிற்குரிய தஞ்சை மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும், இயக்குநர் உயர்திரு. து நா. இராமநாதன், இ.ஆ.ப அவர்கட்கும், இந்நூலக நிருவாக அலுவலர் திரு.நா. தியாகராஜன் எம்.ஏ.பி.எல் அவர்களுக்கும், நூலக வெளியீட்டு மேலாளர் திரு.அ. பஞ்சநாதன் எம்.ஏ. எம்.எல்.ஐ.எஸ். அவர்கட்கும், இந்நூலை நன்முறையில் அச்சிட்டு தந்த சிதம்பரம் கஜேந்திரா அச்சகத்தாருக்கும் எனது நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தஞ்சாவூர்
31—12—98

இங்ஙனம்
திருமதி. ச. திலகம்
தமிழ்ப்பண்டிதர்,
சரசுவதிமகால் நூலகம்.

# பொருளடக்கம்


| நூற்பெயர் | D/எண். |
|---|---|
| **அ** | |
| அகத்தியர்—1500 | 1781 |
| அகத்தியர் வைத்திய ரெத்தினச் சுருக்கம் | 1783 |
| அகத்தியர் நவக்கிரகச் சுக்கிஷம் | 1786 |
| அகத்தியர் சூத்திரம்—200 | 1788 |
| அசுவ நூல் | 1796 |
| அகத்தியர் கலைக் கியானம் சூத்திரம்—200 | 1799 |
| அகத்தியர் பூசாவிதி | 1804 |
| அகத்தியர் ரெத்தினச் சுருக்கம் நாடி | 1807 |
| அகத்தியர் பரிபூரணம்—400 | 1808 |
| அகத்தியர் கர்மசூத்திரம் | 1809 |
| அகத்தியர் மூலிகை வண்ணம் | 1810 |
| அகத்தியர் கைபிடி சாத்திரம் | 1811 |
| அகத்தியர் பலதிரட்டு நாடி நிதானம் | 1812 |
| அஞ்சனமை | 1820 |
| அங்காதி பாதம் | 1858 |
| அகத்தியர் புட்ப மாலிகை | 1859 |
| அகத்தியர் கலைக்கியானம் | 1860 |
| அகத்தியர் தத்துவம்—300 | 1863 |
| அகத்தியர் பரிபூரணம்—1200 | 1864 |
| அகத்தியர் சூத்திரம்—58 | 1868 |
| அகத்தியர்—1500 | 1870 |
| அகத்தியர்—16 | 1873 |

அகத்தியர் குழம்பு—50 1878

அகத்தியர் வாதத்திறவு கோல் 1880

அகத்தியர் சாலத்திரட்டு 1881

அகத்தியர் பெருநூல் வைத்தியம் முதற் காண்டம்—300 1882

அகத்தியர் பெருநூல் வைத்தியம் 2-ம் காண்டம்—300 1883

அகத்தியர் பெருநூல் வைத்தியம் 3-ம் காண்டம்—300 1884

அகத்தியர் பெருநூல் வைத்தியம் 4-ம் காண்டம்—300 1885

அகத்தியர் வாகடச் சுருக்கம் 1888

அகத்தியர் பூரண சூத்திரம்—216 1890, 1894

அகத்தியர் வைத்தியம்—205 1895

### இ

இராமதேவர் சிவயோகம்—200 1837

இராமதேவர் பட்சணி—50 1897

இராமதேவர் சாத்திரம்—100 1895

இரச வர்க்கத் திரட்டு நூல் 1879

### க

கம்பளிச் சட்டை கயிலாசநாதர் ஞான முன்னூல்—100 1805

கம்பளிச் சட்டை கயிலாசமுனி கற்பவிதி 1806

கர்ம காண்டம் 1823

கவுபாலசித்தர் ஆணிக்கோர்வை—51 1838

கருவூரார் பலதிரட்டு வாகடம் 1891

### கெ

கெர்பக்கோள்—16 1831

### கை

கைலாசநாதர் ஞானம்—66 1821

### கொ

கொங்கணமூர்த்தி முதல் காண்டம் 1800

கொங்கணர் சூத்திரம்—40 1801

### ச

சட்டைமுனி காய கற்பம்—100 1893

சட்டை முனியார் கல்பம் 1819

சத்தியாரூடம் 1825

சரசாத்திரம் 1892

சு


சுந்தரானந்தர் பூரணாதி 1846

சுத்திக்கிரமம்-இதரசுத்தி முதலியன 1886


ஞா


ஞான வெட்டியான் 1777


த


தட்சிணாமூர்த்தி பூரண காவியம்—100 1866

தன்வந்திரி சூத்திரம்—25 1818


தி


திருமூலர் கற்பவிதி—500 1865

திருமூலர் திருமந்திரம் ஐந்நூற்றுத் திரட்டு 1867


தெ


தெட்சிணாமூர்த்தி ஓகார அட்சர சூத்திரம் 1789

தெட்சிணாமூர்த்தி—1500 1791

தெட்சிணாமூர்த்தி காவியம்—100 1795

தெட்சிணாமூர்த்தி வைத்தியம்—1300 1852

தெட்சிணாமூர்த்திக் கலைக்கியானம்—1200 1896


ந


நந்தீசர் கருக்கிடை—300 1875

நந்திபாடல் 1797


நா


நாடிக்கவி 1814

நாடிக்கவி 1815

நாடியின் குணவாகடம்—1500 1816

நாடி சூத்திரம் 1847


பு


புசுண்டர் வாக்கியம்—80 1876

புவனைக் கக்கிஷேத்துக்குச் சூத்திரம் 1787


போ


போகர் பூசா விதி 1790

போதரிஷி வாக்கியம் சூத்திரம்—100 1802

### ம


மந்திர சாத்திரம் 1794

மகாஜால முதற்காண்டம் 1840


### மே


மேகவியாதி வரலாறு 1822


### ரோ


ரோமரிஷி—50 1798

ரோமரிஷி—16 1803

ரோமரிஷி—20 1874

ரோமரிஷி ஜாலம்—500 1889


### வா


வால்மீகர் நாடி சூத்திரம் 1813

வால்மீகர் பூத நாடி—16 1839


### வை


வைத்தியம் 205லிருந்து நாடிக் குறிப்பு 181L

வைத்திய தர்க்கம் 1826

வைத்தியத் திரட்டு 1784, 1785, 1792, 1793, 1827, 1828, 1829, 1830, 1832, 1833, 1834, 1848, 1849, 1951, 1853, 1855, 1857, 1861, 1862, 1869, 1871, 1872, 1887.

# தஞ்சை சரசுவதி மகால் நூலகத்
## தமிழ்ச் சுவடிகளின் விளக்கம்
## 15-வது தொகுப்பு
### மருத்துவப் பகுதி

வரிசை எண்: 1781 சுவடி எண்: 851 a

## அகத்தியர் - 1500

ஏடுகள்: 183. சுவடியின் நிலைமை: சிதிலம். பக்கத்திற்கு: 8 வரிகள். பொருள்: நோயும் மருந்தும், பாட்டும் உரைநடையும் கலந்தது. அளவு: 28.5×3.5 செ.மீ. கி. எண்ணிக்கை: 5000. எழுத்து: தமிழ். ஆசிரியர்: அகத்தியர். முழுமை: முற்றற்றது.

**தொடக்கம்**

வாகுடன் கிணேசன் பாதம்
பணிந்துமுக் குணங்க ளாக
வாகடச் சுவடி யெல்லாம்
வகைவகையாய்த் தொகுத்துப் பார்த்து
.........................................................

**முடிவு**

.........................................................
தான் குடுக்க மேக நோய் நீங்கும் புருஷருக்கு
நேரறியு சோராக்கி பொங்கும் பசுவின் மோருண்ணலாந்
துய்ய விரவினுக்கு சுக்குக் கிஷாய முண்டாம்
ஆயுங் கொடியிடையாளுக் கானதல்ல துவரை பருப்புத்
துய்ய வெள்வெங்காயம் வடிமிளகு கூட்டி யரைத்
துன்னும் நெல்லி வடகமுமாம் நீங்களொரு
......... புடனே சொல்லும் புளிப்புகை தொட்டாலும்
நல்லதல்ல வேண்டாமிவர்க்கு மிக வரிசை
செய்தாலும் ........... நி .......... மங்கெரிசம் கிளஞ்சி
வென்னீரில் காசிடைநெய் கூட்டி சாப்பிடவும்.

ஆண்பிள்ளைக்கு சுக்குக் கிஷாயம் சாப்பிடவும், பெண்பிள்ளைக்கு துவையல் கூட்டலாம். இந்த தேங்காய் நெய்யும் ஆயிரத்தந்நூறும் தருண ஹு வைய்யாசி மீ யஅ ந்தேதி யெழுதி முகிந்தது முற்றும்.

**காலம்**

இல்லை

## குறிப்பு

இதில் பாடல்களுடன், உரைநடையும் கலந்துள்ளது. பாடல்கள் மட்டுமே வைத்திய சூத்திரத்துடன் தொடர்புள்ளவை. ஏனைய உரைநடைப்பகுதி '1500'உடன் தொடர்புள்ளது அல்ல முதலில் உள்ள காப்புப்பாடல் பல சுவடிகளிலும் இடம் பெற்றுள்ளது.

---

வரிசை எண்: 1782 சுவடி எண்: 851 b.

# அகத்தியர் வைத்திய ரெத்தினச் சுருக்கம்

ஏடுகள்: 43. சுவடியின் நிலைமை: சிதிலம். பக்கத்திற்கு: 8 வரிகள். பொருள்: மருந்துகள் செய்முறைகள். அளவு: 28.5×3.5 செ.மீ. கி. எண்ணிக்கை 2000. எழுத்து: தமிழ். ஆசிரியர்: அகத்தியர். முழுமை: முற்றுமுளது.

## தொடக்கம்

பூரணமாய் நிறைந்தகுரு பறைதா போத்தி
புகலுகுறேன் வயித்திய ரெத்தின சுருக்கந்தன்னை
வாரணமா முகத்தோனைப் பகர்ந்து போத்திய
வயித்தியந்தா விந்தமுன்னூத் தறுவதுக்குள் —க

## முடிவு

மூழ்கவே வியாதியெல்லாங்.........
முக்கியமாயகதீசரை தியானம் பண்ணு
நெகிளவே தியானம தென்னேரம் பண்ணு
நேரான தேவியைத் தான் தியானம் பண்ணு
மகிழவே சிவன்தனையே பூசை பண்ணு
தவறான வியாதியெல்லாந் தவறுண்டே போம்
மகிழவே வைத்தியமும் செய்தானாகில்
வையகத்தி லொப்பாரு மீசன் முத்தே
ரெத்தினச் சுருக்கம் முற்றும். குருபிடாஷம். — நளஅய

புத்தூர் அருணாசலம் நெட்டெழுத்து.

## காலம்

இல்லை

## குறிப்பு

இந்நூல் அச்சிடப்பட்டுள்ளது. பல பதிப்புகள் வந்துள்ளன. இது சுவடி எண் 910ஐப் போன்றது. இதன் விளக்கம் பின்னர்த் தரப்படுகின்றது.

---

வரிசை எண்: 1783 சுவடி எண்: 851-c

# சத்தியாரூடம்

ஏடுகள்: 16. சுவடியின் நிலைமை: சிதிலம். பக்கத்திற்கு: 8 வரிகள் பொருள்: நஞ்சுநூல். அளவு: 28.5×3.5 செ.மீ. எழுத்து: தமிழ். ஆசிரியர்: அறியக்கூட வில்லை. முழுமை: முற்றுமுளது.

**தொடக்கம்**

வெத்தி ...... தவத்தோன் கும்பமெய்முனி பாதத்தைப் போற்றி
சத்தியாரூடந் தன்னில்த் தரும பொருள் தன்னையாயிந்து
முத்தியாய் விருத்தம் நூறு மொழிந்திடவென்று நா...... வா
அத்திமாமுகவன் செய்ய வடிதனைப் போற்றல் செய்வாம். க

**முடிவு**

விரித்திட்டேன் சத்தியாரூடமான
விருத்தமது வொருனூறும் வேதமாகும்
வருத்தமாய் மனம் பத்தி பார்ப்போர்
கொடிமானி ...... யம் போற்றுமண்மேல் வாழ்வார்
தரித்திரியமணுகாது கர்ம முண்டாம்
தாரணியில் சித்தர் வந்துதருவார்
புத்தி கருத்துடனே யாத்தாளும் அய்யாவுந்தான்
காக்ஷி தருவார்களொரு நூறு முற்றே. ளஉ

சத்தியாரூடம் யெழுதி முகிந்தது முற்றும்
சிவ கிறுபையுண்டாக வேணும்.

**காலம்**

இல்லை

**குறிப்பு**

இந்நூல் மதுரைப் புதுமண்டபம் குருசாமிக் கோனாரால் 1930 இல் பதிப்பிக்கப்பட்டுள்ளது. விசவைத்திய நூலைப்பற்றி நச்சினார்க்கினியர் உரையில் வருகின்றது ஆயினும் விஷவைத்திய சிந்தாமணியும் இதுவும் ஒன்றல்ல. இது விச வைத்திய மாந்திரிகம் என்னும் தலைப்பில் ஒன்பது சிறு சித்தமருத்துவ நூல்களின் தொகுப்பில் ஒன்று. காப்புப்பாடல் சுவடியில் மாறுதலாக உள்ளது. சுவடியின் கடைசியில் உள்ள பாடல் பதிப்பான நூலின் 109 ஆம் பாடலை ஒத்துள்ளது. எனவே சத்தியாரூட சுவடி 109 பாடல் கொண்டதாக உணரலாம்.

வரிசை எண்: 1784 சுவடி எண்: 852

## வைத்தியத் திரட்டு

ஏடுகள்: 190. சுவடியின் நிலைமை: சிதிலம். பக்கத்திற்கு: 8 வரிகள் பொருள் திரட்டு - பலவிதமானவை. அளவு: 28.5×3 5 செ.மீ கி. எண்ணிக்கை: 2000. எழுத்து: தமிழ். ஆசிரியர்: பலர். முழுமை: முற்றுமுளது.

**தொடக்கம்**

அறத்தை சதகுப்பி சுக்கானநொச்சிச் சாத்தில்
அரைத்திழையக் காய்ச்சியருந்த - வருத்தத்
தலைவலிகள் நிரேற்றந் தன்னுடனே வாதசுரங்
குலைகுலைந்து போகுமெனக் கூறு.

**முடிவு**

டோலாந்திரமாக மேல்ச்சட்டி மூடி சீலை
மண்செயிது சமாதியில் துருசு நாலை வைத்து
............... ............... .......... யெறங்கு .......... ........... ..........
வையித்து கொண்டு சகல ........................... து
வில்லைத் தட்டி காயப் போட்டால்
சுண்ணமாகும்.

**காலம்**

இல்லை

**குறிப்பு**

பல்வேறு சித்தர்களின் சித்த மருத்துவ முறைகளும் பல்வேறு காலங்களில் பலரால் திரட்டப் பட்டுத் தொகுக்கப்பட்ட சுவடி.

---

வரிசை எண்: 1785 சுவடி எண்: 853.

## வைத்தியத் திரட்டு

ஏடுகள்: 60. சுவடியின் நிலைமை: நல்லநிலை. பக்கத்திற்கு: 10. வரிகள் பொருள்: தொகுப்புநூல். அளவு: 13×3 செ.மீ. கி. எண்ணிக்கை: 1500. எழுத்து: தமிழ். ஆசிரியர்: பலர் முழுமை: முற்றுமுளது.

**தொடக்கம்**

தறிநேத்திர மயிகுழந்தைக்கி
கொடுக்கலாம் கையிகண்டவித்தை

ரசம் விராகன் உ, கோடா ........... விராகன் உ, வாலம்
விராகன் ௬, பனங் கருப்பட்டி விராகன் உ, யிது
வெல்லாம் கலுவத்தில் போட்டு அரைத்து..........

**முடிவு**

லவுங்காதி பேதி.

லவங்கத்தை வாங்கி முலைப்பாலில் ரெண்டு
தடவை சுத்தி பண்ணி வெயிலில் காய
வைத்து வாலத்தை சாணி பாலில் சுத்தி பண்ணி
யெலையை யெடுத்துப் போட்டு காயவைத்து
ரெண்டும் சரியெடை தூக்கி கலுவத்தில்
போட்டு அரைத்து, பசுவின்வெண்ணெய்
கூடபோட்டு அரைக்கவும்.

**காலம்**

இல்லை

**குறிப்பு**

இது சுவடி எண் 862 ஐப் போன்றது. உரை நடையில் உள்ளது.

---

வரிசை எண்: 1786 சுவடி எண்: 854-a

# அகத்தியர் நவக்கிரகக் கக்கிஷம்

ஏடுகள்: 26. சுவடியின் நிலைமை: சிதிலம். பக்கத்திற்கு: 8 வரிகள் பொருள்: நாளும் கோளும் கூறும் சோதிட நூல். அளவு: 21×3 செ.மீ. கி. எண்ணிக்கை: 1000. எழுத்து: தமிழ். ஆசிரியர்: அகத்தியர். முழுமை: முற்றற்றது.

**தொடக்கம்**

கார் பொழி மூல வட்ட கணபதி பாதம் போத்தி
சீர் பொழி மறைனூல் வேதந் தெரிந்து உள்மவுனம் நோக்கி
கூர் மொழியே சூட்சம் கேள் சிவசத்தி கக்கிஷம்
சார் பொழி சாட்சியான தாண்டவம் விரித்துச் சொல்வேன் க

**முடிவு**

குருபீஷம்-றீம்- சுக்கிரன் பீஷம்-பம- மெண்டு
பொடு பொடு யெ........ சனியிநுட பீஷமப்பா-
சம-ளகுபீஷம-ரம- யிதமான கேதுபீஷம

கம மும்போட்டு யின்பமுற அட்சரங்கள்
தப்பாமல் தாயெனை யீன்றக் கக்கஷத் தாயாத
முத்தே-ளஅ-தெட்சிணாமூர்த்தி கெதியுண்டாகவும்.

**காலம்**

இல்லை

**குறிப்பு**

இது சுவடி எண் 307 விருந்து வேறுபட்ட சுவடியாகத் தோன்றுகின்றது. சித்த மருத்துவத்தில் ''கக்கிசம்'' என்ற பிரிவு உள்ளது. ''தீதில்லாக் கக்கிசங்கள்'' என்ற பாடல் வரியும் சித்தர்பாடலில் வருகின்றது. தீமை செய்யா மந்திரங்களைக் கொண்டது.

மந்திரங்கள், சக்கரங்கள், கோள் மற்றும் நாள் பற்றிய நிலைகளை எடுத்துரைக்கும் சுவடியாகும்.

---

வரிசை எண் 1787 சுவடி எண் 854-b

## புவனைக் கக்கிஷத்துக்குச் சூத்திரம்

ஏடுகள்: 7. சுவடியின் நிலைமை: சிதிலம். பக்கத்திற்கு: 7 வரிகள். பொருள்: சோதிடமும் மந்திரமும். அளவு: 21×3 செ.மீ. கி. எண்ணிக்கை: 500. எழுத்து: தமிழ். ஆசிரியர்: அறியக்கூடவில்லை. முழுமை: முற்றுமுளது.

**தொடக்கம்**

ஓமென்ற கணபதியின் பாதம் போத்தி
ஒளிகண்ட நாதாக்கள் பாதம் போத்தி
ஆமென்ற கக்கிஷத்தை போகனாவன்
அனுக்கிரகம் அறுபத்து நாலுமாட

**முடிவு**

தானகி நின்றவற்கு யிந்த நூல்தான்
சாஸ்த்திரத்தின் ............ மறைப்புத்தானே தோன்றும்
பானாகில் வெகுபிரியயெந்த தாய்க்கப்பா
பிரிவாக நடுக்காண்டம்முதக் காண்டம் பாரு
வானெண்ட அறைகளிலே யிலெக்கம்பூட்டு
வகைவிபரம் .........மும் வகுத்துவைத்தேன்
ஊனென்ற சுந்தரத்தின் தீட்சைபாரு
உத்தரனே கொங்ஙகணர் தன்கடைக் காண்யம் பாரே. — ய

**காலம்**

இல்லை

**குறிப்பு**

கக்கிசம் என்று தலைப்பிட்ட சுவடி. இது பதிப்பானதாகத் தெரிய வில்லை. சுவடி எண் 854 A யை ஒத்தது. சோதிடம், மந்திரங்கள் என்பன அடங்கியது.

---

வரிசை எண்: 1788

சுவடி எண்: 856-a

# அகத்தியர் சூத்திரம் -200

ஏடுகள்: 53. சுவடியின் நிலைமை: நல்லநிலை. பக்கத்திற்கு: 7 வரிகள். பொருள்: மருந்துசெய்முறைகள். அளவு: 22.5×3 செ.மீ. கி. எண்ணிக்கை: 1000. எழுத்து: தமிழ். ஆசிரியர்: அகத்தியர். முழுமை: முற்றுமுளது.

**தொடக்கம்**

பூரணமாய் மும்மூலப் பொறியிற் சூடாய்ப்
புகையெழும்பி மேகமதாய்ச் சிரசிற் சூடாய்
காரணமாய் நீர்க்கலந்து கண்ணில் ரோகங்
கனலெழுந்து வாயுவினாற் சூலை ரோக
.......... .......... .......... .......... ..........
.......... .......... .......... ..........

**முடிவு**

...... ...... ...... ...... ...... ...... ......
...... ...... ...... ...... ...... ......
போலின்னூலை சாத்தினேன்னான்
நோய் மிகுந்து சாவில்லை யொரு நாளுதான்
நுண்ணிமையாய் சரக்கையெல்லாம்
நீற்றிக் கொண்டு வாயமுடன் யெண்ணையொடு
கிருதஞ்செய்து வைத்திடுவாய் வயித்தமும் முத்தே

**காலம்**

இல்லை

**குறிப்பு**

சூத்திரம் என்பது அடிப்படையான கருத்துகளைக்கூறுவது எனக் கொள்ளலாம். இதில் 200 பாடல்கள் உள்ளன. இந்நூல் பதிப்பானதாகத் தெரியவில்லை. கடைசிப் பாடலில் உள்ள வரிகளால், எண்ணெய், நெய் போன்றவைகளைச் செய்யும் முறைகள் உள்ளன என அறியலாம்.

———❋———

வரிசை எண்: 1789

856-b

# தெட்சிணாமூர்த்தி ஓகார அட்சார சூத்திரம் - 31

ஏடுகள்: 10. சுவடியின் நிலைமை: நல்லநிலை. பக்கத்திற்கு: 7 வரிகள் பொருள்: தத்துவம். அளவு: 22.5×3செ.மீ. கி. எண்ணிக்கை: 500. எழுத்து: தமிழ். ஆசிரியர்: தெட்சிணாமூர்த்தி. முழுமை: முற்றுமுளது.

**தொடக்கம்**

மெய்யான குருபரனை பூசை பண்ணு
　　வித்தைதந்த சற்குருவை நித்தம் போத்தும்
சுய்யாரமனதார ஞான சொல்லே
　　ஒகாரணமாங் குருபதத்தைக் கருதிப்பாரு
......... ......... ......... ......... .........
　　......... ......... ......... .........

**முடிவு**

புருவமைய்யத் தொளிக்காட்டி வெளியுங்காட்டி
ஒரு சித்தம் பலங் காட்டி, ஒருக்காலுமழியாத
முத்தியாமே'' -நுயக-
　திருச்சிற்றம்பலம். ஸ்ரீராமசெயம்

**காலம்**

இல்லை

**குறிப்பு**

தட்சணாமூர்த்தியின் பாடல்களின் சுருக்கம் தத்துவம் பற்றியசெய்திகள் உள்ளன. பதிப்பானதாகத் தெரியவில்லை. அறிவிபற்றிய விளக்கமும், ஆசிரியரைப் போற்றும் வண்ணம் பாடல் உள்ளது.

வரிசை எண்: 1790 சுவடி எண்: 856-c

# போகர் பூசாவிதி

ஏடுகள்: 11. சுவடியின் நிலைமை: சிதிலம். பக்கத்திற்கு: 7 வரிகள். பொருள்: பூசை முறைகள் அளவு: 22.5×3 செ.மீ. கி. எண்ணிக்கை: 500. எழுத்து: தமிழ். ஆசிரியர்: போகர் முழுமை: முற்றுமுளது.

**தொடக்கம்:**

''பாரப்பா வாலையுட பூசைவிதி கேளு
　　பாங்காக நவகோணம் நவதுண்டிட்டு
சேரப்பா யிருவளையம் வாசல் னாலு
　　சிறப்பாக வீங்காரம் சூளப்போட்டு,
......... ......... ......... ......... .........
　　......... ......... ......... ......... .''

முடிவு

"............ ............ ............ ............ ............
............ ............ ............ ............

வீணப்பா மத்ததெல்லாம் வாலசுத்தி
வெள்ளத்தைக் கடந்து வோமென்றவெத்தி
ஊணப்பா யிந்த நூலாருங்காணார்
உரையாத சூத்திரந்தான் முற்றே." -சுயசு-.
போகர்பூசாபதி எழுதியது. முற்றும்.

காலம்

இல்லை

குறிப்பு:

"அகத்தியர் சில்லரைக் கோவையில்" 62 ஆவது நூலாகப் பதிப்பாகி உள்ளது. சுவடியில் உள்ள கடைசிப் பாடல், அச்சு நூலில் இல்லை. சுவடி எண் 508, சுவடி எண் 369 e இவற்றை ஒத்தது. முழுமையான சுவடி பராசக்தி பூசை, அட்டாங்க பூசை, யோக முறைகள், குளிகை, சாரணை, மணி, பானத்தின் பெருமை என்ற தலைப்புகள் உள்ளன.

வரிசை எண்: 1791 சுவடி எண்: 857

# தெட்சணாமூர்த்தி 1500

ஏடுகள்: 257. சுவடியின் நிலைமை: நல்ல நிலை. பக்கத்திற்கு: 8 வரிகள். பொருள்: மருந்து செய் முறைகள். அளவு: 32×3.5 செ.மீ. கி. எண்ணிக்கை: 8000. எழுத்து: தமிழ். ஆசிரியர்: தெட்சணாமூர்த்தி. முழுமை: முற்றுமுளது.

தொடக்கம்

"பாகுடன் கணேசன் பாதம் பணிந்து முக்கோணங்களாய்
வாகடச் சுவடியெல்லாம் வகைவகை தொகுக்குங் காலை
ஆகிட விதியின் சூழா லடர்ந்திடும் நோய் கட்கெல்லாம்
போகிட மருந்து சொல்வோம் புலத்தியா புரிந்து பாரே."

முடிவு:

வேமப்பா நோயெல்லாம் படுதீபற்றி
வேறுள்ள நூல்களெல்லாம் விபரமில்லை
சோமப்பா யிந்தநூல் துகையேதென்றால்
சொல்லுகிறேன் ஆயிரத்தந் நூறு வேதம்
நாமப்பா உள்ளபடி சொல்லிவைத்தோம்
நாதாக்கள் கடாசத்தால் சூத்திரந்தான்முற்றே. சூதருள-1500

சிவசரஅணபவன்றிருவடி சரணம்.
பொதியமாமலை தெட்சணாமூர்த்தியாகிய
அகத்திஷ்பரர் பாதாரவிந்தமே துணை. சிவமயம்.

**காலம்**

இல்லை.

**குறிப்பு:**

இந்நூல் ''அகத்தியர் வைத்திய காவியம் 1500'' என்ற தலைப்பில் உள்ளது பல முறைகள் பதிப்பானது. அண்மையில் தமிழ்ப்பல்கலைக் கழகம் மூலம், உரையுடன் வெளியிட்டுள்ளது. இச்சுவடி முழுமையானது. இதில் நாடிகள், பஞ்சபூதவகைகள், தோடங்கள், மரணக்குறிகள், நோய்கள் அது ஏற்படும் காரணங்கள், நீக்கும் மருந்துவகைகள் என்பன 1500 பாடல்களில் கூறப்பட்டுள்ளன.

---

**வரிசை எண்:** 1792 **சுவடி எண்;** 858

# வைத்தியத் திரட்டு

ஏடுகள்: 220. சுவடியின் நிலைமை: நல்லநிலை. பக்கத்திற்கு: 7 வரிகள் பொருள்: மருந்து செய்முறைகள். அளவு: 28.5 × 3 செ.மீ. கி. எண்ணிக்கை 5000. எழுத்து; தமிழ். ஆசிரியர்: அறிய இயலவில்லை. முழுமை: முற்றற்றது.

**தொடக்கம்**

கெந்தகம், காந்தம், அரப்பொடி, லிங்கம் வகைக்கி பலம் 2, கத்தாளஞ் சாத்தால் ரெண்டு நாள் அரைத்து சட்டியில் தடவி காயவைத்து மேல்சட்டி மூடி ஏழு சீலைசெய்து ரெண்டு நாள் யெரித்து ஆறவிட்டு பார்க்க முருக்கம்பூ நிறமாயிருக்கும் இவைசகல ரோகத்துக்கும் கொடுக்கலாம்.

**முடிவு**

**வெங்காரக் குளிகை**

வெங்காரம் விராகன் க, (1) பொரித்து பொடி பண்ணி, பசுநெயி பலம் க, (1) சட்டியிலிட்டு காச்சி அதில் பளவெல்லம் கொட்டப்பாக்களவு போட்டு யுருக்கினயுடநேயிரக்கி முன் வங்கார தூள் போட்டு கூ (9) உண்டை பண்ணினாகர் காலமே திண்ண, சுவாசகாசம், மலக்கட்டு, சலக்கட்டு, வாயிவு, மூலம் சகலமுந் தீரும். பத்தியமா நடக்கவும்.

**காலம்**

இல்லை

குறிப்பு

சுவடி எண் 862ஐப் போன்றது. உரைநடையில் இச்சுவடி உள்ளது.

——❋——

வரிசை எண்: 1793 வரிசை எண்: 859

# வைத்தியத் திரட்டு

ஏடுகள் 60. சுவடியின் நிலைமை: சிதிலம். பக்கத்திற்கு: 7 வரிகள். பொருள்: மருந்து செய் முறைகள். அளவு: 40×3 செ.மீ. கி. எண்ணிக்கை: 1000. எழுத்து: தமிழ். ஆசிரியர்: அறிய இயலவில்லை. முழுமை. முற்றுற்றது.

தொடக்கம்

புளியாரைக் கிருதம்

.... .... ... ... .... .... .... .... .... ....... .... ....
திட்டுடனே யிறங்குகின்ற பிரமியந்தான் தீரும்
புளியாரைக் கிருதங்கேளே. — உஎசு (204)
புளியாரை .... .... ... .... .... .... ... .... ....
.... ... ... ... .... .... .... .... ... ... ... ....
நாளடா காணிச் சாறுபடி யிரண்டு
நலமான செவ்வேன் நீர்படிதான்ரெண்டு

முடிவு

.... .... .... ... .... .... .... .... ... ...
ஆச்சென்ற வச்சிரமிட்டகாயமாச்சு
ஆகாதாயின்னமுண்டு சொல்லக்கேளு — ௩௬௯ (369)
கேளப்பா தயிலமது பதமாங் காலங்
இருபையுள்ள சித்தருக்குஞ் சிவ
... .... .... .... ... .... ... .... .... ...

காலம்

இல்லை

குறிப்பு

சுவடி எண் 862ஐப் போன்றது. பாடல்களால் ஆனது.

——❋——

வரிசை எண்: 1794 சுவடி எண்: 860-a

# மந்திர சாத்திரம்

ஏடுகள்: 81. சுவடியின் நிலைமை: நல்ல நிலை. பக்கத்திற்கு: 5. வரிகள் பொருள்: மந்திரம், இரசவாதம் என்பன கலந்தது. அளவு: 22 × 3 செ.மீ. கி. எண்ணிக்கை: 2000 எழுத்து தமிழ். ஆசிரியர்: அறிய இயலவில்லை முழுமை: முற்றற்றது.

**தொடக்கம்:**

.... ... ... .... பிடித்துத் தலைதோலுரித்து நீரில் ... ... ....
.... .... ... ... கை வேகாது. இதின் தோல் வாயில்
வைக்க வாய்வேகாது. இதின் தோல் ... .... ....
முன்னிற்கும் பேர்களெலாம் வசமாவார்கள்.

**முடிவு:**

வேதாந்த உப்பறிந்தால் வாத்தியாவான்
ஆமென்ற பளம் .......... சவுக்காரத்தை
அறனறிவானல்லாது.

**குறிப்பு:**

பாவில்லாத பெண்களுக்கு எழுதிக் கட்டவும், எலிதின்னாமல் இருக்க எழுதி கட்டவும் என்றும் தலைப்புக்களும் காணப்படுகின்றன

மந்திரம், இரசவாத முறைகள் உள்ள சுவடி. பதிப்பானதாகத் தெரியவில்லை.

வரிசை எண்: 1795 சுவடி எண்: 860-b

# தெட்சிணாமூர்த்தி காவியம் 1000

ஏடுகள்: 99. சுவடியின் நிலைமை: நல்ல நிலை. பக்கத்திற்கு: 7 வரிகள் பொருள்: மருத்துவம். அளவு: 22 × 3 செ.மீ. கி. எண்ணிக்கை: 2000, எழுத்து: தமிழ். ஆசிரியர்: தெட்சிணாமூர்த்தி. முழுமை: முற்றற்றது

**குறிப்பு:**

தட்சணாமூர்த்திக்கு வேறு பெயர் அகத்தியர் ஆகும். அகத்தியர் வைத்திய காவியம் 1000 என்ற பெயரில் நூல் பதிப்பாகி உள்ளது.

வரிசை எண்: 1796 சுவடி எண்: 861

# அசுவ நூல்

ஏடுகள்: 132. சுவடியின் நிலைமை: நல்ல நிலை. பக்கத்திற்கு: 7 வரிகள் பொருள்: குதிரை வைத்தியம். அளவு: 25 × 3 செ.மீ. கி.எண்ணிக்கை: 3000 எழுத்து: தமிழ். ஆசிரியர்: அறிய இயலவில்லை முழுமை: முற்றற்றது.

**தொடக்கம்**

பொதுமா

உலக முண்டவனுந்தியந் தாமரையுரைவொன்
அலகிலாபரி நூலினை யிந்திரர்க்கருள
யிலமாங்குவன் அர்சுன தேவருக் கிசைப்ப
புலமையாய்யய கோடனுக் காங்கவர் புகல்

—௧

**முடிவு**

வளவில் தினம் சண்டையாம். அலகில் கடிவாள
வளையத்துக் குள்ளே உள்ள சுளிவாய்ப் பூட்டு
பிள்ளை தொங்காது.

**காலம்**

இல்லை

**குறிப்பு:**

13-ஆம் ஏட்டிலிருந்து தொடங்குகிறது. இடையில் ஏடுகளின் எண்ணிக்கை விடுபட்டுள்ளன.

இது குதிரைக்கான மருத்துவம் பற்றியது. விலங்கு மருத்துவம் கூறப்பட்டுள்ளது. சுவடிஎண் 64,65 ஐப் போன்றது. ஆயின் இது, வேறுபட்ட சுவடி.

வரிசை எண்: 1797 சுவடி எண்: 862-a

# நந்திபாடல்

ஏடுகள்: 36. சுவடியின் நிலைமை: நல்லநிலை. பக்கத்திற்கு: 7 வரிகள். பொருள்: இரசவாதம். அளவு: 24.5×3.5 செ.மீ. கி. எண்ணிக்கை: 1500. எழுத்து: தமிழ். ஆசிரியர்: குருமுனிவர். முழுமை : முற்றுமுளது.

**தொடக்கம்**

நந்திசர் வேதமுனி சூதமுனி யிவர்கள்
நாதனடி போற்றி செய்து மகிழ்ந்திருக்கும் வேளை
யிந்திர வோலக்கமென்ன வாத வித்தைசெய்ய
யேதுவகை யென்றருள் வேதமுனி கேட்கத்
... .... .... ... ... ... .... ... ... ...
... ... .... .... .... ... .... .... ... ... — க

**முடிவு**

.... .... .... ... ... ... .... .... ... ....
... ... .... ... ... .... ... .... ... ....
நீதிகுருநாதனிணையடி நீங்காதே
நிளலுன்னைக் காத்தது போல
நீகுருவைக் காகு பாதுசெய்து காத்திடுவரிந்த
நூலைப்பாடு கெதிமோட்ச முண்டாம்
நூற்றுப்பத்தே. — எய

சூதமுனி சூத்திரம் முற்றும். தேவி சகாயம்.

**காலம்**

இல்லை

**குறிப்பு**

பதிப்பானது. 110 பாடல்களைக் கொண்டதாகக் கடைசிப் பாடலால் அறியலாம். ஏட்டின் கீழே "சூதமுனி சூத்திரம்" என்றுள்ளது. "சூதமுனி சூத்திரம்" 1975இல் சித்த மருத்துவ வாரியம் இந்நூலை வெளியிட்டுள்ளது. (மூலம், உரையுடன் முதல் பாடலில் நந்தி, வேதமுனி, சூதமுனி என்போர் கூறப்படுகின்றார்கள். இரசவாத வித்தையைச் செய்ய வேத விண்ணப்பிக்கின்றார். இதில் திருநீலகண்ட வாலை, கங்காளி இரதபற்பம், சீர்ராமச் செந்தூரம், உப்புக்கட்டு, கந்தகக்கட்டு, கந்தகத் தைலம், வங்கச் செந்தூரம், ஆவாரைப்பட்டைத் தைலம், கந்தக மெழுகு, சூதக் குளிகை, கந்தகச் செந்தூரம், சகல சரக்கும் கட்ட வழிகள், பரங்கி வைப்பு, குரு மருந்து, தங்கக் குரு, குப்பிவைப்புச் செந்தூரம், பரங்கிப் பாடாணவைப்பு என்ற தலைப்புகளில் மருந்து செய்முறைகள், தீரும் நோய்கள் கூறப்பட்டுள்ளன. அகத்தியருக்கு வேறுபெயர் "சூதமுனி" என்றும் கூறப்பட்டுள்ளது.

———✱———

**வரிசை எண்:** 1798 **சுவடி எண்:** 862-b

# ரோமரிஷி - 50

**ஏடுகள்:** 8. **சுவடியின் நிலைமை:** நல்லநிலை. **பக்கத்திற்கு:** 10 வரிகள். **பொருள்:** இரசவாதம். **அளவு:** 24.5×3.5 செ.மீ. **கி. எண்ணிக்கை:** 1000. **எழுத்து:** தமிழ். **ஆசிரியர்:** ரோமரிஷி. **முழுமை:** முற்றற்றது.

**தொடக்கம்**

வாரணமாமுகத்தோன்றல் வல்லபையுங் காப்பு
வாக்கிலிருந்தோதுகின்ற வாணிகாப்பு
பூரணமாய் நிறைந்த குருநாதன் காப்பு
புகழ்பெரியசித்தருட பாதங்காப்பு.
... ... ... ... ... ... ... ... ... ....
... .... .... .... .... ... ... ... ... ... — க

**முடிவு**

.... .... .... ... ... .... ... ... ... ...
.... ... ... ... .... ... ... ... .... ....
சருகுதுளிர் வெடியுப்பு கட்டிப் போச்சுச்
சவுக்கார வளகி என்ற பேருமாச்சுக்
குருவிதுக்கு வடிமூலந் தீட்சையாச்சுக்
குடியிருப்புக் கயிலாசங் கொள்ளைபோச்சே — நுயஉ

**காலம்**

இல்லை

**குறிப்பு**

இச்சுவடி, பதிப்பானதாகத் தெரியவில்லை. "உரோமரிசி வாத சூத்திரம் 500" என்ற தலைப்பில் உள்ள சுவடி எண் 648இல் உள்ள முதல் பாடலை, இச்சுவடியின் முதல் பாடல் ஒத்துள்ளது. உரோமரிஷி சூத்திரம் 50 என்ற தலைப்பில் உள்ள சுவடி எண் 353 (e) இதிலிருந்து வேறுபட்டுள்ளது.

வரிசை எண்: 1799 சுவடி எண்: 862-c

# அகத்தியர் கலைக் கியானம் சூத்திரம்-200

ஏடுகள்: 17. சுவடியின் நிலைமை: நல்ல நிலை. பக்கத்திற்கு: 8 வரிகள். பொருள்: மருந்து செய் முறைகள். அளவு: 24. 5 × 3.5 செ.மீ. கி. எண்ணிக்கை: 1500 எழுத்து: தமிழ். ஆசிரியர்: அகத்தியர். முழுமை: முற்றற்றது.

**தொடக்கம்:**

ஆதிபரா பரத்தினுட கிருபை கூர்ந்து
அன்பான மனோண்மணியைத் தொழுது போற்றிச்
சோதியெனுங் கமலமலர்த் தமுற்தங் கொண்டு
சுந்தரம் போல் வாதத்தில் லட்சங் காப்பு
.... .... .... ... ... ... ... .... .... .... ... ....
... ... .... ... ... ... .... ... —க

**முடிவு;**

... .... .... ... .... ... .... ... ... .... ... ...
... ... ... ... .... ... ... .... ...

அன்புடனே புடம் போடச் சுண்ணமாகு
மலர்ந்த சுண்ணந்தனையெடுத்துப் பதனம் பண்ணு
வாசமுள்ள சுண்ணமடா மைந்தாகெழு தளர்ந்துமிக
வாடாதே பதனம் பண்ணுசதாசிவனை யனுதினமும்
பணிந்து போற்றே. —எய

**காலம்:**

இல்லை:

**குறிப்பு;**

இதே தலைப்பில் சுவடி எண் 120 (J) 4 ஆவது சுவடிகளின் அட்டவணைத் தொகுப்பிலும், சுவடி எண் 367. (b) — 9 ஆவது சுவடிகளின் அட்டவணைத் தொகுப்பிலும் உள்ளது. ஆயின் இச்சுவடி, அவைகளிலிருந்து வேறுபட்டது. பதிப்பானதாகத் தெரியவில்லை, மனோன்மணியின் வணக்கம், சுண்ணம் செய்முறை போன்ற மருந்துகளின் செய் முறைகள், என்பன வருகின்றன.

---

**வரிசை எண்:** 1800 சுவடி எண்: 862-d

## கொங்கண மூர்த்தி முதல் காண்டம்

ஏடுகள்: 5. சுவடியின் நிலைமை: நல்லநிலை. பக்கத்திற்கு: 9 வரிகள். பொருள்: தத்துவம், அளவு 24.5 × 3. 5 செ.மீ. கி. எண்ணிக்கை: 500. எழுத்து: தமிழ். ஆசிரியர்: கொங்கணர். முழுமை: முற்றுமுளது.

**தொடக்கம்:**

செப்பிறேன் மனத்தாலே தவமுமாச்சுச்
சேர்விளலானதுவு மனமேயாச்சு.
வொபடிரேன் மாயமெல்லாம் மனமேயாச்சு.
வோகோகோ சஞ்சலத்தால் மனம் பேயாச்சு.
... ... ... ... ... ... ... .... ... ... ... ....
.... .... ... ... ... ... ... .... ... ...

**முடிவு;**

.........பெரியோர்கள் பதத்தையென்றும் பணிந்து
திருவுரைத்த விந்நூலைப் பார்த்தவர்க ளெல்வாஞ்
சிவயோகத் தவமுடைய தேகசித்தி யாவார்.
பரவுகின்ற நாளிலொன்றாய்ப் பராபரமு மாவர்.
பாடியதோர் முதற்காண்டம் பரமு முற்றே.

**காலம்**

இல்லை:

**குறிப்பு**

பதிப்பானது. ''கொங்கணர் முதல் காண்டம் என்ற தலைப்பில் மகால் சுவடி எண் 442 (a), 554லும் உள்ளன. முதல் சுவடியில் 1000 பாடல்களும், இரண்டாம் சுவடியில் 500 பாடல்களும் உள்ளன. இச்சுவடி அவைகளிலிருந்து வேறுபட்டது ''அகத்தியர் சில்லறைக் கோவையில் 76 ஆவதான நூல். கொங்கணர் முக்காண்ட சூத்திரம் 17'' என்ற தலைப்பில் உள்ளது. தத்துவக் கருத்துகள், யோக முறையும் எடுத்துரைக்கப்படுகின்றன.

---

வரிசை எண்: 1801 சுவடி எண்: 862-e

# கொங்கணர் சூத்திரம்-40

ஏடுகள்: 13. சுவடியின் நிலைமை: நல்ல நிலை. பக்கத்திற்கு: 7 வரிகள் பொருள்: தத்துவம், இரசவாதம், மருந்து செய்முறைகள் கலந்தது. அளவு: 24.5×3.5 செ.மீ. கி. எண்ணிக்கை: 1000. எழுத்து: தமிழ். ஆசிரியர்: கொங்கணர். முழுமை: முற்றற்றது.

**தொடக்கம்**

சாத்திரந்தான் ஆறுகாண்டம் விரித்துச் சொன்னேன்.
தனைக்குறுக்கி மூன்றுகாண்ட மைஞ்னூறு முற்றும்
சூத்திரந்தான் மூன்றுரைத்தேன் சுற்பநூறு
தோஷமில்லை மோசமில்லை சொல்வேன் கேளு.
.... ... ... .... .... ... .... ... .... .... ...
.... ... .... ... .... ... ... .... ... —க

**முடிவு**

யிந்தநூல் பாராட்டால் தீட்சையெதுவென
மக்காள் ஞானமொடு வறிவங்கே
யிந்தநூல் நாற்பதுந்தான் சித்தர்கள்க்கு
வியம்பினேன் சாத்திரத்துக்கிதுதான்முற்றே. —சுக

குருபாதம்.

**காலம்**

இல்லை

### குறிப்பு

மகால் சுவடி எண் 34 (e) யின் வேறு படியாகக் கொள்ளலாம். தத்துவப்பாடல்கள், கல்லுப்பு போன்றவைகள், இரசவாத முறைகள் என்பன உள்ளன. பதிப்பானதாகத் தெரியவில்லை.

—❋—

வரிசை எண்: 1802 சுவடி எண்: 862-f

## போதரிஷி வாக்கியம் சூத்திரம் -100

ஏடுகள்: 30. சுவடியின் நிலைமை: நல்ல நிலை. பக்கத்திற்கு: 8. வரிகள் பொருள்: வாதமுறைகள் அளவு: 24.5×3.5 செ.மீ. கி. எண்ணிக்கை: 2000. எழுத்து: தமிழ். ஆசிரியர்: போதரிஷி. முழுமை: முற்றற்றது.

### தொடக்கம்

சீருலவு பொதிகை முனி பாதம் போற்றிச்
சிவகாமித் தாயார் பொற்பாதம் போற்றி
ஏறுலவு தந்தை சிவன்பாதம் போற்றி
யின்பமுற்ற சித்தருடபாதம் போற்றி. —க

### முடிவு

யூனென்ற காயத்தைச் சித்தி செய்ய
உண்மை சொல்லியிருக்குதென்று கொடுக்க மாட்டார்
தானென்று தெண்ட நிட்டாலிரங்கி யீய்வார்
சதநூலார் சொன்னதிது சாயுட்சியமுற்றே. —ளஉ

முற்றும். போதரிஷிசுவாமியள் பாதார
விந்தந் துணை.

### காலம்

இல்லை

### குறிப்பு

சுவடி எண் 44. a (A) சுவடி எண் 376 (E) என்பன வற்றிலும் உள்ளன. பதிப்பானதாகத் தெரியவில்லை. வழலை, வெடியுப்புச் செய்நீர், இரசத்தால் வாணம் செய்தல், வெடியுப்பு செய நீரால் வீரக்கட்டு, இலிங்கசுத்தி, முப்பு, ஆனைக்கல், துருசு சாரம் கட்ட, துருசு சுன்னம் போன்றவைகள் இரசவாத முறைகளும் உள்ளன.

—❋—

வரிசை எண்: 1803 சுவடி எண்: 862-B

## ரோமரிஷி - 16

ஏடுகள்: 5. சுவடியின் நிலைமை: நல்லநிலை. பக்கத்திற்கு: 9 வரிகள் பொருள்: தத்துவம். அளவு: 24.5×3.5 செ.மீ. கி.எண்ணிக்கை: 500. எழுத்து: தமிழ். ஆசிரியர்: ரோமரிஷி. முழுமை: முற்றற்றது.

**தொடக்கம்:**

தந்திமுகத்தோன் சதங்கைத் தாளே காப்பு
சகலபொருளாய் நின்றந்த தாயே காப்பு
முந்தியுரைத்தேன் முதநூலன்புதுக்குள்
மூலமுதற்றிரி கோணவாசி வாதஞ்
சுந்தரம் போலறிவுடைய மக்களுக்குத்
.... .... ... .... .... .... .... .... ....
.... ... .... ... ... ... ... ... .... ... ..

**முடிவு**

நீரிலானைக் கல்லு சத்தியுவாச சூடனங்கே
சற்றேபட்டா ... .... .... .... ... ... ...
வினடினமுஞ் சொந்ததாலே வெண்கிளிஞ்சிக்
கெற்ப நீர்விட்டோற்கெல்லாம் போகாதோ
குருமுடிக்கும்பாக வெல்லாம் பூட்டறிந்து
பார்த்தவற்குப் பொருட்டான முற்றே. யசு
தேவிச்சகாயம்.

**காலம்;**

இல்லை

**குறிப்பு:**

பதிப்பான நூல் ''அகத்தியர் சில்லறைக் கோவையில் ''உரோமரிசி வகார சூத்திரம் 16'' என்ற தலைப்பில் 88 ஆவது நூலாக உள்ளது. தத்துவம், இரசவாத முறைகள் நுதலிற்று, துவாலை என்ற தலைப்புகள் உள்ளன.

---

வரிசை எண்: 1804 சுவடி எண்: 863-a

## அகத்தியர் பூசாவிதி

ஏடுகள்: 52. சுவடியின் நிலைமை: நல்லநிலை. பக்கத்திற்கு: 7 வரிகள். பொருள்: பூசை முறைகள். அளவு: 25.5×3.5 செ.மீ. கி. எண்ணிக்கை 2000. எழுத்து: தமிழ். ஆசிரியர்: அகத்தியர். முழுமை: முற்றற்றது.

**தொடக்கம்**

**காப்பு**

ஆதாரமாறு மகண்ட குருபாதம்
வேதா கமத்தின் விதிமாற்கம்—நாதமுறும்
விந்துவே மூலம் விளங்குபூ சாவிதியார்
தந்திமுகத் தோன்கருணை தான்

**நூல்**

காரணமாஞ் சிவயோகி சித்தர்பூசை
களங்கமறச் சொல்லுகின்றேன் நன்றாய்க்கேளு — க

**முடிவு**

... .... .... ... .... ... .... ... ... .... ...
.... ... ... ... ... .... .... ... ... ... ...

சுண்ணாம்பும் மஞ்சளும்போல் குறியைக் காட்டி
சுழுனையிலே நாட்டமுறத் தொட்டுக் காட்டிக்
கண்ணாடிக்குள் குருவின் பதத்தைப் போற்றி
கருணைபெரும் பூசைவிதி கருவாம்முத்தே. உள

**காலம்**

இல்லை

**குறிப்பு**

இது சுவடி எண் 352 (b) 452 (b) 376 (b) 19 (a) 288 (D) போன்ற மகால் சுவடிகளை ஒத்தது. சுவடி எண் 226 (b) இதே தலைப்பில் இருந்தாலும், மாறுபட்டது. பதிப்பானதாகத் தெரியவில்லை. இதில் சக்கர பூசாவிது, மந்திர உச்சாடனம், வசியம், கணபதி, பிரும்மா, விட்ணு, மகேசர், சதாசிவம், சூரியன், சந்திரன், குருமூர்த்தி' சக்தி ஆகியோரை பூசிக்கும் முறைகள், என்பன கூறப்பட்டுள்ளன. 200 பாடல்கள் உள்ளன. ''தட்சிணாமூர்த்தி பூசாவிதி'' என்ற தலைப்பிலும் உள்ளது.

வரிசை எண்: 1805 சுவடி எண்: 863 q

## கம்பளிச் சட்டை கயிலாசநாதர் ஞான முன்னூல் - 100

ஏடுகள்: 28. சுவடியின் நிலைமை: நல்லநிலை. பக்கத்திற்கு: 7 வரிகள். பொருள்: தத்துவம். அளவு 25.5×3.5 செ.மீ. கி. எண்ணிக்கை 1500. எழுத்து: தமிழ் ஆசிரியர்: கம்பளிச் சட்டை கயிலாச் நாதர். முழுமை: முற்றுமுள்ளது.

**தொடக்கம்**

மூலமுதலாறுதலங் கிழே தள்ளி முதிர்ந்து நின்ற
மேலாறு மெடுத்துனோக்கி
கோலமுடனுள் மனையைத் தாண்டி ஏறி
கொடியதொரு ஞானசத்திக்குள்ளே மைந்தர்.
... .... ... ... .... .... ... .... ... .... ... ... ...
... ... ... .... ... .... .... ... .... ... ... —க

**முடிவு**

ஆகவப்பா இருபது அஞ்சுனூறு அறைந்திட்டேன்
வாத வித்தையறிந்து சொன்னா
ஆகவப்பா யிதுக்குள்ளே ஞானம்னூறு
அப்பிறத்தே சொன்ன தொடுஞானம்னூறு
... .... .... .... .... ... .... ... ... .... ... ...
... .... ... ... .... ... ... ... .... .... .... —ள

திருச்சித்தம்பலம் தேவிச்சகாயம் பராசத்தி
கம்பளி சட்டை கயிலாச மூர்த்தி ஞானம் முத்தும். பராசத்தி
கிறுபை உண்டாக வேணும்.

**காலம்**

இல்லை

**குறிப்பு**

''சட்டை முனிவர் ஞானம் 100'' என்ற தலைப்பில் மகால் சுவடி எண் 187இன் மறு சுவடி. பதிப்பாகி பெரிய ஞானக்கோவையில் உள்ளது. 102 பாடல்களைக் கொண்ட நூலில், முதல் ஐந்து பாடல்கள் சுவடியில் இல்லை. தத்துவக் கருத்துக்கள் சித்தர் வரலாறு, யோகம், மெய்ஞான குரு என்பன கூறப்படுகின்றன.

---

வரிசை எண்: 1806 சுவடி எண்: 863-C

# கம்பளிச்சட்டை கயிலாசமுனி கற்ப விதி

ஏடுகள்: 28. சுவடியின் நிலைமை: நல்ல நிலை. பக்கத்திற்கு: 8 வரிகள் பொருள்: வழலை, பூசைவிதி, கற்ப முறைகள் சேர்ந்தது. அளவு: 25.5×3.5 செ.மீ. கி. எண்ணிக்கை: 1500. எழுத்து: தமிழ். ஆசிரியர்: கம்பளிச் சட்டை கயிலாச முனி முழுமை: முற்றுமுளது.

**தொடக்கம்**

பாடுகிறேன் காயகற்ப மைங்கரனே காப்பாம்
பரிவான சின்மயப் பாதங் காப்பு
நாடுகிறேன் சித்தருட பாதங் காப்பு
நாதாந்த மனோன்மணித்தாய் பாதமே காப்பு
.... ... ... .... ... .... ... .... ... .... .... .... ....
.... .... .... ... ... ... .... ... .... ... ... —சு

**முடிவு**

தூரப்பா தொட்டல்லோ முடிவரைக்குஞ் சொன்னேன்
சொல்லாமலொளித்தார்கள் சித்தரெல்லாங்
காரப்பா சித்தரெல்லாங் குருபதத்தைக் காத்தாற்சித்தி
காயசித்தி பாடினதோர் கற்பமுற்றே.

சிவமயம்.

**மூலம்**

இல்லை

**குறிப்பு**

இது சட்ட முனியார் கற்பம் ''100'' என்ற தலைப்பில் மகால் சுவடி எண் 352 (a) சட்டை முனியார் காயாதி கற்பம் 100'' என்ற தலைப்பில் மகால் சுவடி எண் 709, கைலாச சட்டை முனியார் கற்பமுறை என்ற தலைப்பில் மகால் சுவடி எண் 745 (N) யை ஒத்தது. சட்டை முனி கற்பவிதி என்ற சுவடி எண் 26 (a)யிலிருந்து வேறுபட்டது. பதிப்புகள் பல வெளியாகி உள்ளன. ''அகத்தியர் சில்லறைக் கோவையில் 84 ஆவது நூலாகப் பதிப்பாகி உள்ளது. இதில் வழலை, மலங்களை அகற்ற, வாலைப் பூசை, நூல் பெருமை, நூல் பெறும் முறை, கடுக்காய் கரந்தை, சீந்தில், 100 ஆண்டு வேம்பு, கரிவிலை, குப்பைமேணி, செருப்படை, சிவனார் வேம்பு, தூதுவளை, கண்டக் கற்பம், தாம்பூல, சுன்னம், உப்புக்கூட்ட, சித்த உப்புக் சுன்னம், அயச் செம்பு, காயசித்தி, கயச் செந்தூரம், காந்த பற்பம், சூதமணி, வாத சித்தி'' பூநாகச் செந்தூரம், நூல் பெருமை, சித்தர் வரலாறு அஷரி, கற்ப மூலிகை உற்பத்தி விதி, மச்சமுனி போன்ற சித்தர்கள் கண்ட கற்பவிதி, கரு நெல்லி உற்பத்தி, விதி வேதி மரப்பால் உண்ணல், கந்தக பானம், நாத கற்பம் கந்திச் செம்பு, அணிகள் அணியும் விதி, கெந்தி மெழுகு சாபம், வாலை அருள், வாலை பூசை, காய சித்திக்கு வயது, நூல் பெருமை என்ற தலைப்புகள் உள்ளன.

வரிசை எண்: 1807 சுவடி எண்: 864 a

# அகத்தியர் ரெத்தினச் சுருக்கம் நாடி

ஏடுகள்: 5. சுவடியின் நிலைமை: நல்ல நிலை. பக்கத்திற்கு; 6 வரிகள். பொருள்: நாடி (சாத்திரம்) நூல். அளவு; 29×4 செ.மீ. கி. எண்ணிக்கை: 500. எழுத்து; தமிழ். ஆசிரியர்; அகத்தியர். முழுமை: முற்றுமுள்ளது.

**தொடக்கம்**

அனைத்துயிரொன்றென்றெண்ணி
யரும்பசி யெவர்க்கு மாற்றி
மனத்துள்ளே பேதா பேதம்
வஞ்சனை களவும் பொய்யும் க

**முடிவு**

தானது பங்குமுக்குத் தனது நல்லாவணிக்கும்
மானமாம் புரட்டாசிக்கு மற்றைராத்திரியிற் பார்க்கத்
தேனென்ற மூன்று நாடி தெளிவாகக் காணுமென்று
கானமர் முனிவர் சொன்ன கருத்தை நீ கண்டுபாரே ௩௨

நாடி முற்றும்

**காலம்**

இல்லை

**குறிப்பு**

இது மகால் சுவடி எண் 221 (D) போன்றது சுவடி எண் 864 (a) யுடன் கடைசிப் பாடல் ஒத்துள்ளது 32 பாடல்களை உடையது. 18 சித்தர்களின் நாடி சூத்திரத்தில் ''அகத்தியர் நாடி'' என்ற தலைப்பில் உள்ள கடைசிப்பாடல், இச்சுவடியின் 32 ஆம் பாடலுடன் ஒத்துள்ளது. பதிப்பானதாகத் தெரியவில்லை.

வரிசை எண்: 1808 சுவடி எண்: 864 b

# அகத்தியர் பரிபூரணம் 400

ஏடுகள்; 10. சுவடியின் நிலைமை: நல்ல நிலை. பக்கத்திற்கு: 6 வரிகள். பொருள்; நோய்களும், மருந்துசெய்முறைகள். அளவு: 29 × 3 செ.மீ. கி. எண்ணிக்கை; 1000. எழுத்து; தமிழ். ஆசிரியர்: அகத்தியர். முழுமை: முற்றற்றது.

**தொடக்கம்**

பூரணமாய் நிறைந்த பரிபூரணத்தைப் போற்றிப்
புகழ் பெரிய வயித்தியப் பூரணத்தைப்பாடக்
காரணமாய்க் கருவுருவாயெங்குந் தானாய்
கண்மணியினடு வான் கருணை தன்னை க

... .... ... ... .... .... ... ... .... ... .... ...

.... ... ... .... .... .... .... ... ... .... .... ...

**முடிவு**

சித்தமுறுஞ்தலை பாடிக்கும் பித்தமாகுஞ்
சீரான சயரோகந் தனக்குப் பித்தம்
குற்றமில்லை யிதின் குணங்கள் மருந்தாற் றீருங்
குருவான பூரணத்தின் குறிதான் பாரே
அகத்தியர் பரிபூரண நாடி முற்றும். 46

**காலம்**

இல்லை

**குறிப்பு**

பல பதிப்புகளைக் கண்டது, மகால் சுவடிகள் 375 (h), 383, 414 (f) போன்றது. காப்பு, நூல் விவரம் நோய்களறிய, குருநாடி, என்பன,46 பாடல்கள் உள்ளன. மலிவுப்பதிப்பாக இரத்தின நாயகர் & சன்ஸ் மூலம், உரையுடன் வெளி யிட்டுள்ளார்கள்

---

**வரிசை எண்:** 1809 சுவடி எண்: 865

# அகத்தியர் கர்ம சூத்திரம்

ஏடுகள்: 18 சுவடியின் நிலைமை: சிதிலம் பக்கத்திற்கு: 6 வரிகள் பொருள்: பாடலும், உரைநடையும் விரவியது. அளவு: 27×2.5 செ.மீ. கி. எண்ணிக்கை: 1000 எழுத்து: தமிழ். ஆசிரியர்: அகத்தியர். முழுமை: முற்றுமுளது.

**தொடக்கம்**

சீராறுங் கொன்றை சூடும் சிவனிருபாதம் போற்றி
வாரணமுகத்தோன் பாதம் வணங்கிநூற்றறுபதும் சொல்ல
சறாவுல ஞானம் சற்பதிபாதம் போத்தி
காரணமான செஞ்சொல் கரும சூஷ்த்திரம் காற்பாமே.

**முடிவு**

**சாதிலிங்கக் கட்டு**

சாதிலிங்கா கட்டி வாங்கி சுருக்கு குடுக்க சூடன் ஒருபலம், நவச்சாரம் ஒருபலம், சாம்பிராணி ஒருபலம், துருசு ஒருபலம், வெடியுப்பு ஒருபலம், சீனம் ஒருபலம், குங்குலியம் ஒருபலம், வீரம் விராகன், 2, கெந்தகம் விராகன் 4, யிதுவெல்லாம் பொடி பண்ணி, வச்சுக்கொண்டு அடுப்பில் சட்டியை வைத்து மணல் போட்டு அடுப் பில் எரியவிடவும். மணல் மேல் கரண்டிவைத்து, பொடிபோட்டு வறுக்கவும்.

**காலம்**

இல்லை

**குறிப்பு**

இது ''அகத்தியர் சில்லறைக் கோவையில் 24 ஆவதான நூலாக உள்ளது. 150 பாடல்கள் உள்ளன. இது ''கரும சூத்திரம் 300 இலிருந்து வேறுபட்டது இச்சுவடியுடன் வேறு சில ஏடுகளும் கலந்துள்ளன. இதை உரைநடைப்பகுதியால் அறியலாம். கன்மம் தீரும்வழிகள், கடைத் தரமக்களின் செயல்கள், நரகம் நீங்க. யோகச் செயல்கள், உருசெபிக்க, சரக்கு சுத்தி, மருந்துகள் செய்முறைகள் என்பன கூறப் பட்டுள்ளன.

---

வரிசை எண்: 1810 சுவடி எண்: 866

# அகத்தியர்மூலிகை வண்ணம்

ஏடுகள்: 25 சுவடியின் நிலைமை: நல்லநிலை. பக்கத்திற்கு: 8 வரிகள் பொருள்: மூலிகைகளின் பயன்பற்றிய உரைநடை நூல். அளவு: 15×3 செ.மீ. கி.எண்ணிக்கை: 25 எழுத்து: தமிழ். ஆசிரியர் அகத்தியர். முழுமை: முற்றுமுளது.

**தொடக்கம்**

நரிநவ்வால் வேருர், விரையும் அரைத்துண்ண,
கிராணி மூலந்தீரும், சித்திரமூல வேர்ப்பட்டையை
எடுத்து, கிசாயம் செய்து கொடுக்கபித்தம்,
சீதம், பெருவயறு அஷ்த்தி சுரந் தீரும்.

**முடிவு**

துணி அதுக்குள்ளே வைத்துயெட்டு நாள் அதில் வைத்து எடுத்து நிழலுளத்தி பயத்தன்ங்காயி பிராபணம் அஞ்சு விரக் கடை நெடுந்திரியுருட்டி விளக்கில் கொளுத்தி புகையை கபாலத்திலேத்த மூணுவகை பீனிசமும் நீங்கும். ரெண்டு நேரமும் எட்டுநாள் பிடிக்கவும்.

**காலம்**

இல்லை.

**குறிப்பு**

மகால் சுவடி 1791 320 (D) 642 ஆகியவற்றிலிருந்து மாறுபட்டது. உரைநடையில் அமைந்துள்ளது. பதிப்பானதாகத் தெரியவில்லை. பல மூலிகைகளின் பயன்பாடுகள், தீரும் நோய்கள், மருந்து செய்முறைகள் என்பன விளக்கப்பட்டுள்ளன.

வரிசை எண்: 1811 சுவடி எண்: 867

# அகத்தியர் கைபிடி சாஸ்த்திரம்

ஏடுகள்: 8. சுவடியின் நிலைமை: நல்லநிலை. பக்கத்திற்கு: 5. வரிகள் பொருள்: நாடி நூல். அளவு: 24.5×3. செ.மீ கி. எண்ணிக்கை: 500. எழுத்து: தமிழ். ஆசிரியர்: அகத்தியர். முழுமை: முற்றுமுளது.

**தொடக்கம்**

''கரமதில் நாடி தொட்டு கடவுளர் தன்நருளிரல்
பார்க்கில் பெருவிரல் மூலந்தன்னில் பிடித்ததுடன்
நடுவே தொட்டால் ஒரு விரல்லோடி வாதம்
திருவிரல்லோடி பித்தம் திருவிரல் மூன்று மோடி
சிலேற்றும நாடியாமே'' —க

**முடிவு**

படியுயர் வாத நாடி பகுளநசுநெளகாடை யொடில்
கடையற வீங்குங்கைகால் தனியெலும்பு நய்யும்
உடல் சந்துளமயக்க முடம் பெல்லாந் தினவு தின்னும்
புடையன் சில விஷங்களென்று பெரி வரமுந்நி சொன்னார். —உயள

**காலம்**

இல்லை

**குறிப்பு**

நாடியைப்பற்றிய விளக்கம் தரும் சிறு சுவடியாகும். மூன்று வகை நாடிகளின் நடை நோய்களை, நாடியின் மூலம் அறிவது என்பன உள்ளன. முதல்பாடல் மகால் சுவடி எண் 294 (d) யின் முதல் பாடலை ஒத்துள்ளது.

---

வரிசை எண்: 1812 சுவடி எண்: 868.

# அகத்தியர் பல திரட்டு நாடி நிதானம்

ஏடுகள்: 103. சுவடியின் நிலைமை: சிதிலம். பக்கத்திற்கு: 8 வரிகள். பொருள்: நாடி நூல், மருந்து செய்முறைகளின் தொகுப்பு அளவு: 31×3 செ.மீ. கி. எண்ணிக்கை: 2000 எழுத்து: தமிழ். ஆசிரியர்: அகத்தியர். முழுமை: முற்றற்றது.

**தொடக்கம்**

வாதமும் பித்த மையயம் மைத்துள்ள குணபாடத்தைத்
திதற முனிவர் நூலை சேர்ந்து பின் திரட்டாய்க் கூட்டி
யோதுவேன் விசாலத்தால் யொழுங் குடன் கண்டு கொள்ள
வாது சேர் வயித்திய யோர்க்கு வல்லிருள் விளக்க மென்றே. க

**முடிவு**

தலமான மிறுகாமல் தயிலஞ் சொல்வேன்
நண்ணவேயாமல்கச் சாறுபடிரண்டு
நலமான காணிச்சார்படிதான்றண்டு
பெண்ணவே குமரிச் சார்படிதான் றண்டு
பாங்கான செவ்விள நீர் படிதான் ரெண்டே —எசஅ

**காலம்**

இல்லை

**குறிப்பு**

மகால் சுவடியின் முதல்பாடல், அகத்தியர் குணவாகட நோயின் சாரத்தில் உள்ள ஆறாம் பாடலாக உள்ளது. கடைசிப்பாடல் தைலம் செய்முறைக் கூறு கின்றது. பதிப்பானதாகத் தெரியவில்லை.

---

வரிசை எண்: 1813 சுவடி எண் 869

# வால்மீகர் நாடி சூத்திரம்

ஏடுகள்: 4. சுவடியின் நிலைமை: மிகப்பழுது. பக்கத்திற்கு: 5 வரிகள். பொருள்: நாடி நூல். அளவு: 24.5 × 2.5 செ.மீ. கி.எண்ணிக்கை: 100. எழுத்து: தமிழ். ஆசிரியர்: வால்மீகர். முழுமை: முற்றற்றது.

**தொடக்கம்**

ஒட்டியவ ............ யுரந்திடும் பித்தத்தோடே
முடியே நடக்குமாகிலுக .......... திடும்
பிணி .......... க் கேளிர். ராடியகால்கள்
ரண்டும் சத்துடனுளை உண்டா குங் .........

**முடிவு**

யெலிவிஷங்களென்று பகரந்தன் மேலோர் தானே (ரு ய)
ஒரு பிறம் விரையே வீங்கு உன்னியெளுத்து வாங்கி
ஓறு ......... மண்ட வாய்வு பின்னுங் உரைக்கலாம்
கேளீர் .... ... ... .... .... ....

**காலம்**

இல்லை

### குறிப்பு

மசால் சுவடியில் முதல் பாடல் — காப்புச் செய்யுள் இல்லை. கடைசிப்பாடலும் தலைப்புக்குத் தொடர் பற்று உள்ளது. எனவே பல பாடல்கள் கலந்துள்ளதாக உணரலாம் பதிப்பானதாகத் தெரியவில்லை.

---

வரிசை எண்: 1814 சுவடி எண்: 870

## நாடிக்கவி

ஏடுகள்: 3. சுவடியின் நிலைமை: சிதிலம். பக்கத்திற்கு: 6 வரிகள். பொருள்: நாடி நூல். அளவு: 39×3.5 செ.மீ. கி. எண்ணிக்கை: 500. எழுத்து: தமிழ். ஆசிரியர்: நாகலிங்கம்பிள்ளை. முழுமை: முற்றுமுளது.

### தொடக்கம்

ஐங்கரன் றன்னை அருள் புரிந்தென்னையாள
சங்கரன்பாக தையலானந்தி
வள்ளி சொல்குமரன் மலர்ப்பதமிரஞ்சி
நள்ளிருள் தான் நாடி நூலினை கூறவே கேளு.

### முடிவு

எண்ணெயில் தலையினொடு யீரமாய் நின்ற போது
முன்னுநறண்ண ரவிலோடு மூன்றவன் பசியினோடு
திண்ணமாய் நடுக்கும் போது
சித்தினியாம் உண்டபோது
பண்ணிய நாடி பார்க்கில்
பலித்திடா தென்று செப்பே

### காலம்

இல்லை

### குறிப்பு

இந்நூலில் நாடிபார்க்கின்ற வேளை குறியும், மாசம், மந்திரம் முதலியன கூறப்பட்டுள்ளன. நாடிநூலைப்படித்த தாக்கத்தால் இந்நூலை செய்திருத்தல் கூடும். பதிப்பானதாகத் தெரியவில்லை.

---

வரிசை எண்: 1815 சுவடி எண்: 871

## நாடிக்கவி

ஏடுகள்: 5 சுவடியின் நிலைமை: நல்லநிலை. பக்கத்திற்கு: 7 வரிசை பொருள்: நாடிநூல் அளவு: 25×3 செ.மீ. கி.எண்ணிக்கை: 500 எழுத்து: தமிழ். ஆசிரியர்: நாகலிங்கம் பிள்ளை. முழுமை: முற்றுமுளது.

**குறிப்பு**

இந்நூல் M.No. 87. ஐப்போன்றது. பாட. வேறுபாடுகள் (பேதங்கள்) காணப் படுகின்றன.

---

வரிசை எண்: 1816 சுவடி எண்: 872

## நாடியின்குணவாகடம் (1500)

ஏடுகள்: 11 சுவடியின் நிலைமை: நல்லநிலை. பக்கத்திற்கு: 6 வரிகள் பொருள்: நாடி நூல் அளவு: 24.5×6 செ.மீ. கி.எண்ணிக்கை: 1000. எழுத்து: தமிழ். ஆசிரியர் இன்னாரென அறிய இயலவில்லை. முழுமை: முற்றற்றது.

**தொடக்கம்**

பாகுடன் கிணேசன் பாதம்
பணிந்து முற்குணங்களாய்ந்து
வாகடச் சுவடி யெல்லாம்
வகை வகை தொகுத்துப்பார்த்து
ஆகம விதியின் சூலா
லடர்ந்திடும் வியாதிக் கெல்லாம்
போகாற் மருந்து சொல்வோம்
புலத்தியா பொருந்தி கேளே.

— க

**முடிவு**

பழுதற்ற நிலையில் ஏடுகள் உள்ளன.

**குறிப்பு**

''18 சித்தர் நாடி சாத்திரத்தில் உள்ள'' காவிய நாடி என்ற பகுதியின் முதல் பாடல், மகால் சுவடியின் முதல் பாடலுடன் பொருந்துகின்றது. நாடிகளின் வகைகள், நாடிகளின் இடம், மூன்று வகை நாடிகளின் இயல்புகள், நாடியின் வண்ணம், ஐம்பூதங்களின் வகைகள், குற்றங்கள், குற்றங்களின் இயல்பு என்பன உள்ளன.

---

வரிசை எண் 1817 சுவடி எண் 873

## வைத்தியம் 205லிருந்து நாடிக் குறிப்பு

ஏடுகள்: 2. சுவடியின் நிலைமை: நல்லநிலை. பக்கத்திற்கு: 7 வரிகள். பொருள்: விரவியது. அளவு: 24.5×3 செ.மீ. கி. எண்ணிக்கை: 50. எழுத்து: தமிழ். ஆசிரியர்: அறிய இயலவில்லை. முழுமை: முற்றற்றது.

**தொடக்கம்**

பூரணமாம் மும்மூலம் பொரியிற் சூடாம்
புகையெழும்பி மேகமதாய் சிரசில்ச் சூடாம்
காரணமாய் நீர்க்கலந்து கண்ணில் ரோகம்
கனலெழுந்த வாயுவினால் சூலைரோகமாவார் — க

**முடிவு**

திசைவாய்வாலே மருந்தினால் தீராது
கற்பித்ததாலே
மக்களே கருமத்தே நிவிர்த்திசெய்து
யுறுந்ததவமே மருந்தேயிந்த யெறனூாத்தஞ்சில்
பூடலாஞ் சித்தரைப் போலாடலாமே. — உ

**காலம்**

இல்லை

**குறிப்பு**

இச்சுவடியின் முதல் பாடல் மகால் சுவடி எண் 856 (a) யின் முதல் பாடலாக உள்ளது. பதிப்பானததாகத் தெரியவில்லை.

---

வரிசை எண்: 1818 சுவடி எண்: 847

# தன்வந்திரி சூத்திரம் - 25

ஏடுகள்: 8. சுவடியின் நிலைமை: நல்லநிலை. பக்கத்திற்கு: 5 வரிகள். பொருள்: தத்துவம். அளவு: 39.5×3 செ.மீ. கி. எண்ணிக்கை 500. எழுத்து: தமிழ். ஆசிரியர்: தன்வந்திரி. முழுமை: முற்றற்றது.

**தொடக்கம்**

சீர்கொண்டகரி முகமும் அய்ந்துகையுஞ்
சேந்த ஆபரணமுடன் ஒத்தைக் கொம்பும்
வேர்கொண்ட விமலருக்கு கலிதான் தீத்த
வேலனுக்குமுன் புறத்தோன் அமரர் மெச்ச — க

**முடிவு**

அஞ்சான நந்தீசரருனிச் செய்த
அரும்பொருளை தன்மந்திரியு பதேசித்தார்
கஞ்சமலர்த்திருப்புயனே யருளக் கேளு
காட்சித்தர வுந்தனுச்கு யானுக்கு யானுஞ் சொன்னேன்.
வஞ்சகமாய்த் திரியாதே குருவைவிட்டு
வானென்ற பொறிந்து நின்றாப் போல
தஞ்சமென வந்தடைந்து சரணம் போத்த
தயவுசெய்யுஞ் சூத்திரந்தான் யிருபத்தஞ்சே. உயரு

முற்றும்

குருபாதமே துணை

**காலம்**

இல்லை

**குறிப்பு**

இதில் 25 பாடல்கள் உள்ளன. நந்தீசரின் நாடி நூலை அடிப்படையாகக் கொண்டு, இந்நூல் இயற்றப்பட்டது என்று கடைசி பாடலில் விளக்கம் உள்ளது.

---

வரிசை எண்: 1819 சுவடி எண்: 875

## சட்டை முனியார் கல்பம்

ஏடுகள்: 10. சுவடியின் நிலைமை: நல்லநிலை. பக்கத்திற்கு: 5 வரிகள். பொருள்: மூலிகை மருத்துவம் உரைநடை. அளவு: 25×3 செ.மீ. கி. எண்ணிக்கை: 100. எழுத்து: தமிழ். ஆசிரியர்: சட்டைமுனி. முழுமை: முற்றுமுளது.

**தொடக்கம்**

கரிசாலைசாந் நெய்யோடே மத்தித்து பெருவிரலில் கொண்டு அண்ணாக்கில் விறலை யொட்டி சுழத்தயிலே கபாலத்தில் கபமெல்லாம் வீழும். அப்படிக்கி செய்வாயாகில் நலமான குணத்தையினி சொல்றேனே.

**முடிவு**

**இருமலுக்கு மருந்து**

கடுக்காய்க் கொட்டையைத் தட்டி தோலையெடுத்து வாயிலடக்கிக் கொண்டு உமிழ்நீர் முழுங்க இருமல் நிற்கும்.

**காலம்**

இல்லை

**குறிப்பு**

மூலிகைகளின் மருத்துவப் பயன்களை உரைநடையில் எடுத்துரைக்கும் நூல். ''சட்டைமுனி கற்பம்'' என்ற நூலுடன் வேறுபட்டது. பல்வேறு வகை மூலிகை மருத்துவத்தின் தொகுப்பு நூல்.

---

வரிசை எண்: 1820 876

## அஞ்சனமை

ஏடுகள்: 3. சுவடியின் நிலைமை: சிதிலம். பக்கத்திற்கு: 7 வரிகள். பொருள்: நஞ்சுநூல். அளவு: 25×2.5 செ.மீ. கி. எண்ணிக்கை: 100. எழுத்து: தமிழ். ஆசிரியர்: இன்னாரென அறிய இயலவில்லை. முழுமை: முற்றுமுளது.

**தொடக்கம்**

...............மே சுவற்னகத்துயிலுஞ் சேடமுதல்
யோர்பூத்த நாகவகை யெட்டுக்குஞ்
சீர்பூத்த அரியதொரு மூக்கனுக்கும்
அஞ்சி பயந்தொடுங்கும் விரியன் வகை

**முடிவு**

மொழி தட்பிடினும் யென்சொல் மொழி
தவறாது. யிந்தமே யிப்பேர் சிந்தாமணி
யெனவுஞ் செப்பினோமிம் மருந்து சிந்தா குலமெல்லாந்
தீருங்காண். மைந்தாகேள் மோருடனே சோறுண்டு
மொய்குழலீர் கைய்ப்பு. உப்பு, சாறும், புகையுந்தவிர்.

**காலம்**

இல்லை

**குறிப்பு**

நஞ்சு நூல் பற்றியது. பதிப்பானதாகத் தெரியவில்லை. பாம்புகளின் வகைகள், இயல்புகள் என்பன கூறப்பட்டுள்ளன. சிந்தாமணி என்றும் இந்நூலுக்குப் பெயருள்ளதாக அறியலாம். பதிப்பானதாகத் தெரியவில்லை.

---

**வரிசை எண்:** 1821 சுவடி எண்: 871.

## கைலாசநாதர் ஞானம் 66

ஏடுகள்: 41. சுவடியின் நிலைமை: மிகச்சிதிலம். பக்கத்திற்கு: 5. வரிகள் பொருள்: தத்துவம். அளவு: 24×4 செ.மீ. கி. எண்ணிக்கை: 2000. எழுத்து: தமிழ். ஆசிரியர்: கைலாச நாதர் முழுமை: முற்றற்றது.

**தொடக்கம்**

கயிலாச பரா பரத்திலென்னையாண்ட
கடவுளெனுந் தெஷசணாமூர்த்தி பாதம்
கயிலகசத் தெனயீன்ற ஆயிபாதங்
கருணையுடன் போத்தி நித்தம் ஞானஞ் சொல்வேன்.

— க

**முடிவு**

கெழுவிள்ளாகத் திரிசானு வித்தை
மார்க்கம் விரிவியந்தச் சமாதியிலே
நின்றிருக்கும் ........... நள்ளாகத்த ............
............ னையனு ............ சஞ்சாற ..................

திருச்சிற்றம் பலம்

**காலம்**

இல்லை

**குறிப்பு**

பெரிய ஞானக்கோவையில்வரும் ''சட்ட முனி பின் ஞானம் 100'' இன் முதல் பாடல் மகால் சுவடியின் 66 ஆம் பாடலை ஒத்துள்ளது. தத்துவக்கருத்துக்களைக் கொண்டுள்ளது. பாடல்களே மகால் சுவடியில் உள்ளன. பெரிய ஞானக்கோவை ''சட்ட முனி பின் ஞானம் 100'' என்ற தலைப்பில் பல பதிப்புகளைக் கண்டுள்ளது.

---

வரிசை எண்: 1822 சுவடி எண்: 878

# மேகவியாதி வரலாறு

ஏடுகள்: 55. சுவடியின் நிலைமை: நல்லநிலை. பக்கத்திற்கு: 6 வரிகள் பொருள்: மேக நோயின் காரணம், வரும் வழி என்பன அளவு: 24×2.5 செ.மீ கி. எண்ணிக்கை: 3000. எழுத்து: தமிழ். ஆசிரியர்: அறிய இயலவில்லை. முழுமை: முற்றற்றது.

**தொடக்கம்**

தானென்ற மேகங்கள் ரெண்டு பத்தும்
சமானுடன் அபானனுவாகும் போது
கானென்ற தேவதத்தன் நீரை மஞ்சி
கடிதானசிலேற்பனத்தில் புகைந்து சாடி

**முடிவு**

தாமப்பா பீங்கானில்ப்பதனம் பண்ணு
தப்பாமல் மண்டலந்தான் பாக்களவு கொள்.........
அளவாகக் கொண்டுவரத்தீரும் நோய்கேள் அப்பனே சூசிகா.

**காலம்**

இல்லை

**குறிப்பு**

இதில் சிலேற்பனத்தில் மேகம் பத்து, மேகத்துக்கு பவளபற்பம், வெள்ளி பற்பம், சிங்கிபற்பம், முதலியன கூறப்பட்டுள்ளன. மேகநோய் வரும்வழி, மருத்துவம் கூறப்பட்டுள்ளது. தப குற்றத்தால் ஏற்படும் மேக நோய்கள் பற்றிய செய்திகள் உள்ளன. பதிப்பானதாகத் தெரியவில்லை.

---

வரிசை எண்: 1823 சுவடி எண்: 879

# கர்மகாண்டம்

ஏடுகள்: 15. சுவடியின் நிலைமை: நல்லநிலை. பக்கத்திற்கு: 6 வரிகள். பொருள்: நோய் வரலாறு. அளவு: 24 × 3 செ.மீ. கி. எண்ணிக்கை: 500. எழுத்து: தமிழ். ஆசிரியர்: அறிய இயலவில்லை. முழுமை: முற்றுமுளது.

**தொடக்கம்:**

பூரணமாய் மூலமுதலாறாதாரம்
புவியஷ்ட்டந் திசை வாய்வு நாடி மூன்றுங்
காரணமாயிடை பின்னாய்ச்சுழினையாகிக்
கலந்து நின்றவாதபித்த சிலேற்பனமுமாகி க

**முடிவு**

கற்றுப் போங்கைய்காலில்ச் சூலைக்கட்டு
கலப்புக்கும் வகுத்துவலிகாணாதோடும்
பறந்தி நின்ற வயத்திலுள்ள வியாதியெல்லாம்
பறக்குமடா யின்னமொன்று பகரக்கேளே. உஎ

**காலம்**

இல்லை

**குறிப்பு**

இந்நூலில் கற்பநிவற்த்தி, நில ஆவாரைச் சூரணம், மேகங்களிருபதுக்கும் கஸ்தூரி எண்ணெய் கெற்பரோகது விதிரண்ணெய் நல்லாரைச் சூரணம் என்பன கூறப்பட்டுள்ளன. ''கன்ம காண்டம் 300''என்றநூலிலிருந்து இச்சுவடி வேறுபட்டது. ஆயின் பதிப்பான நூலின் முதல்பாடலும், மகால் சுவடியின் முதல்பாடலும் ஒத்துள்ளன. மகால் சுவடி எண் 9,இதிருலிந்து வேறானது.

---

வரிசை எண்: 1824 சுவடி எண்: 880

# மூலக்கிராணியின் குணம்

ஏடுகள்: 11. சுவடியின் நிலைமை: நல்லநிலை. பக்கத்திற்கு: 6 வரிகள். பொருள்: நோயின் இயல்பும், வரலாறும் அளவு: 25×3 செ.மீ. கி. எண்ணிக்கை: 500. எழுத்து: தமிழ். ஆசிரியர்: அறிய இயலவில்லை. முழுமை: முற்றுமுளது.

**தொடக்கம்**

தோணப்பா மலந்தான் வீழிற்சுருக்கி
முன்முகாயைப் போலே
வாணப்பா அபானந்தன்னை
அமுங்கவே யிருக்கும் பாரே சுசு

**முடிவு**

''வகை ஆய்ந்து பாத்து வளர்ந்திடும்
நோய் கட்கெல்லாம் — மணிமந்திரம்
அவிள்தங்கள் வளந்திடுஞ்சறக்கை
யெல்லாம் வகை வகை சுத்திகேளு
வளர்ந்திடும் பிணிகட் கெல்லாம்
மருந்தினிலொழிங்காணே'' கூஉ
நாடி முற்றும்

**காலம்**

இல்லை

**குறிப்பு**

மூலம், கழிச்சல் என்ற நோய்களின் இயல்புகள். வரும்வழி, வரலாறு என்பன உள்ளன. மணி, மந்திரம், மருந்து என்ற முறைகள் பற்றி சுவடியின் கடைசிப் பாடலில் வருகின்றது. பதிப்பானதாகத் தெரிய வில்லை.

---

வரிசை எண்: 1825 வரிசை எண்: 881

# சத்தியாரூடம்

ஏடுகள் 60. சுவடியின் நிலைமை: சிதிலம். பக்கத்திற்கு: 5 வரிகள். பொருள்: நஞ்சு நூல் பாட்டும், உரைநடையும் விரவியது அளவு: 29×3 செ.மீ. கி. எண்ணிக்கை: 3000. எழுத்து: தமிழ். ஆசிரியர்: அறிய இயலவில்லை. முழுமை. முற்றற்றது.

**தொடக்கம்**

காப்பு

வெத்தியர் தவத்தோன் கும்ப மெய்முனி பகதத்தைப் பேற்றி
சத்தியா ரூடந்தன்னில் தரும பொருள் தன்னையாய்ந்து
... .... ... .... .... ... ... .... .... ....

நூல்

பாதிமதியினி வெளியானவொளியானார் கஞ்சப் பதம்
போற்றியே யுலகில் பருவமாக
ஆதிபரா பரையுமை மாதங்கி சத்தி
யாரூட நீதிநெறி யறிவைக் கேளு.

### முடிவு

சூடுகொண்டால் மேக கொண்டால் நன்றான
மருந்து கொண்டால் வீரு கொண்டால் பாடான
செந்தூரம் வெற்பு. இதுக்குக்கிசாயம் அருகன்வேர்
மிளகு, கூகைநீர், மகிழம்பு, அதிமதுரம் அரைத்துப்
போட்டு சுண்டவைத்து புது பசுவெண்ணெய்
போட்டு சாய்பிடவும்.

### காலம்

இல்லை

### குறிப்பு

மகால் சுவடிஎண் 631 இல் முதல் பாடலுடன், இச்சுவடியின் முதல் பாடல் ஒத்துள்ளது. சத்தியாரூடம் என்ற பெயரில் நஞ்சு நூல் பதிப்பாகி உள்ளது இச்சுவடி, பதிப்பான நூலிலிருந்து வேறானது. இது கடைசிப் பகுதியானது உரை நடையில் உள்ளது. இதற்கும் சத்தியாரூடத்திற்கும் பொருத்தமில்லாமல் உள்ளது.

---

வரிசை எண்: 1826 சுவடி எண்: 882

## வைத்தியதர்க்கம்

ஏடுகள்: 2. சுவடியின் நிலைமை: நல்லநிலை. பக்கத்திற்கு: 7 வரிகள் பொருள்: முப்பு பற்றியது அளவு: 24×3 செ.மீ. கி. எண்ணிக்கை 100. எழுத்து: தமிழ். ஆசிரியர்: அறிய இயலவில்லை. முழுமை: முற்றுமுளது.

### தொடக்கம்

பார்க்கயிலே வயித்திலெதுத் தானாகில்
பருசுடனே முப்பூவின் விபரங் கேளு
சேர்க்கையுடன் குரு முறையைச்
சொன்னானாகில் செம்மையுடன்

—க

### முடிவு

கண்ணப்பா கண்ணரியார் பூணப்பெற்ற
கபடமுள்ள வேடமதை கறுத்தாய்ப் பூண்டு
விண்ணப்பா அறியாத சித்தர் கோடி
வீணருடன் பேசாதேயிருந்து கொண்டு
தண்ணப்பா தன்னிலையேதானே கண்டு
சமத்தாகப் பூரணத்தில் தனதாய் நில்லே.

—ரு

வரிசை எண்: 1827 சுவடி எண்: 883

# வைத்தியத் திரட்டு

ஏடுகள்: 30. சுவடியின் நிலைமை: மிகச்சிதிலம். பக்கத்திற்கு: 8 வரிகள். பொருள்: பாட்டும், உரைநடையும் விரவியது. அளவு: 27.5×3 செ.மீ. கி. எண்ணிக்கை: 2000. எழுத்து: தமிழ். ஆசிரியர்: பலர். முழுமை: முற்றற்றது.

**தொடக்கம்**

.... .... .... .... .... ... .... ... ...

குளிகை சொல்லக் கேளு
கருவான கெவுரியது ... ... முளக்கதுவும்
அதிலேபாதி திரமாக உளுந்ததுவும்,
நேரப்பா விரப்பாயிரு சரக்கு கல்வத்திட்டு
... .... மாக யெருக்கன்பால் தன்னாலாட்டி

**முடிவு**

பிரமேகத்துக்கு பொது பிரயோகம்

ஒருபலம் சீனாக்காரத்தை ஆவின்பாலாலாட்டி வில்லை தட்டி காயவச்சு ஓட்டிலிட்டு சீலைமண் புடம்போட்டு வேளைக்கு ஒரு விராகனடை வீதம் யெலுமிச்சபழம் ... .... .... ....... ... ... .... .... .... .... ...

**காலம்**

இல்லை

**குறிப்பு**

சுவடியின் தலைப்பு ஏடுகள் சிதைந்துள்ளதால் நூல் இன்னதென்று அறிய இயல வில்லை. மகால் சுவடி எண் 859ஐப் போன்றது.

---

வரிசை எண்: 1828 சுவடி எண்: 884

# வைத்தியத் திரட்டு

ஏடுகள்: 15. சுவடியின் நிலைமை: நல்லநிலை. பக்கத்திற்கு: 6 வரிகள். பொருள்: தொகுப்பு நூல், பாடலும் உரைநடையும் விரவியது. அளவு: 25×2.5 செ.மீ. கி. எண்ணிக்கை: 500. எழுத்து: தமிழ். ஆசிரியர்: அறிய இயலவில்லை. முழுமை: முற்றுமுளது.

**தொடக்கம்**

கெத்தகதைலம், மூவாறு சூலைக்கு

ஒவ்வாது சூலை மூவாறுந்திர உரைக்கிறேன்
கெந்தக தயிலந் தானுஞ்
செவ்வான கெந்தியப்பா களஞ்சிபத்து
சிவந்த பசுவின் நெய்யாலே

### முடிவு

ஆவாரைப் பட்டை பூ வேர் பிடித்து தூள்ப்பண்ணி கோணியில் வைத்து நடுவில் வைய்த்து படுகையாய் வைத்து சிசபுடம் போடவும். பற்பமாகும். வெள்வங்கம், கருவங்கம் ரெண்டுயிந்தபடி போடவும் பற்பம்.

### காலம்

இல்லை

### குறிப்பு

இதில் சுடர்கால அஞ்சனம், நேத்திரத்துக்கு, கண் பூவுக்கு குளிகை, எலிகடிக்கு, அப்பிரசச் செர்தூரம், நிலப்பூவாரைச் சூரணம் முதலியன கூறப்பட்டுள்ளன. சுவடி எண் 859ஐப் போன்றது.

---

வரிசை எண்: 1829 சுவடி எண்: 885

## வைத்தியத் திரட்டு

ஏடுகள்: 19. சுவடியின் நிலைமை: ஓரங்கள் சிதைந்துள்ளன. பக்கத்திற்கு: 7 வரிகள் பொருள்: தொகுப்பு நூல் உரைநடையில் உள்ளது. அளவு: 20.5×3செ. மீ. கி. எண்ணிக்கை: 500. எழுத்து: தமிழ். ஆசிரியர்: அறிய இயலவில்லை முழுமை: முற்றற்றது.

### தொடக்கம்

தாகம் விராகன் சு, கல்வத்தில் போட்டு மறைமறையா
விழுந்து மற்ற நறுக்கி சாற் பிளிந்து விட்டு
அறைத்து நா-கை- அரைத்து வில்லைத் தட்டி
நிலகாச்சல் போட்டு காய்ந்த பின் ஓட்டில்
வைத்து சிலை மண் செய்து, விறாட்டி.........

### முடிவு

.... ... .... ... ... ... .... .... .... ...
மூனு கூடை வைத்துக் கொண்டுயெறி .... ... .... ...
.... ... ... .... விளக்கெண்ணை படிக, இருளிபடி சர்க்க,
மஞ்சநுணாச் சாற்படிம் சேர்த்து .... ... ... .... ...
கை, கால் சொறி சிரங்கு ஷ பத்தியமில்லை.

**காலம்**

இல்லை

**குறிப்பு:**

மகால் சுவடி எண் 884ஐப் போன்றது

---

வரிசை எண்: 1830 சுவடி எண்: 886

# வைத்தியத் திரட்டு

ஏடுகள்: 24. சுவடியின் நிலைமை: நல்லநிலை. பக்கத்திற்கு: 7 வரிகள். பொருள்: தொகுப்பு நூல் மருந்து செய்முறைகள். அளவு: 27 × 3 செ.மீ. கி. எண்ணிக்கை: 2000. எழுத்து: தமிழ். ஆசிரியர்: தொகுப்பு நூல். முழுமை: முற்றுமுளது.

**தொடக்கம்**

புண்களுக்கு களிம்பு வகை

கண்டுபார் களிம்புக்கு வகையே கேளு
கடுமிரதம் துத்தமொடு காசுக் கட்டி
பண்டிலுள்ள வெள்ளைக் குங்குலியம் நேராய்
பதியவே ரசமாளக் கல்வதி தாட்டி

**முடிவு**

கெற்ப நோய்

காரப்பா குருபதத்தைச
சகுணமாய் போற்றி
கற்பூரதீபமதில் கருத்தை வைத்து
சாரப்பா மதியமுந்தம் பானம் பண்ண
சதா போதை .... ... .... .... ... ... ... ...
பூணென்று சரக்கெடுத்து

**காலம்**

இல்லை

**குறிப்பு:**

மகால் சுவடி எண் 884ஐப் போல உள்ளது. (சூலக நோய் பற்றிய பாடல் உள்ளது)

---

வரிசை எண்: 1831 சுவடி எண்: 887

# கெர்பக்கோள் - 16

ஏடுகள்: 25. சுவடியின் நிலைமை: நல்ல நிலை. பக்கத்திற்கு: 8 வரிகள். பொருள்: சூல் மருத்துவம். அளவு: 30 × 3 செ.மீ. கி. எண்ணிக்கை: 1500. எழுத்து தமிழ். ஆசிரியர்: அறிய இயலவில்லை. முழுமை: முற்றுமுளது.

**தொடக்கம்:**

பாரப்பா பெண்மலடாங் கெற்பக் கோளின்
பக்குவத்தைச் சொல்லுகிறேன் பண்பாய்க் கேளு
ஆரப்பா ஆண்மலடே ஆகுமல்லாமல்
அப்பனே பெண்மலடு ஆறுமில்லை —க

**முடிவு**

அதுவாகு மிதுவாகும் மென்றுயெண்ணி
அலைந்தலைந்து திரியாமல் அருளை னோக்கி
பொதுவாகும் நிலவு கொண்டுயிருப்பாயாகில்
புத்தி சித்தி முத்தி முதல் புனிதமாமே. —யசுா

**காலம்**

இல்லை:

**குறிப்பு**

இதில் மூலிகை விபரம், செந்தக குழித்தைலம், நேத்திர ரோகம் 96, பஞ்சபூத சரக்கு விபரம், தெட்சிணாமூர்த்தி அஷ்டகர்ம மூலிகை விபரம் முதலியன உதிரி ஏடுகளாக கூறப்பட்டுள்ளன. பாடல்களில் சூல் மருத்துவம் பற்றிக் கூறப்படுகின்றது. மலட்டுத் தன்மை, மகப்பேறு என்பன இடம் பெறுகின்றன.

---

வரிசை எண்: 1832 சுவடி எண்: 888

# வைத்தியத் திரட்டு

ஏடுகள்: 15. சுவடியின் நிலைமை: சிதிலம். பக்கத்திற்கு: 6 வரிகள். பொருள்: தொகுப்பு நூல் உரைநடையில் உள்ளது. அளவு: 20×3 செ.மீ. கி. எண்ணிக்கை: 500. ஆசிரியர்: இன்னாரென அறிய இயல வில்லை. எழுத்து: தமிழ். முழுமை: முற்றற்றது

**தொடக்கம்**

**விக்கலுக்கு**

அதிமதுரம், யேலம், சுக்கு யிந்த கிசாயம்
போட்டு சீனி போட்டு சாப்பிடவும்

**சுழி மாந்தத்துக்கு**

வேப்பண்ணெய் சேர் ¼ (வ)
நீலிவேர் பூ பலம் ச (4)
பூண்டு பழம் க (1)

**முடிவு**

பிசைந்து வைத்து உலத்தி நெய்யி விட்டு
வறுத்து சூரணம் பண்ணி சீனி சர்க்கரை கலந்து
வைப்துக் கொண்டு மூணு விரல் கொண்டது
சாப்பிட்டு வரவும்.

**காலம்**

இல்லை

**குறிப்பு**

இதில் சில்லரை வைத்தியங்கள் கூறப்பட்டுள்ளன.

---

வரிசை எண்: 1833 சுவடி எண்: 889

# வைத்தியத் திரட்டு

ஏடுகள்: 24. சுவடியின் நிலைமை: சிதிலம். பக்கத்திற்கு: 6 வரிகள். பொருள் தொகுப்புநூல் உரைநடை. அளவு: 21×2.5 செ.மீ. கி. எண்ணிக்கை 1000. எழுத்து: தமிழ். ஆசிரியர்: அறிய இயலவில்லை. முழுமை: முற்றற்றது.

**தொடக்கம்**

காப்பு

"வாக்குண்டாம் நல்ல மனமுண்டா மாமலரா
நோக்கொண்டா மேனி நொடுங்காது — பூக்கொண்டு
துப்பா திருமேனித் தும்பிக்கை யான்பாதம்
தப்பாமற் சார்வார் தமக்கு"

நூல்

முள்ளங்கிச்சாறுபடி —க நெரிஞ்சிச்சாறுபடி —க
கண்டங்கத்திரிச்சாறுபடி —க எலுமிச்சம் பழச்சாறுபடி —க

**முடிவு**

சாதி னாற்தஞ்பழச் சாறுபடி 3, யிந்துப்பு விராகன், திப்பிலி, பெருங் காயம் சுக்கு, முளகு

**காலம்**

இல்லை

**குறிப்பு**

உதிரி ஏடுகளில் சில்லரை வைத்தியங்கள் கூறப்பட்டுள்ளன. முதல்பாடல் ஔவையாருடையது; இங்கு பயன் படுத்தப்படுள்ளது.

---

வரிசை எண்: 834 சுவடி எண்: 890

# வைத்தியத் திரட்டு

ஏடுகள்: 114. சுவடியின் நிலைமை: சிதிலம். பக்கத்திற்கு: 6 வரிகள். பொருள்: தொகுப்பு நூல். அளவு: 27 × 2.5 செ.மீ. கி. எண்ணிக்கை: 2000. எழுத்து: தமிழ். ஆசிரியர்: அறிய இயலவில்லை. முழுமை: முற்றுமுளது.

**தொடக்கம்:**

**காப்பு**

''வாக்குண்டாம் நல்ல மனமுண்டா மாமலரா
நோக்கொண்டா மேனி நொடுங்காது — பூக்கொண்டு
துப்பா திருமேனித் தும்பிக்கை யான்பாதம்
தப்பாமற் சார் வார் தமக்கு''

**நூல்** (தலையிடினோவுக்கு)

செந்சந்தனம் யிருவேலிவேர், தேவதாரம், சுக்கு
மிளகு, நெயிக்கொட்டான் பலம் $\frac{3}{4}$ (ரூ)
இலுப்பைப்புண்ணாக்கு இது வெல்லாம் பொடிசெய்து

**முடிவு**

.... .... ... நல்லல் இருதோளி தாணிக்காய்
வட்டமுலை தாமரைக்கு உளமது அரளியிரு
கடுக்காய் னாவிசிறு கீரை நல்குண்டு வெங்காரம்
தாவிய பாசாணம் தனிமுளகு வெத்திலையில்
எண்ணெய் விளாவி கொடுத்தவர்க்கு, முத்தினதேங்காய்
முடிவு இதனையுமலினிருக்கு மென்று நிச்சயமாய்
முழுகிவர ... .... .... ... ... ... ... .... .... .... ....

**காலம்**

சுக்குலஉ தைமாதம் 27ம் தேதி சோமவாரம்
நாளது துவக்கினது மலையப்பன் செட்டியார்
கையெழுத்து குலதுங்கனாதசுவாமி துணை கருப்பர்
துணை பிடாரி துணை அங்காளம்மன் துணை

**குறிப்பு**

இதில் மூலத்துக்கு, நீர்க்கணைக்கு, மாலைகண்ணுக்கு, காதில் சீவிழுகிறதுக்கு வாய்வுக்கு வீரபத்திர குளிகை: கபால கண்டச்சளிக்கு மருந்து முதலியன உள்ளன. இதில் தெளிவு மருந்துகள் உள்ளன.

வரிசை எண்: 1835 சுவடி எண்: 891

## அகத்தியர் அருளிச் செய்த முப்பு செந்தகத் தைலம்-16

ஏடுகள்: 11. சுவடியின் நிலைமை: நல்லநிலை. பக்கத்திற்கு: 6 வரிகள் பொருள்: மருத்துவம். அளவு: 27.5×3 செ.மீ. கி. எண்ணிக்கை: 200. எழுத்து: தமிழ். ஆசிரியர்: அகத்தியர். முழுமை: முற்றுமுளது.

**தொடக்கம்:**

காணப்பா செந்தகத்தின் தயிலஞ் சொல்வேன்
கைமுறையாய்ச் செந்தசமும் பலமும் பத்து
பூணப்பா கல்வத்தில் போட்டுக் கொண்டு
புகழாக வெள்ளைத்தாமரைப் பூச்சாற்றல்

**முடிவு**

சோனென்ற பொன்னாகும் பத்து மாற்று
கொள்ளையாட வாதமெல்லா முப்புக்குள்ளே
தேனென்ற மொழியாட்குச் சிவந்தான் சொன்னார்
செயற்கை யெல்லாஞ் சூத்திரமாய்ச் செப்பினேனே.

அகத்திய மகா முனிவர் அருளிச் செய்த
செந்தகத்தயிலம் — யசு (16) முற்றும்.
வேலுமயிலும் துணை. குருமுனி துணை.

சுபம்.

**காலம்:**

இல்லை

**குறிப்பு:**

சில தைலவகைகள் — 16 பாடல்களில் கூறப்பட்டுள்ளன.

---

வரிசை எண்: 1836 சுவடி எண்: 892

## அகத்தியர் சிவகுளிகை-8

ஏடுகள்: 2. சுவடியின் நிலைமை: சிதிலம். பக்கத்திற்கு: 7 வரிகள். பொருள் குளிகை செய்முறை. அளவு: 27.5×3. செ.மீ. கி. எண்ணிக்கை 50. எழுத்து: தமிழ். ஆசிரியர்: அகத்தியர். முழுமை: முற்றுமுளது.

**தொடக்கம்**

கருமேனிவேரு, சிறுபூளைவேரும், சிறுபொறு வேரும்
திருநீற்றுப்பச்சை வேரு, காட்டு மொச்சை வேரும்
வெள்ளைச் சாரணை வேரும், வேலிப்பருத்தி
வேரும், அமுக்கராவடக்கு வேரும், குளி
முட்டான் சல்லி வேரும், குட்டி விளாமேற்கு
வேரும், பெருங்காயம் வசம்பு, சிற்றரத்தை
வெள்ளைப் பூண்டு .... ... .. ... .... .... .... ...

**முடிவு**

கரப்பானுக்கு அமுக்குறா சாற்றிற் போகும். குழந்தை
களுக்கு வந்த ரோகங்களும், இந்தக் குளிகையில்
சகல தோஷங்களும் போம். தாயார் பத்தியமா யிருக்கவும்.
குரு முனி துணை.

குழந்தைகளுக்கு சுபம்.

**காலம்**

இல்லை

**குறிப்பு**

அகத்தியர் சில்லறைக் கோவையில் 35 ஆவது நூலாகப் பதிப்பாகி உள்ளது. எட்டுபாடல்களில் சில குளிகை செய்முறை உள்ளது. 32 வகையான குற்றங்கள், மாந்தம் முதலியன துணை மருந்துகளுடன் உண்ணத் தீரும்.

---

வரிசை எண்: 1837 சுவடி எண்: 893

## இராம தேவர் சிவயோகம் - 200

ஏடுகள்: 7. சுவடியின் நிலைமை: நல்லநிலை. பக்கத்திற்கு: 6 வரிகள். பொருள்: யோகம், தத்துவம், மந்திரம் விரவியது. அளவு 27×3 செ.மீ. கி. எண்ணிக்கை 500. எழுத்து: தமிழ் ஆசிரியர்: இராமதேவர். முழுமை: முற்றற்றது.

**தொடக்கம்**

**அண்டபிண்ட சமாதி வைப்பு மெழுகு**

அமைந்த கரு அண்டந்தன்னை வாங்கிமேலோட்டை
சீவிப்போட்டு கண்திறந்து ரவிபீஸஞ் செலுந்தி
பாண்டத்தில் வெடியுப் பிட்டு அதின் மேல்
அண்டத்தை வைத்து மேலுப்பிட்டு மேல் சட்டிமூடி
சீலை சுத்தி மண்பூசி சமாதிதனில் வைத்து தூப
தீபஞ் செய்து மண்டலஞ் சென்றெடுத்துப் பார்க்க.

—கஎ

### முடிவு

சேரப்பாவுப்பு மிஞ்சி கரிப்பில்லாமல், அரைத்திருத்துக் கொண்டு, கடுக்காய் சூரணத்தில் பிசறிக் கொண்டு, பரணியிலடக்கம் பண்ணிபொருந்தநாள் பார்த்து பணவிடைகொள்ளவும். மண்டலங்கொள்ள மலசலம் விலகும். சீதம் போகும் வாதநீர் பித்தநீர் தீரும் பத்தியமாய்க் கொள்ளவும் குருதுணை.

### காலம்

இல்லை

### குறிப்பு

இந்நூல் பதிப்பாகி உள்ளது. 1885 இலும் 1877 இலும் 1951 இலும் இந்நூல் வெளியிடப் பட்டுள்ளது மகால் சுவடி பாடல் 37 இலிருந்து துவங்குகின்றது. யோகம் பற்றிய கருத்துகள், பூசை முறைகள் மூலிகைக் குணம், மந்திரத்தின் குணம். பூரணத்தின் குணம், கண்டபிண்ட சமாதி வைப்பு மெழுகு, கட்டுக்கொடி கருவித்தை கஞ்சனம், வண்ணக்காரிம்பு வேதைமார்க்கம், சிவயோகப் பெருமை, சாத்திதிர விவரம் வெள்ளி வித்தை, நிட்டை விவரம், மதிய முதலேகியம், வல்லாரைக்கற்பம், கடுக்காய் லேகியம், தைலம், கல்லுப்புச் சுன்னம், சுன்ன தொந்தம், லோகவாதி குணம், புருவமைய நிதானம் முப்புச்சுன்னம் என்ற தலைப்புகள் உள்ளன. மகால் சுவடிஎண் 388(c) 431 (b) 450(e) 461(a) டி98(N) 107 என்பன இச்சுவடியைப் போன்றன ஆகும். ஆயினும்பாட வேறுபாடுகள், வரிவேறு பாடுகள் இச்சுவடியில் உள்ளன.

---

வரிசை எண்: 1838 சுவடி எண்: 894

## கவுபாலசித்தர் ஆணிக்கோர்வை - 51

ஏடுகள்: 21. சுவடியின் நிலைமை: நல்ல நிலை. பக்கத்திற்கு: 6 வரிகள் பொருள்: ஆணி செய்முறை, வழலை என்பன விரவியது. அளவு: 27×3 செ.மீ. கி. எண்ணிக்கை: 1000. எழுத்து: தமிழ். ஆசிரியர்: கவுபாலசித்தர் முழுமை: முற்றறது.

### தொடக்கம்

''சித்தான மாத்து செகத்தோரறிந்திடவே
கொத்தான நல்லகோர்வை சொல்ல—வித்தான
ஆரணந் தேவமுனியற்புத பொற்பாதர்கள்
காரணமா யெண்ணாளுங் காப்பு''.

### முடிவு

யிசைந்ததொரு நல்லாணிக்கோர்வை நூலை முடித்திட்டேன் பாடலுமோனம் பத்தொன்று மொழிந்தகவுபாலசித்தன் முடித்திட்டேனே. சற்குருவேநம. கவுபாலசித் தரருளிய ஆணிக் கோர்வை முற்றும். அடியன் ப.நீ. சபாபதிகையட்சம் குருவேநமஸ்து.

**காலம்**

இல்லை

**குறிப்பு**

அகத்தியர் சில்லறைக் கோவையில் 90 ஆவது நூலாகப்பதிப்பாகி உள்ளது. 51 பாடல் களைக்கொண்டது. இதில் ஆணி செய்யும் வகை, உரைக்கல்லின் விவரம், மெழுகு உண்டை விவரம், ஆறாதாரச் சரக்கு விவரம், வழலை மார்ககம், வெள்ளி மார்ககம் என்பன உள்ளது. இச்சுவடி, 12 ஆம் பாடலிலிருந்து துவங்குகின்றது. குறைச்சுவடியாகும்.

வரிசை எண்: 1839 சுவடி எண்: 895

# வால்மீகர் பூதநாடி - 16

ஏடுகள்; 6. சுவடியின் நிலைமை: நல்ல நிலை. பக்கத்திற்கு: 6 வரிகள். பொருள்; நாடி நூல். அளவு: 27×3 செ.மீ. கி. எண்ணிக்கை; 500. எழுத்து; தமிழ். ஆசிரியர்: வால்மீகர். முழுமை: முற்றுமுளது.

**தொடக்கம்**

ஐவிரலைந்து நாடி அது செய்யும் வகையைக் கேளிர்
மெய்விரலொன்று வாதம் மொழிவிரலொறு பித்தம்
நெய்நடு விரலேசித்மம் நேர்விரல் பூதநாடி
மைசிறுவிரலே சொன்னோம் வகுத்தவால்மீகர் தானே — க

**முடிவு**

திரைந்திடும் பூதநாடி நெருப்பது போலே சுட்டால்
சிரைந்திடும் பில்லியாகும் சேய்குணம் பரிட்சை கேளீர்
குரைந்திடாக் குறங்கு நோயுங் கூட்டமும் பயமும் நாட்டம்
மரைந்திடமயக்கஞ் செய்யும் வால்மீகர் உரைத்தவாரே
வால்மீகர் பூதநாடி முற்றிற்று. குருதுணை — யசு

**காலம்**

இல்லை

**குறிப்பு**

18 சித்தர் நாடி நூலில் 10ஆவதாக உள்ளது. 16 பாடல்கள் உள்ளன. மகால் சுவடி எண் 308,(H) யின் கடைசிப்பாடல், இச்சுவடியின் கடைசிப் பாடலுடன் பொருந்துகின்றது. இதில் பூனைநடை, காக்கை நடை, எலிநடை, பாம்புநடை சங்கு. நண்டு போல ஊர்தல் என்பன நாடி நடைக்கு உவமைகளாகக் கூறப்பட்டுள்ளன.

வரிசை எண்: 1840 சுவடி எண்: 896

# மகாஜால முதற்கண்டம்

ஏடுகள்: 41. சுவடியின் நிலைமை: நல்ல நிலை. பக்கத்திற்கு: 8 வரிகள். பொருள்: தந்திரம் (MAGIC), அளவு: 27×3 செ.மீ. கி. எண்ணிக்கை: 2000. எழுத்து: தமிழ். ஆசிரியர்: அகத்தியர். முழுமை: முற்றற்றது.

**தொடக்கம்**

வாதத்தில் க்ஷசம் காப்புக் சொன்னேன் வயித்தியத்தில்
ரெண்டு லட்சம் காப்பு சொன்னேன் யித்துடனே
செகசாலம்லெக்ஷசம் சொன்னேன் மையன்மகனே மந்திரத்தில்
லெக்ஷசம் சொன்னேன் நீதிபெறும் கலைக்கியான
லெக்ஷசம் சொன்னேன்.

**முடிவு**

குறையாது செந்தூரம் விளைவதிகங் கொண்டால்
கொடுப்பதுதான் கண்டறிந்து குணாவு செய்ய
வேணும் நிறையாக விளைவு சந்தே குறைந்து
தானால் நேராக காலம் மஞ்சாடி கட்டுவதுமாகும்.

**குறிப்பு**

தந்திர வித்தையைப் பற்றிய சுவடி முதல் பாடல், எல்லா சித்த மருத்துவ நூல்களில் குறிப்பாக அகத்தியர் நூல்களில் வருகின்றது. நூல் வெளியிடப்பட்டதாகத் தெரியவில்லை.

---

வரிசை எண்: 1841 சுவடி எண்: 897

# வைத்தியத்திரட்டு

ஏடுகள்: 90. சுவடியின் நிலைமை: சிதிலம். பக்கத்திற்கு; 7 வரிகள். பொருள்: தொகுப்பு-மருந்து செய்முறைகள்-பாடம், உரைநடையும் விரவியது. அளவு; 27×3 செ.மீ. கி. எண்ணிக்கை: 2000. எழுத்து; தமிழ். ஆசிரியர்; பலர். முழுமை: முற்றுமுளது.

**தொடக்கம்**

சித்தாதி எண்ணெய்
ஓம்பறமகுருவே நம
சீர்சிறந்த உடல் தனிலே கவுஷச ரோகஞ்
சிரசுதனிற் குடியிருந்த மைற்ற ரோகம்
பார்தனிலே விழுந்தெழுந்த சூலை ரோகம்
பம்பரம் போலாடுகின்ற நீராம்பல் கட்டி.

**முடிவு**

**ஆலாத்தி கற்பூரம்**

பேயன் வாழைக் கிழங்காகிலும், கருவாழைக் கிழங்காகிலும் இடித்து சிறுகுண்டு சட்டியில் வைத்து அமுக்கி நடுவில் உண்டையைவைத்து ரெண்டு ஜாமமெரிக்க ஆலாத்தி கற்பூரமாகும்.

**காலம்**

இல்லை

**குறிப்பு**

இந்நூலின் பிற்பகுதியில் அகத்தியர் கலிக்கம் என்ற நூல் 4 ஏடுகளில் எழுதப் பட்டுள்ளன. மருந்து செய்முறைகள் பற்றிய சுவடி. கண்மை செய்முறை, சித்தாதி எண்ணெய், ஆலாத்திக் கற்பூரத்தை செயற்கை முறையில் செய்தல் என்பன உள்ளன. பதிப்பானதாகத் தெரிய வில்லை.

---

**வரிசை எண்:** 1842 சுவடி எண்: 898

# அகத்தியர் பல திரட்டு நாடி நிதானம்

**ஏடுகள்:** 45. சுவடியின் **நிலைமை:** ஓரங்கள் மிகச் சிதிலம். பக்கத்திற்கு: 8 வரிகள். பொருள்: நாடி வணகயறிவது. அளவு 30×3. செ.மீ. கி. எண்ணிக்கை: 2000. எழுத்து: தமிழ். ஆசிரியர்: அகத்தியர். முழுமை: முற்றற்றது.

**தொடக்கம்**

வாதமு பித்தம் மையயம் மைத்துள்ள குணபாடத்தை
நீதற முனிவர் நூலை சேர்ந்து பின் திறட்டாய்க் கூட்டி
யோதுவேன் விசாலத்தாலே யொழுங்குடன் கண்டுகொள்ள.
வாது சேர் வயித்திய யோர்க்கு வல்லிருள் விளக்கமென்றே. —க

**முடிவு**

உண்ணவே பத்தியந்தான் புளிகசப்பு
உதமான பெண்ணோடே புகையுமாக
தண்ணவே தயிலமொன்று சொல்லக் கேளு
தலமான மிறுகாமல் தயிலஞ் சொல்வேன்
... ... .... .... .... .... .... .... .... .... .... ....
.... ... ... ... ... ... .... .... ... ...
... ... ... ... ... ... .... .... .... .... ... ...
பாங்கான செவ்விள நீர் படிதான் ரெண்டே —எசுஅ

**காலம்**

இல்லை

**குறிப்பு**

இதில் அகத்தியர் நாடி நிதானம் பற்றிக் கூறப்பட்டுள்ளன.

---

**வரிசை எண்:** 1843 சுவடி எண்: 899

# அகத்தியர் குழம்பு

ஏடுகள்: 4. சுவடியின் நிலைமை: நல்லநிலை. பக்கத்திற்கு: 8 வரிகள் பொருள்: குழம்பு என்றமருந்துசெய் முறை. அளவு: 28 5×2.5 செ.மீ. இ. எண்ணிக்கை: 200. எழுத்து: தமிழ். ஆசிரியர்: அகத்தியர். முழுமை: முற்றுமுளது.

**தொடக்கம்**

பரிவதந் தன்னில் வாழும் பானாரருளினாலே
பெருமையாயுலகில் வாழும் புண்ணிய செனங்களுக்கு
உறுபலனோவதால் உண்மையாய் தீருமென்று
பேர்பல முனிவர்தாமும் பேசிய மருந்துகேளே க

**முடிவு**

கொடுக்க வசம்பு தான் குருங்கைச் சாறும் கியாழமதாய்
தடுக்க வத்திக் குடுப்பிராய் தானே
போகும் பலகழிச்சல்
அடுக்க வாந்தி மிக கன்றாலான
சிரகம் கியாழும் தன்னில்
நடுக்க சக்கரை கூட்டி யுண்ண
நயமாம் வாந்திகண்டீரே உயரு

குழம்பு முத்தும்

**காலம்**

இல்லை

**குறிப்பு**

மகால் சுவடி எண் 159 (b) 594, 595, 745 (E) என்பன. இச்சுவடியை ஒத்தது. சித்தமருத்துவத்தின் தலை சிறந்த மருந்து, திறனாய்வு முறையில் தமிழ்ப்பல்கலைக் கழகம் பதிப்பித்து வெளியிட்டுள்ளது.

---

வரிசை எண்: 1844 சுவடி எண்: 900

## அகத்தியர் வைத்தியம் 36

ஏடுகள்: 5. சுவடியின் நிலைமை: நல்ல நிலை. பக்கத்திற்கு: 8 வரிகள் பொருள்: பற்பவகைகள். அளவு: 30×3 செ.மீ. கி. எண்ணிக்கை: 300. எழுத்து: தமிழ். ஆசிரியர்: அகத்தியர். முழுமை: முற்றுமுளது.

**குறிப்பு**

இந்நூல் 324 (C) போன்றது. 8ஆம் தொகுப்பில் உள்ளது

---

வரிசை எண்: 1845 சுவடி எண்: 901.

## அகத்தியர் வைத்தியம்

ஏடுகள்: 7. சுவடியின் நிலைமை: நல்லநிலை. பக்கத்திற்கு: 7 வரிகள். பொருள்: மருந்து செய்முறைகள். அளவு: 29.5×3 செ.மீ. கி. எண்ணிக்கை: 1000. எழுத்து: தமிழ். ஆசிரியர்: அகத்தியர். முழுமை: முற்றற்றது.

**தொடக்கம்**

சீறணி கொன்றை சூடுஞ் சிவனிரு பாதம் போற்றி
வாறணன் முகத்தோன் பாதம் வணங்கி ......... நூத்தன்சொல்
பூறணிவாலை ஞான சகுற சோதியே போற்றி
காரணமான செஞ்சொல்கற்ம் சூத்திரங்காப்பாமே க

**முடிவு**

அறியவே வெள்ளாட்டு நீருமத்துடன் பிரண்டையின் வேர்
செறியுடனரைத்துப் போட்டு சிறந்த நல்லெண்ணெய் குத்திக்
குறியுடனுருக்கிசாய்க்க குணகுடனிறுஞ் சாகுக
மறுவது யில்லா சத்தி வாய்த்திது புவியுள்ளோர்க்கே ருயஉ

**காலம்**

இல்லை

**குறிப்பு**

பதிப்பான தாகத் தெரியவில்லை. இச்சுவடியின் முதல் பாடல் மகால் சுவடி எண் 440, 324 (b) 330 (c) 625 (a) ஆகியவற்றின் முதல் பாடலை ஒத்துள்ளது.

---

வரிசை எண்: 1846 சுவடி எண் 902

# சுந்தரானந்தர் பூரணாதி லேகியம்

ஏடுகள்: 9. சுவடியின் நிலைமை: நல்ல நிலை. பக்கத்திற்கு: 8 வரிகள். பொருள்: மருந்து செய்முறை அளவு: 30 × 3 செ.மீ. கி. எண்ணிக்கை: 1000. எழுத்து: தமிழ். ஆசிரியர்: சுந்தரானந்தர். முழுமை: முற்றற்றது.

**தொடக்கம்**

தானென்ற பூரணாதி லேகியந்தானய்ய செயிது
நன்றாக உருட்டி வைத்து
வானென்ற பிறானாயம் செய்யும் போது
மைந்தனே கொண்டு மனம் புருவ மையத்தில்

**முடிவு**

பசுவின் நெல் உரி, கூரெண்ணை உரி,
ஆமணக்கெண்ணை உரி, ஆயிந்த வகை
மூன்றும் யீனமதிகாரி புசுவின்பாலும் ஆக
முன்னாளில் நாலு காசிடை, அதிமதுரம் நாலு
காசிடை, செங்கள நீர் ......... ......... .........

**காலம்**

இல்லை:

**குறிப்பு**

சுந்தாரனந்தரின் பெயரில் உள்ள இலேகியம் செய்யும் முறை பதிப்பாகாத சுவடி.

---

வரிசை எண்: 1847 சுவடி எண்: 903

# நாடி சூத்திரம்

ஏடுகள்: 23. சுவடியின் நிலைமை: சிதிலமாயுள்ளது. பக்கத்திற்கு: 7 வரிகள். பொருள்: நாடிபற்றியது. அளவு: 30×3 செ.மீ. கி. எண்ணிக்கை: 1000. எழுத்து: தமிழ். ஆசிரியர்: அகத்தியர். முழுமை: முற்றற்றது;

**தொடக்கம்**

பாரப்பா வெள்ளைப் பாஷாணந் தன்னை
பாங்காக யெருக்கம்பால் தன்னிலாட்டி
......... சிறு பயிறு அளவுயுண்டை திறமாகவே
யுருட்டி வைத்துக் கொண்டு

**முடிவு**

திறாவகம் போகுமே குஷ்ட்டம் புகட்டச் செய்
கெந்திபோகுமே கிறாணி புகட்ட
நலப்பூணாகமே மூலம் புகழ தங்கச் செம்புக்கேளே

**காலம்**

யிது நாகப்பட்டணம் மாணிக்க ஆசாரி பொஸ்தகம்
நாடி சூத்திரம் யெடுத்தவன் குடுக்க வேண்டியது.
ஸ்ரீ ராம செயம்

**குறிப்பு**

இந்நூல் 13-ஆம் ஏட்டிலிருந்துதான் தொடங்குகிறது. இடை இடையே ஏடுகள் இல்லை.

---

வரிசை எண்: 1848 904

# வைத்தியத் திரட்டு

ஏடுகள்: 40. சுவடியின் நிலைமை: சிதிலம். பக்கத்திற்கு: 8 வரிகள். பொருள்: தொகுப்பு. அளவு: 24×3.5 செ.மீ. கி. எண்ணிக்கை: 3000. எழுத்து: தமிழ். ஆசிரியர்: பலர். முழுமை: முற்றற்றது.

**தொடக்கம்**

.......... சிரத்திற் பொருத்தி மாத்துக் ..........
சிரத்திற் .......... றி விடில் .......... சிலேட்டும்
தாத்திலுடனே பித்த .......... பல வெதுப்பும்
வண்மை செய்யுந் தலை நோவும் .......... ..........

**முடிவு**

வேறு

விஷ்ணு கிறாந்தி ஒருபிடி, மிளகு பலம் க,
இதைச் சட்டியிலிட்டு, படி ஜலம் விட்டு,
காய்ச்சி நாலிலொன்றாக்கி அந்தி, சந்தி
ந - நாள் கொடுக்கவும்.

**காலம்**

இல்லை

**குறிப்பு**

இதில் சில்லறை வைத்தியங்கள் கூறப்பட்டுள்ளன.

வரிசை எண்: 1849 சுவடி எண்: 905

## வைத்தியத் திரட்டு

ஏடுகள்: 20. சுவடியின் நிலைமை: சிதிலம். பக்கத்திற்கு: 7. வரிகள். பொருள்: பாட்டும், உரையும் விரவியது. அளவு: 18.5×3. செ.மீ கி. எண்ணிக்கை: 500. எழுத்து: தமிழ். ஆசிரியர்: பலர். முழுமை: முற்றற்றது.

**தொடக்கம்**

துருசு குளம்பு, சுன்ன முறை

வெங்காரம், வாய்க்காறம் விட்டு அரைத்து,
துருசு ……… தடவி துணி சுத்தி லகுபுடம், சுன்னம்
னாலு நாள் காய வைத்து ……… ……… ………

**முடிவு**

தவிப் பகலக்கு மைப்பார்வை பார்க்கலாகும்
தானிருந்து மந்திரத்தை செபிக்கலாகும்
குவிப்பான சிலந்தி முதல் வீக்கத்துக்குக்
குணமாக வெண்ணெயிலே தியானம் பண்ணு
கவிப்பான விஷ முதலாய்
களி காணும்லோடுதற்கு கருவைக் கேளு

**காலம்**

இல்லை

**குறிப்பு**

சித்த மருத்துவர்களால் திரட்டப்பட்டு பின்னர் தொகுக்கப்பட்டது. இதில் பல்வேறு சித்தர்களின் மருத்துவ முறைகள், வழக்கு முறைகள், அனுபவ முறைகள் என்பன இடம் பெற்றுள்ளன.

வரிசை எண்: 1850 சுவடி எண்: 906

## அகத்தியர் பாலவாகடம்

ஏடுகள்: 267. சுவடியின் நிலைமை: நல்லநிலை. பக்கத்திற்கு: 6 வரிகள் பொருள்: பாட்டும், உரைநடையும் கலந்தது. வைத்தியத்திரட்டு. அளவு: 35×3 செ.மீ. கி. எண்ணிக்கை: 5000. எழுத்து: தமிழ். ஆசிரியர்; அகத்தியர். முழுமை: முற்றுமுளது.

**தொடக்கம்**

ஹரிஓம் நன்றாக குருவாழ்க
கணபதியே நம.

வேகமாய் நெறிசெரும வினைய றுமதாக போகவிடாதெ
வானை முகத்தோனை போத்துவாம்

நூல்

அசுபதி-தொட்டசுரம் ஆறாநாள்விடும்
வேலாதிவந்தால் பதினோராநாள் விடும்.

**முடிவு**

பலநாலும் கண்நோவுக்கு முலைப்பாலிலரைத்து
போயிக் கண்ணிலிடவும். ஒருதலை னோவுக்கு
நேரந்த பிறந்து நாசியில் நசியமிடவும். அந்தந்
வியாதிக்கி காலமே கொடுக்கவும். மீறின
வியாதிக்கி யென்னேறமாகிலும் கொடுக்கவும்.
பத்தியம் சாவதானமாயிருக்கவும். சிவசகாயம் ராமசெயம்

**காலம்**

இல்லை.

**குறிப்பு**

பதிப்பாகாத சுவடி. சோதிடமும் கலந்துள்ள திரட்டு நூல்.

---

**வரிசை எண்** 1851 சுவடி எண் 907

# வைத்தியத் திரட்டு

ஏடுகள்: 31. சுவடியின் நிலைமை: நல்லநிலை. பக்கத்திற்கு: 7 வரிகள். பொருள்: தொகுப்பு. அளவு: 24×3 செ.மீ. கி. எண்ணிக்கை: 1500. எழுத்து: தமிழ். ஆசிரியர்: பலர். முழுமை: முற்றற்றது.

**தொடக்கம்**

**முகவாத சன்னிக்கி**

புடத்துருது விராகன் சூ (6), கொடிவேலி வேர்
விராகன் சூ (6), சுக்கு விராகன் சூ (6),
மிளகு விராகன் சூ (6), வெள்ள வெங்காயம்
விராகன் சூ (6), புள்ளை மருந்து விராகன்
சூ (6) ... ... ... ... ... ... ... ... ... ...

**முடிவு**

நீர்ப்பூலான்பட்டை, சித்தமுட்டி, பற்படாகக் சீந்திற்
கொடிவேலி யிவ்வளவும் பட்டை வகைக்கி ஒரு
யிடையாய் உரலிலே நய்ய நறங்கலந்து வைத்து
பானையிலே போட்டு எட்டுபடி தண்ணீர் விட்டு,
அடைபோட்டு ரெண்டுபடி யிருக்கச்செய்து............

**காலம்**

இல்லை

**குறிப்பு**

மகால் சுவடி எண் 906ஐப் போன்றது.

வரிசை எண்: 1852 சுவடி எண்: 908

## தெட்சிணாமூர்த்தி வைத்தியம் - 1300

ஏடுகள்: 12 சுவடியின் நிலைமை: நல்லநிலை. பக்கத்திற்கு: 11 வரிகள் பொருள்: இரசவாதம், மருந்துகள் செய்முறை என்பன கலந்தது. அளவு: 25×3.5 செ.மீ. கி. எண்ணிக்கை: 500. எழுத்து: தமிழ். ஆசிரியர்: தெட்சிணாமூர்த்தி. முழுமை: முற்றற்றது.

### தொடக்கம்

காரணமே மூலவட்டந் தன்னில் நிற்குங்
 கணபதியும் வல்லபையுந் தேவர் காப்பு.
பூரணமா பராபரையுஞ் சிவனும் நந்தி
 பொருந்தி நின்ற பஞ்சகரத்தாள் கணங்கள் காப்பு. —க

### முடிவு

போவானோயிருதையத்திற்பத்திமுத்தி
 புகுவானோ புகமாட்டான் பொன்னா மென்றால்
பாவாமுன்னூறுரண்டாங் காண்டம்டா
 ரசவாதமானமுற்றே. —ருளசூயஎ

### காலம்

இல்லை

### குறிப்பு

இந்நூலில் இறுதி ஏடு 99. என்றுள்ளது. ஆனால் இடையிலே ஏடுகள் இல்லை. பதிப்பானதாகத் தெரியவில்லை. 300 பாடல்களைக் கொண்ட இரச வாதம் II காண்டம் என்று கடைசிப்பாடலில் வருகின்றது.

—❋—

வரிசை எண்: 1853 சுவடி எண்: 909

## வைத்தியத் திரட்டு

ஏடுகள்: 5. சுவடியின் நிலைமை: நல்ல நிலை. பக்கத்திற்கு: 8 வரிகள். பொருள்: தொகுப்பு-உரைநடையில் உள்ளது. அளவு: 15×3.5 செ.மீ. கி. எண்ணிக்கை: 100. எழுத்து: தமிழ். ஆசிரியர்: பலர். முழுமை: முற்றற்றது.

### தொடக்கம்

துருசு சுண்ணம்

துருசுக்கு வெங்காய சாறுவிட்டு அரைத்து வில்லை தட்டி ரெண்டு நாளைக்கு ரவியில் வைய்த்து காய்ந்த பிற்பாடு யெருக்கன்பால் விட்டு அரைத்து, வில்லைதட்டி காயவைத்து முன் சொன்னயெருவில் புடம் போட சுண்ணமாகும்.

முடிவு

**கண்ணுக்கு அவிழ்தம்**

பிற்பாடு யெடுத்துக் கொண்டு காசத்துக்கு தங்கரேக்கு சேர்த்து அரைத்து குடுக்கலாம். சகல வியாதிக்கும் குடுக்கவும். சக்கரை, நெயி, தேன், கருப்புட்டி, யிதுகளை அனுபானம் செய்து கொடுக்கவும். பத்தியம். யிச்சாபத்தியம்.

காலம்

இல்லை

குறிப்பு

சுவடி எண் 907 ஐப் போன்றது.

---

வரிசை எண்: 1854 சுவடி எண்: 910

## அகத்தியர் வைத்திய ரத்தினச் சுருக்கம் - 360

ஏடுகள்: 57. சுவடியின் நிலைமை: நல்லநிலை. பக்கத்திற்கு: 8 வரிகள். பொருள்: மருந்து செய்முறைகள். அளவு: 36×3.5 செ.மீ. கி. எண்ணிக்கை: 2000. எழுத்து: தமிழ். ஆசிரியர்: அகத்தியர். முழுமை: முற்றுமுளது.

தொடக்கம்

பூரணமாய் நிறைந்த கும்ப பரைத்தாள் பேற்றி
புகலுகுறேன் வைத்தியத்தின் சுருக்கந் தன்னை
வாறண மாமுகத்தோனை பணிந்து போற்றி
வைத்தியந்தானிந்த முன்னூத்தறு பதுக்குள் —க

முடிவு

முழுகவே வியாதியெல்லாங் கடலே புக்கு
முக்கியமாய் அகஸ்தியர்க்கு செபந்தான்பண்ணு
புகழவே தியானமது யென்னேறந்தான்
பேறான வாலையைத் தான்தியானம் பண்ணு

—௩௬௫

**காலம்**

இந்த புத்தகம் தஞ்சாவூர் வடக்கிக் கோட்டைவாசல் படியில் கிணசறகு கோட்டையிலிருக்கும் சப்பாணியா பிள்ளை குமாரன். சடையப்பபிள்ளை குமாரன் சுய. தாமறி ஸ்ரீ மிட்டு ரூ கம்பினியே அவல்தாற் தாண்டவறாயன் படிக்கிண்ட அகத்தியமாமுனிரெத்தினச் சுருக்கம். யெடுத்தவர்கள் படித்துப்பார்த்து பிழையிருந் தால் திருத்திக் கொடுக்க வேண்டியது. யிந்தபடிக்கி கூ௲௮௱௫௰௯ (1859-) ௵ சுலாயி மாசம் ௰ தேதிக்கு சரியான தமிழ்மாசி மீ ௨௰ தேதிநாயதுக்கிளமை கூ௵ $9\frac{3}{4}$ மணிக்கி கடக்க யெண்ணப்ப ஆறில்யெழுதி முடிந்ததும் முற்றும். பதினெண்பேர் துணையுண்டாக வேண்டியது.

**குறிப்பு:**

மகால் சுவடி எண் 910, 249, 20, 382 (a) 439 (b) 73 என்பன ஒத்த சுவடிகள் ஆகும். மகால் சுவடி எண் 221 (D) வேறுபட்டது, 32 பாடல்கள் மட்டுமே உள்ளது. பல பதிப்புகள் வெளியாகி உள்ளன. நாகன், சித்தாதைந் வைரவம் போன்ற மாத்திரைகள், பூபதிக்குளிகைகள் இலேகிய வகைகள், சூரணவகைகள், தைலவகைகள், நெய்வகைகள், எண்ணெய் வகைகள், மைவகைகள், செந்தூர வகைகள், பற்பவகை கள், குடிநீர் வகைகள், உண்ணும் முறைகள் கூறப்பட்டுள்ளன.

வரிசை எண்: 1855

சுவடி எண்: 911

# வைத்தியத் திரட்டு

ஏடுகள்: 147. சுவடியின் நிலைமை: நல்லநிலை. பக்கத்திற்கு: 7 வரிகள் பொருள்: தொகுப்பு நூல் உரைநடையில் உள்ளது. அளவு: 18.5×2.5 செ.மீ.கி. எண்ணிக்கை: 2000. எழுத்து: தமிழ். ஆசிரியர்: பலர் முழுமை: முற்றற்றது.

**தொடக்கம்**

**வீதக்கட்டு சுண்ணம்**

வீறம்பலம்—1 விஷமுங்கிகிழங்கு குனைவத்து
அந்தவில்லை யேழு சீலை செய்து காய
வைத்து முழம்புடம் போட கட்டும். எடுத்து
கொடிவேலி யிலை அரைத்து கவசம் செய்து
காயவைத்து அரைவடிசி காய்ந்த பின்பு 5(௫) சீலை
மண் செய்து சாணுயரம் புடம் போட சுண்ணம்.

**முடிவு**

பொதிந்து புடம் போட பஷ்ப்பம் கல்வத்திட்டு சாதிலிங்கம் சிலையும் வீறம், சூதம், கெந்தி பூறம் வகைக்கிபலம், குட்டிபற்பம் பலம், கூட்டி பழச்சாறு விட்டு அரைத்து வில்லை செய்து காய வைத்து ஒட்டில் வைத்து சீலை மண்செய்து வராக புடம் போட செந்தூரம்.

**காலம்**

இல்லை

**குறிப்பு**

சுவடி எண் 909 ஐப் போன்றது.

வரிசை எண்: 1856 **வரிசை எண்: 912**

# அகத்தியர் மதிநூல் 400

ஏடுகள் 80. **சுவடியின் நிலைமை:** நல்ல நிலை. **பக்கத்திற்கு:** 6 **வரிகள்**. **பொருள்:** ''கௌமதி 400'' மருந்து செய் முறைகள். **அளவு:** 35×3 செ.மீ. **கி. எண்ணிக்கை:** 2000. **எழுத்து:** தமிழ். **ஆசிரியர்:** அகத்தியர் முழுமை. முற்றுமுளது.

**தொடக்கம்**

சிவகிருபை பாதமது போற்றி
தானுந்தெரிந்தெடுத்து பதினென் பேர் மறைத்தல்
யாதுந்தவம் பெறவே கௌமதினூல் பாடல்
னூறில்ச் சாத்தினோம் வயித்தியமிகள் யோக ஞானம் —க

**முடிவு**

சூட்சமப்பா கௌமதி னூல் னானூறு வீசஞ்
சுருக்கமதாய் பதினாறு கதைக்குள்வாச
மாச்சலப்பா வொன்று மில்லைவெளியாய்
சொன்னோமைந்தனே உலகமதில் வாதமேது
ஆச்சப்பா யெரிந்து வீடுபெரிதோயில்லை
யவ்வழியின் மேரவு நிதியணுவுக்குள்ளே
மூச்சப்பாசுடிகை யொன்றில் முடிந்து போச்சு
முற்றுப்பார் கௌமதி நன்னூலில் முற்றே சூஉசு—
ஸ்ரீகுரு தெட்சணமூர்த்தி சுவாமியள்
துணையுண்டாகவும்

**காலம்**

இல்லை

**குறிப்பு**

பதிப்பான சுவடி. இதன் முழுப் பெயர் அகத்தியர் ''கௌமதி 400 என்பதாகும். மதுரை புதுமண்டபம் இராம குருச்சாமிக் கோனாரால் 1435, 1952 இலும் வெளியிடப்பட்டது. 400 என்று இருப்பினும் 397 பாடல்களில் நூல் முடிவடைகின்றது. இதில் குட்டம் தீர மருந்து, சூலை, விடம், வசியம் சயம்தீர, கண்மாத்திரை, பிளவை நோய்க்கு மருந்து, நரை திரை மாற்ற, அரையாப்பு தீர மதனகாமிய நெய்,

அதிமதுர செய்னீர், தாது பெருக்க, மகப்பேறு, வாயு சுகசன்னி, முப்பூவிலரம் செய் பாகம், கற்பமுறை மருந்திடு, ஈரைந்து எழுத்துவிவரம் கறியாயூடர் காட்டுவிளா முறை அறியா மாந்தர் வழலை, கரியுப்பு பற்பம், உப்புச் செந்தூரம், விந்துகட்டல் வெள்ளி கடுக்காய் கவியம் கனக வித்தை, செந்தூரம் பொட்டு, வேலல் வித்தை, மூச்சு விவரம் எலி நீறு பாடாணச் நீன்னம், மூலமுளை தீர, புத்தமக்கம், தீர, மோகினி மந்திரவிதி, 43 முக்கோணச் சக்கரம் மோடி, யோகநிலை, கவுனம் தாம்பிர பற்பம், தீப்பூடு, மண்டூர பற்பம், செந்தூரம் உப்பு,காரீய வெள்ளி, ஏகாட்சரம், மூலிகை மர்மம் — 96 வகைகள் என்ற தலைப்புகள் உள்ளன.

வரிசை எண்: 1857 சுவடி எண்: 913

# வைத்தியத் திரட்டு

ஏடுகள்: 50. சுவடியின் நிலைமை: ஓரங்கள் சிதிலம். பக்கத்திற்கு: 6 வரிகள். பொருள்: தொகுப்பு நூல். அளவு: 24×3 செ.மீ. கி. எண்ணிக்கை: 2000. எழுத்து: தமிழ். ஆசிரியர்: பலர். முழுமை: முற்றுமுளது.

**தொடக்கம்:**

மந்திட்டி, மிளகு திப்பிலிமூலம், பூண்டு தூளு, குங்கிலியம்
சுருக்குங்கிளயம் கிழியாப்பட்டை, பூலாரிகிழங்கு
வகைக்கு பலம், கூட்டிப்போட்டு தயிலமிறக்கி
முழுகவும். சன்னி வாதம், பஷவாதம், யிசிவு
முதலான வாநங்களும் சன்னியும் குணமாம்.

**முடிவு**

............ அரைத்து அதுக்குள் வைத்து சாணங் கொண்டு
மூடி இப்படி அஞ்சு தடவை புடமிடவும். அதன் பிறகு
நாய்ப்பாகல் சாறுவிட்ட ரைத்து குண்டு மணிப்பிரகாரம்
மாத்திரை செய்து சுரங்களுக்குக் கொடுக்கவும். சுரம் விடும்.

**காலம்**

இல்லை

**குறிப்பு**

மகால் சுவடி எண் 911 ஐப் போன்றது

வரிசை எண்: 1858 சுவடி எண்: 914

## அங்காதி பாதம்

ஏடுகள்: 186. சுவடியின் நிலைமை: நல்லநிலை. பக்கத்திற்கு: 10 வரிகள். பொருள்: மருந்து செய் முறைகள் பாடலும், உரைநடையும் அளவு: 25×3 செ.மீ. கி. எண்ணிக்கை: 5000. எழுத்து: தமிழ். ஆசிரியர்: அறிய இயலவில்லை. முழுமை: முற்றுமுளது.

**தொடக்கம்**

மணிதங்கு வரையுள்ளாதி மன்னுயிர்ப்படைத்தபோது
பிணிதங்கு வகையுனோயும் பேருடன் குணமுங் காட்டி
அணிதங்கு மருந்துங் காட்டியாயுறு வேதந்தன்னைக்
கணிதங்கு தமிளால் வேதங்கடந்த மாமுனிவர் சொன்னார் —க

**முடிவு**

தாமரைத்தயிலம்

மிளகு, சந்தனம், வகைக்களு —க — அ — க ஆக்கிய கஷாயம் படி — உ. எண்ணெய் — க தாமரைவளையச்சாறுபடி வங்காளப் பச்சை, செவ்வள்ளிக் கொடி. வகைக்கு— உ, பதமாய்க் காச்சி வடித்து முளுகச் சகலகூடுகளும் மாறும்.

**காலம்**

இல்லை

**குறிப்பு**

பதிப்பாகாத சுவடி. சித்தமருத்துவ வாரியம் பதிப்பித்த நூலிலிருந்து வேறானது.

---

வரிசை எண்: 1859 சுவடி எண்: 915

## அகத்தியர் புட்ப மாலிகை

ஏடுகள்: 26. சுவடியின் நிலைமை: நல்லநிலை. பக்கத்திற்கு: 8 வரிகள் பொருள்: இரசவாத முறைகள். அளவு: 22.5×3.5 செ.மீ. கி. எண்ணிக்கை 1000. எழுத்து: தமிழ். ஆசிரியர்: அகத்தியர். முழுமை: முற்றுமுளது.

**தொடக்கம்**

ஆதியென்ற அண்டமெல்லாம் படைத்த காமி.
யானந்த போதமதாய் நின்ற ரூபி.
சோதியென்ற நாதவிந்து மௌளமாகிச்
சொல்லடங்கா பொருளாகி சூட்சமான. —க

முடிவு

சஞ்சீவியின் மார்க்கமப்பா சொல்லி விட்டேன்
சற்குருவின் கிருபையினால் சாத்தினேன்யான்
சிரஞ்சீவி யாயிருப்பாய் புஷ்பமாலை
சீக்கிரத்தில் சித்தியுண்டாஞ் செய்கை மெத்த
... ... ... .... ... .... ... ... ... .... —ருயக

காலம்

கூஅளஅயகூ இக்கு சுபானு ஸு பங்குனி மீ 22ந்-தேதி புதன்கிழமை எழுதி முகிந்தது. முத்தும். ஓம் சர அனபவா குருபாதமே கெதி புஷ்பமாலிகை யெழுதியது. கணக்கு நல்ல பெருமாள் பிள்ளை எழுதப்பட்டது.

குறிப்பு

மகால் சுவடி எண் 126 (') இன் வேறுபடியாகும். புலத்தியருக்குக் கூறும் வண்ணம் அமைந்துள்ளது. வழலை, பூரச்சுன்னம், கற்பூரச் 'சுன்னம் செய்முறைகள் யோக முறைகள் உள்ளன. பதிப்பாகாத சுவடி

வரிசை எண்: 1860 சுவடி எண்: 916

# அகத்தியர் கலைக்கியானம்

ஏடுகள்: 48. சுவடியின் நிலைமை: நல்ல நிலை. பக்கத்திற்கு: 8 வரிகள். பொருள்: மருத்துவம். அளவு: 28×3 செ.மீ. கி. எண்ணிக்கை: 3000. எழுத்து: தமிழ். ஆசிரியர்: அறிய இயலவில்லை. முழுமை: முற்றற்றது.

தொடக்கம்

யெட்டடா யாதியறிவே கலைக்கியான சூத்திரம்
யென்னேறு மிருனான்கில் நாலுமொன்றாய்
விட்டகுறை யுலகம திலறியார் மார்கம்
வெளி தோணக் குரு மூலம் நூலில் சொல்ல. —க

முடிவு

தானென்ற திருநீறே பிணியைத் தீர்க்கும்,
தாயாதி பூசியடா வியாதி போச்சு
தானென்ற நீறுனக்கு உண்மை உண்மை
சருவாதி கலைக்கியான சூஸ்திர முற்றே.
ஹரீ ஓம்நெனைக்கிறவை உண்டாக வேணும். —எசுசு
சற்குருபாதார விந்தமேதுணை

**காலம்**

இவை தாது இ ஆடிமீ யசஉ புஸ்தி வாரம் தேவதாகுடி வடக்கு சேத்தி சிவன் கோவில்டி வெங்கிடாசலம் சாமி சலைக்கிுான சூத்திரம் பிருனூறு யெழுதி முடிந்தது. முற்றும்

**குறிப்பு**

பதிப்பான தாகத்தெரியவில்லை. மகால் சுவடி எண் 120 (c) இச்சுவடியின் முதல் பாடலை ஒத்துள்ளது.

---

வரிசை எண்: 1861 சுவடி எண்: 917

# வைத்தியத் திரட்டு

ஏடுகள்: 84. சுவடியின் நிலைமை: சிதிலம். பக்கத்திற்கு: 6 வரிகள் பொருள்: சில்லரை வைத்தியங்கள். அளவு: 24×3.5 செ.மீ கி. எண்ணிக்கை: 2000. எழுத்து: தமிழ். ஆசிரியர்: பலர். முழுமை: முற்றற்றது.

**தொடக்கம்**

மூலக்கிறாணி—கபாடமாத்திரை

தளமான அக்கினி மந்தந் தீரும் — நள்ள ............
............ தேனுங் கூட்டி நலமாக மண்டலங்
காலுண்டாயானால் ............ ............
விள்ளடா சுரமென்றறியாமலும் விட்டு விட்டு
கடல் பூக்கும்.

**முடிவு**

எல்லா சத்துருக்கு மாறணம்

சிவயநம ள வும், பச்சரிசி தூபம் குருத்து
வட்டமும் ளஉஅ உரு செவிக்கவும்.

**காலம்**

இல்லை

**குறிப்பு**

இந்நூலில் மந்திர ஏடுகளும் கலந்து உள்ளன. உதிரி ஏடுகளில் சில்லரை வைத்தியங்கள் காணப்படுகின்றன.

வரிசை எண்: 1862 சுவடி எண்: 918

# வைத்தியத் திரட்டு

ஏடுகள்: 100. சுவடியின் நிலைமை: மிகச்சிதிலம். பக்கத்திற்கு: 7 வரிகள். பொருள்: தொகுப்பு நூல். உரை நடையில் உள்ளது. அளவு: 40 × 3 செ.மீ. கி. எண்ணிக்கை: 1500. எழுத்து: தமிழ். ஆசிரியர்: பலர். முழுமை: முற்றற்றது.

**தொடக்கம்:**

**சூட்டுக்கு ஏறண்ட சலவை எண்ணெய்**

நாழி மறந்திடா முலைபாலு
முளகு கூட்டு மைந்தனே இளநீர்ப் பூவிரிச்சாறுங்
குறைந்திடா திருனாளி துளசி நெல்லி கொடுப்பையொடு
மொசு மொசுக்கை சிந்திச் சாறே.

**முடிவு**

ரச சுத்தி அருக்கன் பாலில் ஒரு நாள் ஊறி செங்கத்தான் கொட்டை சர்க்கரை இதுகளில் அரைத்தெடுக்கவும். படிக்கார சுத்தி எருமைச் சாணத்தில் கிளி கட்டி வைத்து எடுத்துக் கொள்ளவும்.

**காலம்**

இல்லை:

**குறிப்பு**

இதில் உதிரி ஏடுகளில் சில்லரை வைத்தியங்கள் கூறப்பட்டுள்ளன. ஏடுகள் ஒத்த தாக இல்லை. உரைநடையில் உள்ள திரட்டு நூல்.

---

வரிசை எண்: 1863 சுவடி எண்: 919

# அகத்தியர் தத்துவம்-300

ஏடுகள்: 74. சுவடியின் நிலைமை: நல்லநிலை. பக்கத்திற்கு: 7 வரிகள். பொருள்: தத்துவம், மருந்து செய்முறைகள் விரவியது. அளவு: 38×3 செ.மீ. கி. எண்ணிக்கை: 3000. ஆசிரியர்: அகத்தியர். எழுத்து: தமிழ். முழுமை: முற்றற்றது.

**தொடக்கம்**

மணிகொண்ட யானை யெட்டுந் திசை கொண்ட கிரிகளெட்டும்
மதியீரெட்டுங் கனி கொண்ட வியாஞ்சிறுதி யேளுமண்ட மேழு-
மொருகடல்கள்ளேழும்
பணி கொண்ட கலைகளஞ்சும் பூதமஞ்சுந்தராம்
பதிகளஞ்சும் பதிகளஞ்சும்

**முடிவு**

''இப்படி வாட்டு இதமாம் வெடியுப்பை அப்படித் தானே அறுண்நிறமாம் தப்படிக் காரியந் தானூத்துக் கொன்றிட உப்படி வேதையுரைத்த திசைமாத்தே.''

**காலம்**

இல்லை

**குறிப்பு**

இச்சுவடி, ''அகத்தியர் தத்துவம் 300'' என்ற சித்த மருத்துவ அச்சு நூலிலிருந்து வேறுபட்டது. பதிப்பாகவில்லை.

வரிசை எண்: 1864 சுவடி எண்: 920

# அகத்தியர் பரிபூரணம் - 1200

ஏடுகள்: 60 சுவடியின் நிலைமை: நல்லநிலை. பக்கத்திற்கு: 7 வரிகள் பொருள்: மருந்து செய்முறைகள் அளவு: 39×3 செ.மீ. கி.எண்ணிக்கை: 3000 எழுத்து: தமிழ். ஆசிரியர்: அகத்தியர். முழுமை முற்றற்றது.

**தொடக்கம்**

பூரணமாய் நிறைந்த பரிபூறணமே காப்பு
போத மயமானதொரு பூரணத்தைப் பாட
காரணமாய் கறுவுறுவாயி யெங்கும் நிரைந்திருக்க
கண்மணியின் கருவாகி தரும் பொருளை
ஆரணமாய் முக்கோணத்தடியில் நடுவாகி
அசையாத பொருளாகி அறிவுமாகி —க

**முடிவு**

பாரப்பா யின்னமொரு கருவைக் கேளு
பச்சையென்ற துருசுடனே காறங்கூட்டி
வீறப்பா கொண்டதொரு அரிதாரந்தான்
விபறமுடன் மூன்று கரும ஒன்றாய்ச் சேர்த்து
சாறப்பா கல்வமதில் பொடியாய் பண்ணி
சங்கையுள்ள நாத நீர் தன்னை வாங்கி
தேறப்பா அப்பொடியில் பிசரி கொண்டு
செம்மையுடன் குகை தனிலிட்டு மூடே —ௐளசுசு

**காலம்**

இல்லை

குறிப்பு

ஈதால் சுவடியில் 344 பாடல்களே உள்ளன. இந்நூல் பதிப்பு செய்யப்பட்டுள்ளது. பிரமத்தின் விவரம், ஆதாரம், திருநடன விவரம், திரிகூட பர்வதம், மேரு நிதானம், பஞ்சபூதம் அறிதல் நெறியறியா மூடர், சன் தாரத்துடன் இருக்க, சைவ பக்திமை, குப்பமுனி, காலை தனல, பகபதி பாச விவரம், தத்துவங்கள் அ. உ சக்தி மெழுகு, வியாதி வரும் குணம், சிரசுவியாதிக்குப் பற்பம், நெய், செய்நீன், தைலம், பரகதி அறிய, குளிகை, வசியம், திலதம், நிட்டை விவரம், குளிகை, தரா, ஈயம் என்ற தலைப்புகள் பாடல் 344 வரை உள்ளன

---

வரிசை எண்: 1865 சுவடி எண்: 921

# திருமூலர் கற்பவிதி - 500

ஏடுகள்; 51. சுவடியின் நிலைமை: நல்ல நிலை. பக்கத்திற்கு: 7 வரிகள். பொருள்; மூலிகை மருத்துவம். அளவு: 38.5×3 செ.மீ. கி. எண்ணிக்கை; 2000. எழுத்து; தமிழ். ஆசிரியர்: திருமூலர். முழுமை: முற்றுமுளது.

தொடக்கம் வியாதியள் போக வெகுநாள் சடமுற
பயாதித் திரை நரை பாங்காய்த் தவிர்ந்திட- —க

முடிவு எண்ணைக்கும் பார்க்காலாம் யிந்நூல் முற்றுமே.
குமரகுருபரன் திருவையாகவும் ஸ்ரீ குருபாதமேகெதி
திருமூல நாயனார் அருளிய கற்பவிதி நூல் குளம்
(500) யெழுதியது முற்றும்

காலம் இல்லை

குறிப்பு திருமூலரின் கற்பவகைகளைப் பற்றிய நூல். திருமந்திரம் எழுதிய திருமூலரினும் இவர்வேறானவர். இந்நூல் பதிப்பிக்கப்படவில்லை.

---

வரிசை எண்: 1866 சுவடி எண்: 922

# தட்சிணாமூர்த்தி பூரண காவியம் - 1000

ஏடுகள்: 191. சுவடியின் நிலைமை: நல்லநிலை. பக்கத்திற்கு: 7 வரிகள். பொருள்: மருத்துவம் செய்முறைகள் தத்துவம் விரவியது அளவு: 40×3 செ மீ. கி. எண்ணிக்கை: 3000. எழுதது: தமிழ். ஆசிரியா: தெட்சிணாமூர்த்தி. முழுமை: முற்றற்றது.

தொடக்கம் தியான மூல கணபதியே காப்பு.
ஆதியென்ற சிகசோதி நாதங்காப்பு. —க

முடிவு சிவமயம், வாலபறமேஸ்சரி துணையாக வேணும்.
பரமகுரு னாதன் துணையாகவும்.

காலம் இல்லை

குறிப்பு

தட்சணாமூர்த்திக்கு அகத்தியர் என்ற வேறுபெயர் உண்டு. துவக்கம், முடிவு என்பன இல்லை (அகத்தியர்) பூரண காவியம் 1000 என்ற நூல் பதப்பாகி உள்ளது.

---

வரிசை எண்: 1867 சுவடி எண்: 923

# திருமூலர் திருமந்திரம் ஐந்நூற்றுத் திரட்டு

ஏடுகள்: 87. சுவடியின் நிலைமை: மிகச்சிதிலம் பக்கத்திற்கு: 6 வரிகள். பொருள்: திரட்டு, திருமூலரின் பெயரில் உள்ளது. அளவு: 27×2.5 செ.மீ. கி. எண்ணிக்கை: 1500. எழுத்து: தமிழ். ஆசிரியர்: திருமூலர். முழுமை: முற்றற்றது.

தொடக்கம் வியாதியள் போக வெகுநாள் சடமூறத
தயாதித் திறைநரை பாங்காகத் தவிழ்ந்திடக் —க

முடிவு தக்க வசிகரம் சகல அறிவு என்றும்
மிக்க வசிய மேவு மிளமையே. அ

**காலம்;**

இல்லை

**குறிப்பு:**

திருமூலரின் திருமந்திரத்தைப் போன்று உள்ளது. பதிப்பானதாகத் தெரியவில்லை.

---

வரிசை எண்: 1868 சுவடி எண்: 924

# அகத்தியர் சூத்திரம் - 58

ஏடுகள்: 10. சுவடியின் நிலைமை: மிகச்சிதிலம். பக்கத்திற்கு: 7 வரிகள். பொருள்: வாலை, காரசாரம் என்பன விரவியது. அளவு: 27×2.5 செ.மீ. கி.எண்ணிக்கை: 500. எழுத்து: தமிழ். ஆசிரியர்: அகத்தியர். முழுமை: முற்றுமுளது.

**தொடக்கம்:**

வாலையுட பூசை செய்தால் வேதாந்தங்
கைககு கென்னத் தங்கும் ..........—
யெனும் வாயுவினால் யோகத்தங்கும்
தட்டானதி .......... சயினால் சமாதி தங்கும்
.............. சொ .......... சக்கரமே தங்கும்

**முடிவு**

சொல்லுவேன் உலக மெல்லாஞ் பொய்யாய்ப் போகும்
சொன்னாக்கால் சித்த ரெல்லாம் யிவ்வளவோயென்பர்
வல்லுகின்ற வல்லையப்பா காரசாரம் மகத்தான
யிந்தாலே கட்டி போகும்
வெல்லுதற்கு சுன்னமிதுவே யாச்சு
வெடியுப்பை செய நீரால் மூலமாகும்
சொல்லுகின்ற சரக்கெல்லாம் யிதிலே
மாட்ட குலஸ்திரீ அவிசாரி கறுப்பிக்கொச்சை

**காலம்**

இல்லை

**குறிப்பு**

பதிப்பாகாதச் சுவடி வாலைப்பூடை, யோகம் காரசாரம், சுண்ணம், கட்டு செப்நீர் போன்ற மருந்து செய் முறைகளை எடுத்துரைக்கும்.

---

வரிசை எண்: 1869 சுவடி எண்: 925

## வைத்தியத் திரட்டு

ஏடுகள்: 16. சுவடியின் நிலைமை: நல்லநிலை. பக்கத்திற்கு; 9 வரிகள். பொருள்: தொகுப்பு. அளவு; 29×3 செ.மீ. கி. எண்ணிக்கை: 500. எழுத்து; தமிழ். ஆசிரியர்; பலர். முழுமை: முற்றுமுளது.

**தொடக்கம்**

சகலருக்கும் பலியாது தவறுண்டே போம்
மாதியாமமன்றனக்கு வயித்தியமே சொன்னேன்.
பூசைபண்ணி வணங்கிப் பாரே. —நூசு
பாரப்பா பொடிதான் பலந்தானோன்று
பரிவான காந்த .... ... ... ... தானொன்று

**முடிவு**

.... ... ... ... பூபதியேக் சேனு ஏனென்ற
பூபதியின் ... ... .... .... குமுன் ... ... .... ... ....
வானென்ற நவலோக செந்தூரந்தான் வகை
.... ... .... ... னென்றால் மொன்று வகையொன்றுக்கு
யிடைக ... .... ... .... ... ... ... ... .... .... .... ....

**காலம்**

இல்லை

**குறிப்பு**

ஏனைய திரட்டு நூல்களைப் போன்ற தொகுப்பு நூலாகும்.

வரிசை எண்: 1870 சுவடி எண்: 926

## அகத்தியர்-1500

ஏடுகள்: 94. சுவடியின் நிலைமை: மிகச்சிதிலம். பக்கத்திற்கு: 7 வரிகள். பொருள்; மருந்து செய்முறைகள். அளவு: 21×4 செ.மீ. கி.எண்ணிக்கை: 2000. எழுத்து: தமிழ். ஆசிரியர்: அகத்தியர் முழுமை: முற்றறற்றது.

**தொடக்கம்**

அடி முடியுமாகி நின்ற பரத்தாள் போற்றி
கடந்த நிற்ம்மலத்தையடுத் தென்னாளு
வடிவுடைய சிவனுமையைப் பூசை பண்ணி
மகத்தான சின்மயாத்தின் கருணையாலே
படிமீதில் வயித்தியந் தான் ரெண்டு லட்சம்
பாடியதோர்[பறவை யெல்லா குருக்கியானு

### முடிவு

கூறு ரெண்டுருவியும், மத்தங்கொளுந்து
சொட்டைப் பாக்களவரைத்து வெவ்வேறே
வைத்து யிரில்லா யிருள்ளி நொறுக்கியிரு
களஞ்சி யிரண்டு வகை முன் மருந்து எருமை
வெண்ணெயுழக்குன மாரில்லா வெந்திறக்கிப்
பதத்தில் .... ... ... ... .... .... ... .... ... ....

### காலம்

இல்லை

### குறிப்பு

மகால் சுவடி எண் 851 (a) 857 ஆகிய சுவடிகளிலிருந்து வேறுபட்ட சுவடி. பதிப்பிக்கப்படாத ஒன்று. அகத்தியர் வைத்திய காவியம் 1500 யிலிருந்து வேறுபட்டது சுவடியின் முதல் பாடல், அச்சு நூலின் முதல் பாடலை ஒத்துள்ளது.

---

வரிசை எண்: 1871 சுவடி எண்: 927

## வைத்தியத் திரட்டு

ஏடுகள்: 115. சுவடியின் நிலைமை: மிகச் சிதலம். பக்கத்திற்கு: 7 வரிகள். பொருள்: தொகுப்பு. உரைநடையில் உள்ளது. அளவு 29 × 3. செ.மீ. கி. எண்ணிக்கை: 3000. எழுத்து: தமிழ். ஆசிரியர்: பலர். முழுமை: முற்றற்றது.

### தொடக்கம்

.... ... ... .... எருக்கம் பால் விட்டு .... .... ... ... நூறுங்
.... ... ... .... குளியம்மியில் யிட்டு அரைக்க உ
ப ... ... ...ம அதை வெய்யிலில் வைத்து ஒரு நாள்
சாய்ந்த பின்பு .... ... ... ... பொறிக்காரம்,
... ... .... கச் சுண்ணமாம் அந்தச் சுண்ணம் உலற
காய வைத்து ஒட்டி விட்டு, கட்டின வீரம் – ரு,

### முடிவு

யிப்படி புடம் வைத்துக் கொள்ளவும். பற்பம் பண விடையும் திரிகடுகு வெதுப்பி பொடி செயிது, வெறுகடியும், தேனிலும் இஞ்சிச் சாறுவிட்டு குடுக்கவும். கெந்தகத் தயிலம், வெள்ளாட்டுயெலும்பு சம்மூலம் யிடித்து பத்துக் களஞ்சி கெந்தகம் போட்டு தயிலம் யிறக்கி வெள்ளீயத்தில் கொடுக்கவும்.

### காலம்

இல்லை

**குறிப்பு**

மகால் சுவடி எண் 925ஐ ஒத்தது. உரைநடையால் ஆனது. பதிப்பிக்கப்படவில்லை.

---

வரிசை எண்: 1872 சுவடி எண்: 928

# வைத்தியத் திரட்டு

ஏடுகள்: 43. சுவடியின் நிலைமை: நல்லநிலை. பக்கத்திற்கு: 7 வரிகள். பொருள்: தொகுப்பு. அளவு 26×3 செ.மீ. கி. எண்ணிக்கை 1000. எழுத்து: தமிழ் ஆசிரியர்: பலர். முழுமை: முற்றற்றது.

**தொடக்கம்**

நல்லெண்ணை நெய்யுடன் வெழக்கெண்ணை
யொளந்தாய் நலம் பேர் படியதாக
மெய்யான பொன்னுந்த கரையுட
தொட்டியும் மேலான மொசுமொசுக்கை
சொல்லுறேன் ஆவின்பால் படிச்சாற் படி வேகவைத்து

**முடிவு**

**வங்க பஷ்பம்**

அதையெடுத்து வேலிப்பருத்திச் சாற்விட்டு அறைத்து அஞ்சுபுடம் போட பஷ்ப்பமாகும். அதையெடுத்து மேகம் யிருபத்தியொண்ணுக்குக் குடுக்கலாம் கை கண்டது.

**காலம்**

இல்லை

**குறிப்பு**

மகால் சுவடி எண் 927ஐ ஒத்தது.

---

வரிசை எண்: 1873 சுவடி எண்: 929

# அகத்தியர் - 16

ஏடுகள்: 6. சுவடியின் நிலைமை: சிதிலம். பக்கத்திற்கு: 6 வரிகள். பொருள்: இரசவாதம். அளவு: 21×2.5 செ.மீ. கி. எண்ணிக்கை: 200. எழுத்து: தமிழ். ஆசிரியர்: அகத்தியர். முழுமை: முற்றற்றது.

**தொடக்கம்**

ஆதித்தன்றுளே போற்றி அனைத்தையும் தொகுத்து
பார்த்துப் பாவிகளான நோயின் பல பிணிதீர வேண்டிப்
பூதன் பஞ்சபூதச் சரக்கினில்ப் புனிதமாக
ஊதியின் பதினாறுக்குள் சாற்றுரேன் தரணி மீதே —க

**முடிவு**

உரைத்திட்டேன் கெந்தி அரிதார சூதம்
ஒன்றாகத் தானுறைத்து திரியில் பூட்டித்
திறைத்திட்டேன் வேப்பெண்ணெய்
விழக்கில் விட்டு நினவாக நின்று
... ... ... ... ... ... ... ... ... ... ...
... ... ... .... .... .... .... ... .... —யச

அகத்தியர்
பதினாறு முற்றும்

**காலம்**

இல்லை

**குறிப்பு**

அகத்தியர் 16 என்ற தலைப்பில் பல சுவடிகள் மகாலில் உள்ளன. சுவடி எண் 700 (F) சுவடி எண் 432 (o) சுவடி எண் 426 (e) 236 (e), 236 (D) 578 (a) 186 (a) 311 (e) இவற்றிலிருந்து வேறுபட்டது. இரசவாத முறைகள் இடம் பெற்றுள்ளன. பதிப்பிக்கப்படாத சுவடி.

வரிசை எண்: 1874 சுவடி எண்: 930

## ரோமரிஷி - 20

ஏடுகள்: 7. சுவடியின் நிலைமை: நல்ல நிலை. பக்கத்திற்கு: 7 வரிகள். பொருள்: உரைநடை, பாடல் விரவியது. அளவு: 26×3 செ.மீ. கி. எண்ணிக்கை: 500. எழுத்து: தமிழ். ஆசிரியர்: ரோமரிஷி முழுமை: முற்றுமுளது.

**தொடக்கம்**

நித்தமுடன் ரோமரிசி பூதலத்தில்
நெரிகெட்ட மானிடர்க்கும் மருந்து சொல்லக்
காதலுடன் கணபதியை தியானம் செய்து
கார்மேக நிறமுடைய தயிலம் போக்கும்
ஆதலால் மருந்துவகை சொல்லக் கேளும்

**முடிவு**

ஏளக்கெண்ணெய் படி $\frac{1}{2}$ (இ), விளவிச்சாற்படி $\frac{1}{2}$ (இ) யிரவெங்காயம் சாற்படி $\frac{1}{2}$ (இ), சீரகம் பலம் $\frac{1}{2}$ (இ), விளவியிலை பலம் $\frac{1}{2}$ (இ), யிதை ரெண்டையும் அரைத்து உருண்டை செய்து, முன் யெண்ணெய் வெந்து தண்ணி போல ஆன பின்பு யிந்த உருண்டையை போட சிவக்கும். அதை யிறக்கி வைக்கவும். வெட்டைச் சூடு, வெள்ளை, அசரிக்கை தீரும்.

**காலம்**

இல்லை

**குறிப்பு**

பதிப்பானதாகத் தெரியவில்லை. பாட்டும் உரைநடையும் கலந்த தொகுப்பு எனத் தோன்றுகின்றது.

---

வரிசை எண்: 1875 சுவடி எண்: 931

# நந்தீசர் கருக்கிடை - 300

ஏடுகள்: 34. சுவடியின் நிலைமை: சிதிலம். பக்கத்திற்கு: 7 வரிகள் பொருள்: மருத்துவம். அளவு: 25×3.5 செ.மீ. கி. எண்ணிக்கை: 2000. எழுத்து: தமிழ். ஆசிரியர்: நந்தீசர். முழுமை: முற்றற்றது.

**தொடக்கம்**

**காப்பு**

மூலம் என்ற கணபதியின் பாதம் போற்றி
முத்தி பெற்ற சுழி முனையின் முனை மேல் நின்று
கோலம் யென்ற குண்டலிக்குள் குகை தான் உண்டு
குகை தனிலே குருபரனும் அம்மை வாழ்வார்

**முடிவு**

''பதிவாய்க் கண்டு பழக்கத்தால் வாசி நின்ற தலமுங்கண்டு
சித்தி பெற்ற கருவிநிட சூட்சங்கண்டு
தெளிந்த மதிமாயை விட்டுச் சிவமே என்றுச்
சுத்தி நின்ற இடங்காண்பயே.''

**காலம்**

இல்லை

**குறிப்பு**

மகால் சுவடி எண் 445 (G) 469 (O) 432 (H) என்ற சுவடிகள் இத்தலைப்பில் உள்ளன. சுவடிஎண் 432 (H)யின் முதல்பாடல், இச்சுவடியின் முதல் பாடலுடன் ஒத்துள்ளது. இத்தலைப்பில் நூல் பதிப்பாகி உள்ளது.

---

வரிசை எண்: 1876 சுவடி எண்: 932

# புசுண்டர் வாக்கியம் - 80

ஏடுகள்: 5. சுவடியின் நிலைமை: சிதிலம். பக்கத்திற்கு: 6 வரிகள். பொருள்: தத்துவம். அளவு: 25×.25 செ.மீ. கி. எண்ணிக்கை: 1000. எழுத்து: தமிழ். ஆசிரியர்: புசுண்டர். முழுமை: முற்றற்றது.

**தொடக்கம்**

சிறந்த பராபரமாகி யெங்குந் தானாய்த்
தீர்க்கமுடன் ரவிமதியுஞ் சுடர்மூன்றாகி
பரந்தருளும் ஐம்பூதமாய்கை தோன்றி
பல்லாயிரங்கோடி யண்டம் படைத்த போதும்
.... .... .... .... .... ... .... ... ...
... .... .... ....... ... ... .... .... .... .... ... —க

**முடிவு**

காரடா கோடான காடி சித்து
குறித்திடவே யாடுமடா பிறம்மத்தாலே
வீரடா யின்னூலைக் கொடுத்திடாதே
வெத்தியுடன் யெண்பதி விளங்க முற்றே —எசு

**காலம்**

இல்லை

**குறிப்பு**

பெரிய ஞானக் கோவையில் "காகபுசுண்டர் ஞானம் 80" என்ற தலைப்பில் பதிப்பாகி உள்ளது

---

வரிசை எண்: 1877 சுவடி எண் 933

# ஞானவெட்டியான்

ஏடுகள்: 11. சுவடியின் நிலைமை: சிதிலம். பக்கத்திற்கு: 12 வரிகள். பொருள்: தத்துவம், மருந்து செய்முறைகள் கலந்தது. அளவு: 24.5×4.5 செ.மீ. கி.எண்ணிக்கை: 500. எழுத்து: தமிழ். ஆசிரியர்: அகத்தியர். முழுமை: முற்றற்றது.

**தொடக்கம்**

வெத்தித் தரும் ஞான வெட்டி ஆயிரத்மேலாக
வைத்தியத்தை விளம் புவேனான்
சித்தமுள்ள காய சித்திமாய் சித்திரமான
வாதசித்தி வசிய சித்தித்தலத்தில்
மின்னோர்கள் மறைத்த தெல்லாமியம்பினேன்

**முடிவு**

ரசகற்பூரமும், லிங்கமும் கட்டு சாம்பிராணிகளு
ரூபாயிடை பூலாதி கற்பூரம்-களு, ரூபாயிடை
மனோசிலை 2 ரூபாயிடை கெந்தகம்-களு
ரூபாயிடை.

**காலம்**

இல்லை

**குறிப்பு**

திருக்குறள் இயற்றிய ஆசிரியரினும் வேறுபட்டவர். மகால் சுவடி எண் 216. இலிருந்து இது வேறுபட்டது. ''ஞான வெட்டியான் 1500'' என்ற தலைப்பில் பதிப்பாகி வெளிவந்துள்ளது. இதில் வேறு சில ஏடுகளும் கலந்துள்ளது.

---

வரிசை எண்: 1878 சுவடி எண்: 934

# அகத்தியர் குழம்பு-50

ஏடுகள்: 10. சுவடியின் நிலைமை: சிதிலம். பக்கத்திற்கு: 8 வரிகள். பொருள்: மருந்து செய்முறை அளவு: 33.5×2.5 செ.மீ. கி. எண்ணிக்கை: 500. எழுத்து: தமிழ். ஆசிரியர்: அகத்தியர். முழுமை: முற்றற்றது.

**தொடக்கம்**

காசினியில் மானிடற்குப்பிணியே நீங்க
கருத்துடைய அகஷ்தியனார் பாடல் தன்னை
.... .... .... ... தீர்க்குழம்பு தன்னை வேதாந்தம் பாடி விட்டேன்
சுத்தியாக ஆசினியில்ச் சித்தாந்தம் .... ... .... .... ... .... ...

**முடிவு**

உஷ்ட்டினங்களாறும் நீறாகுஞ்
செந்தூரம் பணவிடையினோடு
நெத்தி பெற .... ... ... ... சித்தயிலத்தினூட்ட பேரான ... .... ...

**காலம்**

இல்லை

**குறிப்பு**

மகால் சுவடி எண் 159 (b) 594, 595, 745 (E) என்பன ஒத்துள்ளன. இம்மருந்து இன்றும் மருத்துவ உலகில் கையாளப்பட்டு வருகின்றது. இதில் வேறு சில சுவடிகளும் கலந்துள்ளன. தமிழ்ப்பல்கலைக் கழகம் பதிப்பித்துள்ளது.

---

வரிசை எண்: 1879 சுவடி எண்: 935

# இரசவர்க்கத் திரட்டு நூல்

ஏடுகள்: 120. சுவடியின் நிலைமை: சிதிலம். பக்கத்திற்கு: 4. வரிகள். பொருள். பண்பு மற்றும் நோய்களின் இயல்புகள். அளவு: 39×2.5 செ.மீ கி. எண்ணிக்கை: 1500. எழுத்து: தமிழ். ஆசிரியர்: அறிய இயலவில்லை. முழுமை: முற்றற்றது.

**தொடக்கம்**

மண்ணின் குணம் — வெண்பா

பூசலிரணம் — பொருமல் போம் பொன்முதலே
டாசையுள்ள பண்ட மதிலுண்டா நேசமதாய்த்
திண்டிடற் பாண்டு சிறக்கு மிகத் தேன்மொழியைக்
கொண்டறிந்து மண் குணத்தைக் கூறு.

முடிவு

சந்திப்பாய்க்குணம் —க

சாதிப்பாய்ச் சீதளமாஞ் சாருமே மூலம்
பேதிக்குட சீதம் பிசறுமே வாதிக்குஞ்
சீத சுரங் காணுந் தீராத்தலை பாரந்
மேத மிகுமென்றே யியம்பு — கூளசுசு

**காலம்**

இல்லை

குறிப்பு

பதார்த்த குண சிந்தாமணியைப் போன்ற பொருள் பண்பு நூல். பதிப்பாக வில்லை, இதில் ஐம் பூதங்களின் இயல்பு, உண்ணும் பொருள்களின் இயல்பு தீரும் நோய்கள் என்பன பற்றிக் கூறுகின்றது.

வரிசை எண்: 1880 சுவடி எண்: 936

# அகத்தியர் வாதத்திறவு கோல்

ஏடுகள்: 135. சுவடியின் நிலைமை: மிகச்சிதிலம். பக்கத்திற்கு: 7 வரிகள். பொருள்: இரசவாதம். அளவு: 34.5×2.5 செ.மீ. கி. எண்ணிக்கை: 5000. எழுத்து: தமிழ். ஆசிரியர்: அகத்தியர். முழுமை: முற்றுமுளது.

**தொடக்கம்**

ஆதியந்த மேநிறைந்த சோதிபாதம்
அகண்டபரி பூரணத்தால் ... ... .... ...
... ... யாய் முப்பொருளும் மூன்றும் யொன்றாய்.
பறவெளியாய் நின்ற பறவெளியாய்

**முடிவு**

சித்தர்களுக்காகவே யின்னூல் சொன்னேன்
சிவயோகி ... .... ... .... .... .... ... கொண்டார்
கரை செய்தாரின்னூல்தான் ஆறுக்காகும்
காசினியில் சிவயோகிமெ .... .... .... ஞானிக்
... ... ... .... ... ... ... .... .... .... ... ....
... ... ... ... ... ... ... ... .... ....

**காலம்**

இல்லை

**குறிப்பு**

சித்தர்களுக்காகவே இரசவாதம் பற்றிய செய்திகளைக் கூறுவதாக சுவடியின் கடைசிப் பாடல் வரிகள் உள்ளன. பதிப்பானதாகத் தெரியவில்லை.

---

வரிசை எண்: 1881 சுவடி எண்: 937-a

## அகத்தியர் சாலத்திரட்டு

ஏடுகள்: 40. சுவடியின் நிலைமை: மிகச்சிதிலம். பக்கத்திற்கு: 8 வரிகள். பொருள்: தந்திர வித்தை (MAGIC) அளவு: 30×5 செ.மீ. கி. எண்ணிக்கை: 2000. எழுத்து: தமிழ். ஆசிரியர்: அகத்தியர். முழுமை: முற்றற்றது.

**தொடக்கம்**

......... கடியல் குலமெனும் சொரிகிய
அத்தி நீராடி படத்தமம் கலந்தானும்
விரவது பகர்ந் தோயஞ்சு குடத்த
டியதற்குச் சாணாம் கொண்டது.
கு............................னே. —கஉ

**முடிவு**

உன்னுடைய உடபிடிக்கை முடிப்பு வாங்கு
.................... என பணம் பிடுங்கும் பதியாதென்று
காட்டிலே யிரு வி .......... ம் ......................
.............. கண்ட வித்தையடா காண்ட
முத்தே. —உள
முதக் காண்டம் ரண்டாங் காண்டம் முற்றும்.
தேவிசகாயம்—வெத்திவேல் துணை.
குரு பாதமே கெதி.

**காலம்**

இல்லை

**குறிப்பு**

பதிப்பாகாத சுவடி ''சாலத்திரட்டு என்ற மகால் சுவடி **எண்** 288 (1) 417 (a) 417 (b) 417(c) 418 (D) என்ற சுவடிகளிலிருந்து மாறுபட்டது.

---

வரிசை எண்: 1882 937-b

# அகத்தியர் பெருநூல் வைத்தியம் முதற்காண்டம் - 300

ஏடுகள்: 42. சுவடியின் நிலைமை: மிகச்சிதலம். பக்கத்திற்கு: 15 **வரிகள்.பொருள்:** மருத்துவம். அளவு: 30×3.5 செ.மீ. கி. எண்ணிக்கை: 3000. **எழுத்து:** தமிழ். ஆசிரியர்: அகத்தியர். முழுமை: முற்றுமுளது.

**தொடக்கம்**

ஆயிரத் திருநூற் முன்னூ
லாய்ந்து முதற்காண்ட சூக்ஷத்திரம்
.... ... ... .... .... ... .... .... .... ....
தாயெனக் குரைக்க யானும்
சாத்திய நூலு தானே. —1

**முடிவு**

உண்டு குருவுண்டு மருந்து முண்டு
உலகமுண்டு நன்மையுண்டு புதவியுண்டு
கண்டுபார் சிவனுண்டு பூசை யுண்டு
கருத்துண்டு வளியுண்டு விளியு முண்டு
.... ... .... .... .... .... ... .... ... ...

முற்றும்

**காலம்**

இல்லை.

**குறிப்பு**

மகால் சுவடி எண் 437 (a)ஐப் போன்றது, பதிப்பிக்கப்படாத சுவடி.

---

வரிசை எண்: 1883 சுவடி எண்: 937-c

# அகத்தியர் பெருநூல் வைத்தியம் 2-ம் காண்டம்-300

ஏடுகள்: 50. சுவடியின் நிலைமை: மிகச்சிதிலம். பக்கத்திற்கு: 7 வரிகள். பொருள்: மருத்துவம். அளவு: 30×5. செ.மீ. கி.எண்ணிக்கை: 2500. எழுத்து: தமிழ். ஆசிரியர்: அகத்தியர். முழுமை: முற்றற்றது.

**தொடக்கம்**

காண்டமென்ன நாகரசஞ் சொல்லக் கேளு
கடியகோ டகசாலை கொடுப்பை விளி
ஆண்டதொகு வேலிச்சா ரணையின் சாறும்
அப்பனே செருப்படியின் சாறும் கூட்டி

**முடிவு**

விரைந்தெழுந்த மூன்றெழுத்தின் தீட்சை பாரு
விளம்புவோம் வைத்திய காண்டத்தில் சொன்னோம்.
நிரைந்திருந்த சுத்தியடா அண்டபிண்டம்
நேர்ந்திருந்த சிவகளையே வெளியுமாச்சு

.... ... .... .... .... .... ... .... .... ... ....

... ... ... ... .... ... .... .... .... ... ... ...

தெட்சிணாமூர்த்தியின் பெருநூல்த் திரட்டின்
வகாரங்கொண்டது. முற்றும்.

**காலம்**

இல்லை

**குறிப்பு**

சுவடி எண் 936 (b)யின் தொடர்ச்சி மகால் சுவடி 437 (a) போன்றது.

வரிசை எண்: 1884 சுவடி எண்: 937-d

# அகத்தியர் பெருநூல் வைத்தியம் 3-ம் காண்டம்-300

ஏடுகள்: 40. சுவடியின் நிலைமை: மிகச்சிதிலம். பக்கத்திற்கு: 15 வரிகள். பொருள்: மருத்துவம் அளவு: 30×5 செ.மீ. கி. எண்ணிக்கை: 3000. எழுத்து: தமிழ். ஆசிரியர்: அகத்தியர் முழுமை: முற்றுமுளது.

**தொடக்கம்**

காரணமாம் ஞானவெளி கடந்து நின்ற
கற்பகமே விற்பனமே மவுன வாழ்வே
பூரணமே பஞ்சகர்தா யருபி யான
புண்ணியமே நிண்ணயமே பொருளே வேத

... ... .... .... ... ... ... ... ... .... ....

... .... ... .... ... ... .... .... .... .... ....

**முடிவு**

காண்டவளி முன்னே யல்லால் வேறே — சு
கருதவில்லை வேறொருத்தர் நூல்பாத் தேது
தூண்டவிளக் கெரியுமென்று முன்னோர் சொன்ன
சொல்படியே வித்தைவயித்திய போம் வாதம்
....... .... ... ... .... ... .... .... ... ....
முற்றும். பொதிகை சுவாமி துணை.

**காலம்**

இல்லை

**குறிப்பு**

இது சுவடி எண் 936 (c) யின் தொடர்ச்சியாகும். பதிப்பிக்கப்படவில்லை.

---

**வரிசை எண்:** 1885 **சுவடி எண்:** 937(e)

# அகத்தியர் பெருநூல் வைத்தியம் நாலாங் காண்டம்

ஏடுகள்: 50. சுவடியின் நிலைமை: மிகச்சிதிலம். பக்கத்திற்கு: 10 வரிகள். பொருள்: மருத்துவம். அளவு: 30×5 செ.மீ. கி. எண்ணிக்கை: 2500. எழுத்து: தமிழ். ஆசிரியர்: அகத்தியர். முழுமை: முற்றுமுளது.

**தொடக்கம்:**

முன்னுரைத்த காண்டவளி முத்தமிழ்க்கு மாந்திரிய
முன்னுரைத்த திங்கள்முட் டும்வெளியாய் — பன்னுரைத்த
குஞ்சரமே மூலக் குமார விநாயகனார்
கஞ்சமலர்ச் சேவடியே காப்பு.

**முடிவு**

ஆளுவாயாயிரத் திருநூற் றையு
மீளுவா ராரனே விடாதே வெளிதனின்
சூளுவார் சாபந் தொடருமே யுன்னை
கேளு நீ புராணமது கேள்பது முற்றே.
குருபரனாகிய வெத்திவேல் முருகா சாவனை சண்முகா
சடாக்ஷர வித்தே துணை. குருவே துணை,

**காலம்**

இல்லை:

**குறிப்பு**

மகால் சுவடி எண் 436 (D)யின் தொடர்ச்சி. பதிப்பிக்கப்பட வில்லை.

---

வரிசை எண்: 1886

சுவடி எண்: 938

# சுத்திக் கிரமம் - இதர சுத்தி முதலியன

ஏடுகள்: 72. சுவடியின் நிலைமை: சிதிலம். பக்கத்திற்கு: 5 வரிகள் பொருள்: மருந்துப் பொருள்களை தூய்மை படுத்தும் முறைகள் அளவு: 30×2.5 செ.மீ கி. எண்ணிக்கை: 2000. எழுத்து: தமிழ். ஆசிரியர்: பலர். முழுமை: முற்றற்றது.

**தொடக்கம்**

தெட்சிணா மூர்த்தி துணை
கந்தசாமி துணை

ரசம் — ய குறையாமல் கலத்திலே விட்டு
மஞ்சள் பொடியிலும், ஒட்டரையிலும்
ஒவ்வொன்றிலே மூன்று நாளிகையில் தனித்
தனியே மத்திச்சு ஊதிப் போடவும்.

**முடிவு**

சோர அஞ்சனம்

துத்தியிலை சட்டியில் கருக்கி ஆமணக்கெண்ணையிற் போட இரு காதம் ஓடும். கள்ளரைப் பிடிக்கலாம். சகல பிரவத்தகமும் தெரியும். வால சண்முகந் துணை.

வேலு மயிலுந் துணை.
கந்த சுவாமி துணை.
குருசாமி துணை.

**காலம்**

இல்லை

**குறிப்பு**

சரக்குகளைத் தூய்மையாக்கி மருந்து செய்யப் பயன்படுத்தும் முறைகளைப் பற்றி கூறுவது. பதிப்பாகவில்லை. திரட்டு நூல் எனலாம்.

---

வரிசை எண்: 1887

வரிசை எண்: 939

# வைத்தியத் திரட்டு

ஏடுகள் 149. சுவடியின் நிலைமை: மிகச் சிதிலம். பக்கத்திற்கு: 5 வரிகள். பொருள்: தொகுப்பு நூல். அளவு: 29.5×3 செ.மீ. கி. எண்ணிக்கை: 5000. எழுத்து: தமிழ். ஆசிரியர்: பலர். முழுமை. முற்றற்றது.

**தொடக்கம்**

வாசாதி லேகியம்

காணிலத்தில் கருமை ... ... ....ட்டு நில்லாது
கூடிய வாய்வுள்ள தெல்லா நின்ற தின்ன
மதனில்ப் பயித்திய வாய்பிதகனையுந்
துன்னுயர் சுவாச காசந் தீரும். துன்பந்தனை
யடக் குமாவலுடன் செய..... ....ந்து ஆடாதொடை

**முடிவு**

வேம்பு மாகாளிக் கிழங்கு சீந்தி நாயுருவி
சூரை நன்னாரி வெள்ளுள்ளி மஞ்சள் காட்டம்
அதிமதுரம் வெம்பாடல் சென்னகாடி பழம்
சாதிக்காய் திரிபாலை ஒரொன்று மூன்று
களஞ்சு கூட்டிப் பொடி பண்ணி நாளி

**காலம்**

இல்லை

**குறிப்பு**

மகால் சுவடி எண் 927ஐப் போன்றது.

---

வரிசை எண்: 1888 சுவடி எண்: 940

# அகத்தியர் வாகடச் சுருக்கம்

ஏடுகள்: 233. சுவடியின் நிலைமை: மிகச் சிதிலம். பக்கத்திற்கு: 5 வரிகள். பொருள்: மருந்து செய்முறைகள் அளவு: 26×3 செ.மீ. கி. எண்ணிக்கை: 3000. ஆசிரியர்: அகத்தியர். எழுத்து: தமிழ். முழுமை: முற்றற்றது.

**தொடக்கம்**

.........இணேசன் பாதம் பணிந்து முக்குணங்களா வாகடச் சுவடியெல்லாங் கை .........வகைதெ கு.........று........கம் விதியின் சூளா.........ந்திடும் நோய் கட்டெல்லாம் பொ... ... ... ... .... .... ... .... ... ....

**முடிவு**

சோமப்பா இந்த நூல்த் துகையே தென்றால்த்
துளாயிரத்து ஒன்றனவே சொல்லும் வேதம்
நாமப்பா உள்படி சொல்லி வைத்தோம்
நாதாக்களே சுடாசத்தால்ச் சூத்திரந்தான்
முத்தே (அளஅஎ)

அகத்திஷுபர பகவான் சூத்திர வாகடம் முகிந்தது முற்றும். குருபாதமே கெதி சொக்கலிங்கம் துணை.

**காலம்**

இல்லை

**குறிப்பு**

பாடல்களின் எண்ணிக்கை 901 என்று வருவதால் நூல் 901 பாடல்களை உடையது எனலாம். பதிப்பானதாகத் தெரிய வில்லை.

---

வரிசை எண்: 1889 சுவடி எண்: 941

# ரோமரிஷி ஜாலம் - 500

ஏடுகள்: 80. சுவடியின் நிலைமை: மிகச்சிதிலம் பக்கத்திற்கு: 5 வரிகள். பொருள்: தந்திர வித்தைகள் உள்ள நூல் (MAGIC). அளவு: 21×3.5 செ.மீ. கி.எண்ணிக்கை: 1500 எழுத்து: தமிழ். ஆசிரியர்: ரோமரிஷி. முழுமை: முற்றற்றது.

**தொடக்கம்**

ஆதியாய் நிரைந்திருக்குஞ் சோதி பாதம்
அரனோடு உமையாளும் நிறுவாணி பாதஞ்
சோதியாம் யென் குருவாம் நந்திபாதஞ்
சுருக்காக ரோமனுந்தான் சூட்டுவேனே —க

**முடிவு**

நீட்டினாலுன் குலமு நீசனாகும்
நிற்மயமாய் நீசனாய் நிரைந்து போவாய்
பூட்டி யிட்சிக் கெல்லா மொளிந்து போகும்
புத்திரனே குருடாகப் போவார்தானே —சகூசா

**காலம்**

இல்லை

**குறிப்பு**

தந்திரவித்தைகளைச் செய்யும் முறைகளைக் கூறும் நூல். பதிப்பானதாகத் தெரியவில்லை.

---

வரிசை எண்: 1890 சுவடி எண்: 942

# அகத்தியர் பூரண சூத்திரம்-216

ஏடுகள்: 66 சுவடியின் நிலைமை: நல்லநிலை. பக்கத்திற்கு: 6 வரிகள். பொருள்: வாத முறைகள், முப்பு, கற்பம், என்பன கலந்தவை. அளவு: 28×3 செ.மீ. கி. எண்ணிக்கை: 1500. எழுத்து: தமிழ். ஆசிரியர்: அகத்தியர். முழுமை: முற்றற்றது.

### தொடக்கம்

ஒன்றான பூரணமு மாறாதார
முரைப்பதற்கு மேலாறுந் தொண்ணூற்றாறும்
பண்றான தீட்சைபதி னொன்றுரெட்டி
பத்துடனே முப்பத்து ரெண்டு தீட்சை
... .... .... ... ... .... .... .... .... ..
... ... ... ... .... .... ... ... ... .... —க

### முடிவு

ஆமிந்த யிருநூற்றுப் பதினாறுக்குள் ளடக்கிவைத்த
பொருள்களெல்லாம் வெளியாய்ச் சொன்னேன்
ஓமிந்த வுலகத்தின்னூல் கிட்டில் உலகத்தில்
சித்திகளுண்டாய் போச்சு.
.... ... ... .... ... .... ... ... ... ... ... .... உகசு
அகத்தீஷ்பரர் எழுதிய பூரண சூத்திரம் எழுதி
நிறைந்தது. முற்றும்.

### காலம்

பராபர வருடம் மார்களி மீஉயள யேகாதெசி நட்செத்திரத்தில் இந்த பூரண சூத்திரம் எழுதினேன். அப்பகரை தொட்டியப்பட்டியிலிருக்கு குப்பணடுது கறுப்பணன் கையெழுத்து. தேவிச் சுகாயம். குருபாதமே கெதியாக வேண்டியது. திருமேணியம் மன் துணை. கொசு குண்டுலிருக்கும் ஆதிய வண்ணநாடான் மகன் முத்துமாரிபேடு எழுதி முகிந்தது. முற்றும், நந்தி அகத்தியற், போகர், அமுகண்ணாற்கமலற் சுந்தற மூலர் பரம, புண்ணாக்கினாற் சொல் பிரம்மர் வந்தயிடையற் கருஆறு கொங்கணற்பாத மச்சர்சந்ததம் சட்டரிஷிரோம. கோரக்கர் தாள் துணையே.

### குறிப்பு

இந்நூல், பல பதிப்புகளைக் கண்டதாகும். மகால் சுவடி எண் 288 (F) 324 (G) 376 (D) இவற்றை ஒத்தது.

---

வரிசை எண்: 1891

சுவடி எண்: 943

## கருவூரார் பலதிரட்டு வாகடம்

ஏடுகள்: 122. சுவடியின் நிலைமை: நல்லநிலை. பக்கத்திற்கு: 7 வரிகள். பொருள்: மருந்து செய் முறைகள். அளவு: 21.5×3.5 செ.மீ. கி. எண்ணிக்கை: 3000. எழுத்து: தமிழ். ஆசிரியர்: கருவூரார். முழுமை: முற்றுமுளது.

**தொடக்கம்**

பரங்கிப் புண்ணாக்குச் சீனிக்கல்லை ... .... .... .... ....
இடுறாப் போலே பொ ... ... செயிது ... .... ... ...
பசுவின் வெண்ணெயிட்டு யாதொருபுண்
சிரங்குக்கும், மருந்து.—கருஞ்சீரகம்,
ஈரவெங்காயம், கருணொச்சி பிள்ளைத் தாணிகள்

**முடிவு**

ஓமம் கால்படி, நனைத்துக் கருவி அரிசி மாப்படக்களுவி அரைத்து பசுவின் நெய்யில் களிக்கிண்டி குடுக்கவும். நிசங்கயி கண்டது. குருவே துணை.

**காலம்**

இல்லை

**குறிப்பு**

உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனம் வெளியிட்ட ''கருவூரார் பல திரட்டு'' என்ற பெயரில் உள்ள நூலிலிருந்து இச் சுவடி வேறானது. பதிப்பாகவில்லை.

வரிசை எண்: 1892 சுவடி எண்; 944

# சரசாத்திரம்

ஏடுகள்: 36. சுவடியின் நிலைமை: ஓரங்கள் சிதிலம். பக்கத்திற்கு: 7 வரிகள். பொருள்: நாடி நூல். அளவு: 40×3 செ.மீ. கி. எண்ணிக்கை 1500. எழுத்து; தமிழ் ஆசிரியர்: அறிய இயலவில்லை முழுமை: முற்றுமுளது.

**தொடக்கம்**

காப்பு

ஐந்து கரத்தெந்தை ஐம்பொற்றாள் பணிந்தால்
சிந்தையுறு மெஞ்ஞானஞ் சித்திக்கும்

நூல்

உமைமாதுக் கீச னுரைத்தாற் நூலின்
னமையாப் பொருளை யறியச் — சமையாப்
புலிமடந்தை பூமடந்தை பொன்மடந்தை யஞ்சொற்
கவிமடந்தை யிக்கதைக் கோர் காப்பு. —க.

**முடிவு**

கவிசெய்தான் செப்பரிய தமிழரசு சிங்கன் மிக்க
செகமுனிவன் சூத்திரத்திற் சேர்த்துச் சொன்னேன்
தப்பிலரு பத்தொன்பதுங் கற்றவல்லோர்
சகத்தில் வருஞ் சந்திரனில்த் தாமிக்கோ
வாலை பராசத்தி. —சூயசூ

**காலம்**

சித்திரபானு ஷ ஆடி மீ ருஉ அமாவாசை வியாளக்கிழமை புணர்பூச நட்செத்திரமும் பெற்ற சுப தினத்தின் தலையனாடு பொருனேரில் பேசுமாமலை வால குருனாதன் கடாட்சத்தில் கோளிஞ்சி வாடியில் தொப்பம்பட்டி கணக்கப்பிள்ளை, பெருமாள்பிள்ளை குமாரன் சாமணபிள்ளையெழுதி உபதேசித்த சரனூல் சாத்திரம் முற்றும் வால குருநாதன் துணை பரதேவதை கிருபை செய்யவும்.

**குறிப்பு:**

மூச்சுப் பயிற்சியை சரம் என்பார்கள். ''தமிழரசு சிங்கன்'' என்பவர் செய்தார் என்றும் இத்துடன் செக முனிவரின் சூத்திரம் சேர்க்கப் பட்டதாகவும் அறிய முடிகிறது. பதிப்பாகாத சுவடி.

---

வரிசை எண்: 1893 சுவடி எண்: 945

# சட்டை முனிகாய கற்பம்-100

ஏடுகள்: 19. சுவடியின் நிலைமை: நல்லநிலை. பக்கத்திற்கு: 7 வரிகள். பொருள்: மூலிகை மருந்துவம். அளவு: 40×3 செ.மீ. கி. எண்ணிக்கை: 1000. எழுத்து: தமிழ். ஆசிரியர்: சட்டைமுனி. முழுமை: முற்றற்றது.

**தொடக்கம்**

சொல்லுகுறேன் வாருதி போல கபநீர் வீழுஞ்
சோதினைச்கு உண்ணாக்கின் குரியைக் கேளு
மல்லுகுறேன் சுழிமுனை மூன்றாகுங்கேது
சங்கு சக்கரம் போல நிற்கு மைந்தனே
அல்லுரேநிதின் பேறோ ரவிமதி தானென்பார்
ஆச்சரிய மிடை பின்னாயன் தராகுங் —க

**முடிவு**

சீரப்பாவாத சித்தி ஞானசித்திசிகத்திலே
சிகத்திலே ஒழித்திட்டாரே
பராசத்தி துணை —எக

**காலம்**

சித்திரபானு ஷ ஆனிமீ த்தில் கோளிஞ்சிவாடி சாமண்பிள்ளைக்கு பேசுமாமலை வாலையானந்த கடாசத்தில் யெழுதினது. முத்தும். குருதுணையாகவும்.

**குறிப்பு**

''சட்டை முனிகாய கற்பம் 100'' பதிப்பான நூல். இச்சுவடி 3 ஆம் பாடலுடன் துவங்குகின்றது. மூலிகை கள்பற்றிய செய்திகள் அடங்கியது.

---

வரிசை எண்: 1894 சுவடி எண்: 946

# அகத்தியர் பூரண சூத்திரம்-216

ஏடுகள்: 45. சுவடியின் நிலைமை: நல்லநிலை. பக்கத்திற்கு: 7 வரிகள். பொருள்: உடல் தத்துவம், தீட்சை போன்றவைகள் உள்ளன. அளவு: 21×4 செ.மீ. கி.எண்ணிக்கை: 2000. எழுத்து: தமிழ். ஆசிரியர்: அகத்தியர். முழுமை: முற்றற்றது.

**தொடக்கம்**

கார்செறி மெய்யன் வன்மை
கடவுளுங் காணாப்பாதம்
வோர்பொரு ளண்டம் தன்பைப்
பூரண நாலிலோதத்
.... ... .... ... ... .... ... ... ....
... ... .... .... ... ... .... க

**முடிவு**

தாமிந்த சாத்திரத்தைக் கெளியா தீந்தால்
தலைதெறித்துப் போகுமடா சத்தியஞ் சொன்னேன்
நாமிந்தப்படி சொன்னோம் யோசிக் சீவாய்
நலமான பூரன சூத்திரந்தான் முற்றே.
வாலை சத்தி துணை. — உக சு

**காலம்**

இல்லை

**குறிப்பு**

கொளிஞ்சி வாடியில் தொப்பம்பட்டி கணக்கப்பிள்ளை பெருமாள் பிள்ளை குமாரன் சாமண் பிள்ளை ... ... ... பேசும் மாமலைச் சார்வில் வாலையானந்த கடாட்சத்தால் பூரண சூத்திரம்.

முற்றும்.

இந்நூல்பதிப்பு செய்யப்பட்டது. இதில் தத்துவம், ஆதாரம், தீட்சை, இரசமணி, காந்தப் பாத்திரம், கற்பம் உண்ணப் பத்தியம், கட்டு, மணி சுன்னம், தியானம், தைலம்' அஞ்சனம் வைப்பு என்ற தலைப்புகள் உள்ளன.

வரிசை எண்: 1895 சுவடி எண்: 947

# இராமதேவர் சாத்திரம் - 100

ஏடுகள்: 114. சுவடியின் நிலைமை: சிதிலம். பக்கத்திற்கு: 11 வரிகள். பொருள்: தத்துவம். அளவு: 20×4.5 செ.மீ. கி. எண்ணிக்கை: 3000. எழுத்து: தமிழ். ஆசிரியர்: இராமதேவர். முழுமை: முற்றற்றது.

**தொடக்கம்**

அண்டமெனுங் கேசரியாள் பாதங்காப்பு
அருள்பெருகும் பூரணத்தி னறிவே காப்பு
குண்டமெனுங் குண்டலியின் குறியே காப்பு
குருவான பராபரத்தின் குணமே காப்பு. —க

**முடிவு**

பூசைபண்ணப் பூசைதனை அறிந்து கொண்டு
பூரணமாய் வாசிதனை மூலத்தேத்தி
நேசமுடன் ரேசக பூரசமும் பண்ணி
நின்வாக்கும்பகத்தில் பிசித்தாக்கால்
பாசமுள்ள மதிசெயந்துாவி
.... ... .... .... ... .... ... ... ... ...

— எகூயகூ

**காலம்**

இல்லை

**குறிப்பு**

மகால் சுவடி எண் 468, 698 (m) போன்றது. இது ''கற்பம் ஆயிரம் என்ற வைத்திய காவியம் என்றும் வழங்கப்படும் பதிப்பான நூல் முழுமையான சுவடி.

---

வரிசை எண்: 1896 சுவடி எண்: 948

## தெட்சிணாமூர்த்திக் கலைக்கியானம் - 1200

ஏடுகள்: 164. சுவடியின் நிலைமை: மிகச்சிதிலம். பக்கத்திற்கு: 8 வரிகள். பொருள்: மைவகைகள், கட்டுகள் 64 வகை சித்திகள் பற்றியது அளவு: 40×3 செ.மீ. கி. எண்ணிக்கை: 3000. எழுத்து: தமிழ். ஆசிரியர்: தெட்சிணாமூர்த்தி முழுமை: முற்றுமுளது.

**தொடக்கம்**

பூரணத்தைப் பற்றிய ... .... ... .... லொன்றி
புகளான மூவரை மூவரையில்க்
காரணத்தைக் கண்ணாலே கருந் ... .... ... ...
முக்கோண
வாரணத்தை தொடருமே .... .. .... ... ...
... .... .... ... ... .... .... .... ... ....

**முடிவு**

அறிவாக மனதடங்கி மவுனமாக
அப்பனே னூலெடுத்துப்பாருபாரு
குரியான குருபதத்தில் குளமாய் நின்னா .... ....
குணமில்லா தங்களிடங் கூடவேண்டா
... ... .... ... ... ... .... .... ... .... ... ...
.... ... ... ... .... ... .... ... .... .... ...

— கூளகூயகூ

**காலம்**

இல்லை

**குறிப்பு**

இது அகத்தியர் ''அமுதக்கலைஞானம் 1200'' என்றும் அழைக்கப்படும். பதிப்பாகி வெளிவந்துள்ளது.

---

வரிசை எண்: 1897 சுவடி எண்: 949

# இராமதேவர் பட்சணி - 50

ஏடுகள்: 12. சுவடியின் நிலைமை: சிதிலம். பக்கத்திற்கு; 9 வரிகள். பொருள்: மருந்து செய்முறைகள், தத்துவம். அளவு; 40×3 செ.மீ. கி. எண்ணிக்கை: 1000. எழுத்து; தமிழ். ஆசிரியர்; இராமதேவர். முழுமை: முற்றற்றது.

**தொடக்கம்**

ஆதியிலே வாலை மனோன் மணிதான் கூவி
அழைத்திட்டு ஆதியந்த மறியச் சொன்னன்
சோதியிலே கருவுருவை வுன்னிப்பாரு
சொல்ல வொண்ணா வதிசயங்கள் தானேதோத்தும்.
... .... ... ... ... ... .... ... ... ... ... ...
.... ... ... .... .... ... .... ... .... ... ... —க

**முடிவு**

மணியான நவமணிசைத் தகடாய்த் தட்டி
வளமான தயிலமதை மேலே பூசி
பணியான அகுலில் வைத்து புடத்தைப் போடு
பற்பமாய்ச் செந்தூரமாகும் பாரு
.... .... .... .... .... ... .... ... .... ... ...
... ... ... ... .... ... ... .... ... ... ... —ரு௰

ராமதேவர் பட்சணி முத்தும்.

**காலம்;**

இல்லை

**குறிப்பு:**

இது ''இராமதேவரின் அட்டாங்கப் பட்சணி எனப்படும். தத்துவம், மருந்து செய்முறைகள் உள்ளது. மகால் 1991ஆம் ஆண்டு பதிப்பித்து வெளியிட்டுள்ளது.

---

வரிசை எண்: 1898 சுவடி எண்: 950

# அகத்தியர் வைத்தியம் - 205

ஏடுகள்: 110. சுவடியின் நிலைமை: மிகச்சிதிலம். பக்கத்திற்கு: 7 வரிகள். மருந்து செய்முறைகள். அளவு: 22×3 செ.மீ. கி. எண்ணிக்கை: 3000. எழுத்து: தமிழ். ஆசிரியர்: அகத்தியர். முழுமை: முற்றற்றது.

## தொடக்கம்

பூரணமாம் மும்மூலம் பொரியிற் சூடாம்.
புகையெழும்பி மேகமதாய்ச் சிரசில் சூடாம்
காரணமாய்நீர்க் கலந்து கண்ணில் நோயாங்
கனலெழுந்த வாயுவினால் சூலை ரோக
... ... .... ... .... ... ... .... ... ....
... .... ... ... .... .... .... ... .... —க

## முடிவு

ஈய்ந்ததினாற் றோசமில்லை கொடுக்க வாங்கே
சரின்ஞூவிற் சொன்னதெல்லாஞ் செய்வானானால்
ஆய்ந்ததினா லென்னபலன் பார்த்தா லென்ன
அப்பனே குருமுடிக்க அறியா மாண்பர்
... .... .... ... ... .... ... .... ... .... ... .... உளரு

## காலம்

இல்லை

## குறிப்பு

முதல் 3 ஏடுகளில் அகரவரிசை அட்டவணைப்படுத்திக் கூறப்பட்டுள்ளது. 647 (G) 317 (K) சிவடி எண் 580 (D) யின் முதல் பாடல், அச் சுவடியின் முதல் பாடன் ஒத்துள்ள. ''அகத்தியர் வைத்திய பூரணம் 205'' என்ற பெயரில் 1872இல் நூல் வெளியாகி உள்ளது. இரண்டும் ஒன்றா? என்பது அறிய முடியவில்லை.